# மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியும் தேச விடுதலையும்

காரின் கெவோர்க்கியான்

1917 1977

# மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியும் தேச விடுதலையும்

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியும், ஆசிய, ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க மக்களின் தேச விடுதலை இயக்கமும் பற்றிய சர்வதேச விஞ்ஞான மாநாடு- பாகூ, மே 1977.

*தொகுப்பு :*

காரின் கெவோர்க்கியான்

சோவியத் நாடு பிரசுரங்கள்

சென்னை, 1977.

# The Great October Socialist Revolution and National Liberation

*Compiled by KAREN GEVORKIAN*

**Tamil** [**1977**]

Price : 30 PAISE

விலை : 30 காசு

*Printed by L. V. SOROKIN and Published by him at Soviet Nadu Office, 44, Thyagaraya Road, Madras-600017, for the Information Department of the USSR Embassy in India. Printed at New Century Printers, Madras-600 098.*

# பொருளடக்கம்

பக்கம்

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் தேச விடுதலை இயக்கமும் பற்றிய சர்வதேச விஞ்ஞான மாநாட்டில் பங்கெடுத்துக்கொண்டிருப்போர்க்கு ... 2

20-ம் நூற்றுண்டின் மாபெரும் நிகழ்ச்சி
— ஜி. ஏ. அலியேவ் ... 4

நவீன காலனி ஆதிக்கத் திட்டம் வெகு விரைவில் தோல்வியுறும்
—பி. என். பெதோசிவ் ... 27

சுதந்திர வீரர்களுடனுன ஒருமைப்பாட்டின் கொத்தளம்
— லூயி கோர்வலான் ... 30

ஒரு புதுவகையான வல்லரசு
— டாக்டர் காசன் ரிபாய் ... 34

ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் உண்மையான கூட்டாளிகள்
— பூக் வாங் குவாங் ... 37

மகத்தான அக்டோபர் புரட்சியின் புதிய வீச்சுக்கள்
—பேராசிரியர் ஜாபர் இமாம் ... 40

அக்டோபர் புரட்சியின் செல்வாக்கு வெல்லற்கரியது
—லூயி கார்லோஸ் பிரெஸ்டஸ் ... 42

அனைத்து நாட்டு மக்களின் விழா
—செவரோ அகுய்ரே தெல் கிரிஸ்டோ ... 44

மக்களது படைப்பாற்றலின் விடுதலை

—யூசெப் எல். செபாய் ... 47

மனிதகுல வரலாற்றில் திரும்புமுனை

—ஜஸ்ஸிர் ராபோ ... 50

சமாதானத்தின், மக்களது இன்ப வாழ்வின் கோட்டை

—ஆல்பிரடோ வரேலா ... 52

மக்களின் வெற்றிக்கு இன்றியமையாத தேவை

—பியோ ஆல்பர்ட்டோ லோபெஸ் ... 55

அக்டோபர் புரட்சியின் வெல்லற்கரிய கருத்துக்கள்

—ஜார்ஜ் சிலுன்டிகா ... 57

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிப் பொதுச் செயலாளர் எல். ஐ. பிரெஷ்னேவுக்கு சர்வ தேச விஞ்ஞான மாநாடு அனுப்பிய செய்தியிலிருந்து ... 59

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியும் தேச விடுதலை இயக்கமும்

—பீட்டர் கெனமன் ... 61

அக்டோபர் புரட்சியும் ஆசியாவில் அதன் பிரதிபலிப்பும்

— டி. பி. சுபசிங்கே ... 70

இந்த சர்வதேச விஞ்ஞான மாநாடு பாகூவில் 1977 மே மாதம் சோவியத் ஆசிய-ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டுக் கமிட்டியால் சோவியத் விஞ்ஞானப் பேரவை, அஜர்பெய்ஜான் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் கூட்டப்பட்டது. உலகின் 70 நாடுகளிலிருந்து கம்யூனிஸ்டு, தொழிலாளர், தேச விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளும், சிறப்புமிக்க அரசியல் பொது வாழ்வுப் பிரமுகர்களும் மாநாட்டில் பங்கு கொண்டனர். பிரதான சொற்பொழிவும் மற்றும் விவாதத்தின் பொதுப் போக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இதர உரைகளும், தஸ்தாவேஜுகளும் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

# மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் தேச விடுதலை இயக்கமும் பற்றிய சர்வதேச விஞ்ஞான மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டிருப்போர்க்கு

புரட்சிப் பாரம்பரியங்களுக்கும் உழைப்புச் சாதனைகளுக்கும் புகழ் மிகு நகரமும், லெனினது முன்முயற்சியின் பேரில் கிழக்கத்திய மக்களின் முதலாவது காங்கிரஸ் நடைபெற்ற நகரமுமான பாகூவில் கூட்டப்பட்டுள்ள சர்வ தேச விஞ்ஞான மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டுள்ளோர்க்கு என் இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியானது உலகுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சி என்பதனை உலகெங்கு முள்ள அனைத்து உழைப்பாளி மக்களும் மேன்மேலும் தெள்ளத் தெளி வாக உணர்ந்து வருகின்றனர். அது மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமைக்கு முடிவு கட்டியது; சமத்துவ தேசங்கள் கொண்ட ஒரு சோஷலிச சமுதாயம் தோற்றுவிக்கப்படுவதைப் பிரகடனம் செய்தது. புரட்சிகர மாற்றங்கள் நிறைந்த ஒரு சகாப்தத்தை அக்டோபர் புரட்சி தொடங்கி வைத்தது; இதன் மூலம் சுதந்திரம், முன்னேற்றம், சமாதானம், ஜனநாயகம், சோஷலிசம் ஆகியவற்றுக்கான மனித குலத்தின் போராட்டத்திற்குப் பிரதான பாதையைத் திறந்துவிட்டது.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி தேச விடுதலை இயக்கங்களிடம் ஒரு சக்தி வாய்ந்த பிரதிபலிப்பை ஏற்படுத்திற்று. சர்வ தேசத் தொழிலாளி வர்க்கமும், காலனி நாடுகளையும் சார்பு நாடுகளையும் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்களும் நடத்திய போராட்டத்தின் வலிமையால் ஏகாதிபத்தியத்தின் காலனி அமைப்பு சிதைந்தது; டஜன்கணக்கான புதிய அரசுகள் உதித்தெழுந்தன; இவை சுயேட்சையான வளர்ச்சிப் பாதையை மேற்கொண்டன. இந்த நாடுகள் ஒருபுறம் தமது சொந்த அரசு அந்தஸ்தை உருவாக்குவது சம்பந்தப்பட்ட சிரமங்களைச் சமாளிக்கின்றன, உள்நாட்டு வெளிநாட்டுப் பிற்போக்குச் சக்திகளுக்குப் பதிலடி தருகின்றன; இன்னொருபுறம் தமது தேசிய சுதந்திரத்தைக் கட்டி

வளர்க்கின்றன, சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்களைக் கொண்டு வருகின்றன.. நவீன காலனி ஆதிக்க முறைகள் மூலம் தம்மைச் சுரண்டவும், தமது பொருளாதார அரசியல் வாழ்க்கையில் ஆதிக்கம் வகிக்கவும் தொடர்ந்து முயன்றுவரும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இளம் அரசுகள் என்றையும்விட உறுதியாகப் போராடி வருகின்றன. சமத்துவமுள்ள பொருளாதார உறவுகளை நிறுவுவதற்கான நடவடிக்கையை அவை தீவிரப்படுத்தி வருகின்றன. புதிதாக விடுதலையடைந்த பல நாடுகள் தமது உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை சோஷலிச திசைவழியில் செலுத்துவதன் அடிப்படையில், வெகுஜனங்களின் நலன்களை முன்னிட்டு, பிற்பட்ட சமூக-பொருளாதார உறவுகளை அடிப் படையிலேயே புனரமைக்கும் பணியை, தற்போது முன்னிலும் வலுவடைந்துள்ள புரட்சி-ஜனநாயக சக்திகளின் தலைமையில் மேற்கொண்டுள்ளன. உலக சமாதான லட்சியத்திற்கும், சர்வதேசப் பதற்ற நிலைத் தணிவுக்கும் இந்த நாடுகள் ஆற்றும் பங்கு அதிகரித்து வருகிறது. சமாதானம், மக்களின் பந்தோபஸ்து, படைக் குறைப்பு, தேசிய சுதந்திரம், ஜனநாயகம், சமூக முன்னேற்றம், சோஷலிசம் ஆகியவை சம்பந்தப்பட்ட கருத்துகள் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் மிக ஆழமாக வேரூன்றி வருகின்றன.

கம்யூனிச சமுதாய நிர்மாணத்தில் அற்புத சாதனைகள் புரிந்தும், சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி 25வது காங்கிரசின் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானங்களை நடைமுறையில் செயல்படுத்தியும் சோவியத் மக்கள் மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் 60-வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்றனர்.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சிக் கருத்துகள் பற்றியும், ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த மக்களின் தேச விடுதலை இயக்கத்தில் அவை ஏற்படுத்திய பிரதிபலிப்பு பற்றியும் அளிக்கப்படும் விஞ்ஞானரீதியான விளக்கம் சுரண்டலிலிருந்தும், நவீன காலனி ஆதிக்க அடிமைத்தனத்திலிருந்தும், பல்வேறு உருவத்திலும் வடிவத்திலும் உள்ள வருண இனப் பாகுபாட்டிலிருந்தும் மக்கள் சமூக, தேசிய விடுதலை பெறுவதை நடைமுறையில் முன்னேற்றச் செய்யும் என்று திடமாக நம்புகிறேன்.

இந்த மாநாட்டுப் பிரதிநிதிகளின் பணி ஆக்கரீதியான பலன்களை உண்டுபண்ணும் என்று இதய பூர்வமாக நம்புகிறேன்.

**எல். பிரெஷ்னேவ்,**

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி
மத்தியக் கமிட்டிப் பொதுச்செயலாளர்.

# 20 ஆம் நூற்றாண்டின் மாபெரும் நிகழ்ச்சி

**ஜி. ஏ. அலியேவ்,**
சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி அரசியல் குழுவின் பரீட்சார்த்த உறுப்பினர்.
அஜர்பைஜான் கட்சியின் முதற் செயலாளர்.

உலக வரலாற்று ஏடுகளில் ஏராளமான முக்கிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன; எத்தனை எத்தனையோ சிறப்பு மிக்க மனிதர்களின் பெயர்கள் காணக் கிடக்கின்றன. ஆனால் அக்டோபர் புரட்சி உலகின் பல்வேறு மக்களது எதிர்காலங்கள் மீது பதித்த முத்திரையின் காரணமாக, அது உலக வரலாற்றில் நேர் நிகரற்று விளங்குகிறது. விளதீமிர் இலியிச் லெனினது பெயரைவிட மகோன்னதமான ஒரு பெயரை வரலாறு அறிந்ததில்லை. அவர் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவகர்; அக்டோபர் புரட்சியின் ஆதர்ஷ புருஷர்; அதன் அமைப்பாளர்; உலகின் முதலாவது சோஷலிச அரசின் தந்தை; ரஷ்யத் தொழிலாளி வர்க்கத்தின், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் தலைவர்; அற்புத சிந்தனையாளர்; புரட்சி வீரர்.

அக்டோபர் புரட்சியின் 60ஆம் ஆண்டு விழா ஏகக் குடும்பம் போன்ற சோவியத் மக்களுக்கு, நமது அயல் நாட்டு நண்பர்களுக்கு, உலகிலுள்ள நேர்மை உள்ளம் படைத்த அனைத்து மக்களுக்கும் ஒரு தலை சிறந்த விழா. இது நம் காலத்துப் புரட்சி சக்திகளின் ஒரு மதிப்பாய்வாக விளங்குகிறது.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியைச் சிறப்பிக்க நடைபெற்றுவரும் விழா நிகழ்ச்சிகளில் இந்த சர்வதேச விஞ்ஞான மாநாடு முக்கிய இடம் வகிக்கிறது. நம் காலத்தின் தலைசிறந்த அரசியல்வாதியும், ராஜிய நிபுணரும், மாபெரும் லெனினது லட்சியத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி வருபவரும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சமாதானத்திற்காகவும் ஜனநாயகத்திற்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் உறுதியாகப் போராடி வருபவருமான லியோனித் இலியிச் பிரெஷ்னேவ் இம் மாநாட்டில் பங்கேற்றிருப்போர்க்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியி

-லிருந்து இதன் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்ளலாம். இன்றைய தேசிய ஜனநாயகப் புரட்சிகளின் விடுதலைப் பணியையும், சமூக முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதில் அவற்றின் பங்கையும் பற்றிய ஒரு மேலான மதிப்பீடு இந்த வாழ்த்துச் செய்தியில் அடங்கியுள்ளது. போராடும் மக்களின் பக்கம் ஸ்திரமாக, உறுதியாக நிற்கும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின், சோவியத் அரசின் கோட்பாட்டு ரீதியான நிலையையும் வாழ்த்துச் செய்தி பிரதிபலிக்கிறது.

* * *

ரஷ்யாவில் 1917 அக்டோபரில் சாதிக்கப்பட்ட சோஷலிசப் புரட்சியை வரலாற்றில் முதலாவது, மிகப் பெரிய, வெற்றிகரமான பாட்டாளி வர்க்கப் புரட்சி எனலாம். இது மனிதகுலம் முழுவதன் வளர்ச்சிப் போக்கை அடிப்படையாகவே மாற்றிய 20-ம் நூற்றாண்டின் பிரதான நிகழ்ச்சி ஆகும். அக்டோபர் புரட்சியானது உலக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை— தனியார் உடைமை, ஒடுக்குமுறை, சுரண்டல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த சமூக அமைப்பு சிதையுண்ட சகாப்தத்தை, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் சகாப்தத்தை, சமூக வாழ்க்கையின் ஒப்புயர்வற்ற அமைப்பான சோஷலிசம், கம்யூனிசத்தின் மேன்மையை நிலைநாட்டும் சகாப்தத்தை— தொடங்கி வைத்தது. மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றியடைந்ததன் பயனாய் உலகின் முதலாவது சோஷலிச அரசு பிறந்தது. பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்களான மார்க்சும், எங்கெல்சும், லெனினும் தொலைநோக்குடன் கூறியது போல, மனிதகுலம் பன்னூற்றாண்டு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து அதன் மெய்யான, உண்மையான வரலாற்றுக் காலத்துக்கு மாறிச் செல்லத் தொடங்கியுள்ளது.

எதிர்ப் புரட்சிக்கும் அந்நியத் தலையீட்டாளர்களுக்கும் எதிரான கடும் போராட்டத்துக்கு இடையே புதிய சமுதாயம் உதயமாயிற்று; சோவியத் அரசு வளர்ந்து வலுப்பெற்றது. இளம் அரசு உள்நாட்டு, வெளி நாட்டுப் பிற்போக்கின் மூர்க்கமான ஆயுதந்தாங்கிய எதிர்ப்பையும், அரசியல், சித்தாந்த எதிர்ப்பையும் சமாளிக்க வேண்டியிருந்தது. ஆனால் எத்தனையோ இக்கட்டுகள் இருந்தபோதிலும், கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் சோவியத் மக்கள்தான் உலகிலேயே முதன் முதலில் ஒரு வளர்ச்சி அடைந்த சோஷலிசத்தைக் கட்டினார்கள்; இதன் மூலம் அவர்கள் சோஷலிச நிர்மாணத்தின் மிக முக்கியமான, மிக சிக்கலான, ஆக்க பூர்வமான பணியை வெற்றிகரமாக நிறைவேற்றினார்கள்.

அக்டோபர் புரட்சியின் நாடு தனது அறுபது ஆண்டுக்கால வாழ்வில், தேசப் பொருளாதாரத்தின் ஒவ்வொரு பிரிவிலும், அரசாங்க,

அரசியல், சமூக, கலாசார வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் பிரம்மாண்டமான வெற்றிகளை ஈட்டியுள்ளது. புரட்சிக்கு முந்திய காலத்துடன் ஒப்பிடும்போது தேசிய வருமானம் 65 மடங்கு அதிகரித்திருக்கிறது. உலகத் தொழில் துறைப் பொருள் உற்பத்தியில் இப்போது சோவியத் யூனியனின் பங்கு இருபது சத விகிதமாக இருக்கிறது; புரட்சிக்கு முந்தைய ரஷ்யாவின் பங்கு நான்கு சத விகிதத்துக்குச் சற்று அதிகமாக மட்டுமே இருந்தது. இந்தப் புள்ளி விவரங்கள் எதைக் காட்டுகின்றன? உயர்ந்த தொழில் நுட்பத் தரம் கொண்ட நவீன தொழில் கிளைகள் அடங்கிய ஒரு சக்தி வாய்ந்த சோஷலிசத் தொழில் துறையையும், பெருவீத எந்திரமயமாக்கப்பட்ட விவசாயத்தையும் சோவியத் யூனியன் பெற்றிருப்பதையும், விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் துரிதமாக முன்னேறி வருவதையும், சோவியத் மக்களின் பொருளாயத சுபிட்சமும் கலாசாரத் தரங்களும் இடையருது வளர்ந்து வருவதையும் இந்தப் புள்ளி விவரங்கள் புலப்படுத்துகின்றன.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி நமது புவிக்கோள் முழுவதிலும் அளப்பரும் புரட்சி செல்வாக்கை வகித்து வந்துள்ளது. அது வரலாற்று இயக்க நிகழ்வின் ஒரு சக்தி வாய்ந்த தூண்டுவிசையாகப் பரிணமித்தது. உலகம் இரண்டு சமூக அமைப்புகளாகப் பிரிந்துள்ளது: சோஷலிசம் ஒளிமயமான எதிர்காலம் நோக்கி வீறு நடை போடுகிறது; முதலாளித்துவம் தனது வீழ்ச்சிக் கட்டத்தில் அடியெடுத்து வைத்துள்ளது. அக்டோபர் புரட்சியின் அனுபவம் புரட்சிப் போராட்டத்தின் தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் ஒரு வற்றுத வரையாத கருவூலமாக விளங்குகிறது.

அக்டோபர் புரட்சியின் சர்வதேச முக்கியத்துவத்தை லெனின் விளக்கிக் கூறும்போது, அதன் இரண்டு முக்கியமான அம்சங்களை சுட்டிக் காட்டினர். முதலாவதாக, அவர் அதன் செல்வாக்கை அச் சொல்லின் பரந்த அர்த்தத்தில் வலியுறுத்திக் கூறினர்: "... நமது புரட்சியின் அடிப்படையான அம்சங்களில் சில மட்டுமன்றி எல்லாமும், அதே போல் அதன் துணை அம்சங்களில் பலவும் சகல நாடுகளிலும் அது பிரதிபலிப்பை ஏற்படுத்தியுள்ளது என்ற பொருளில் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.'' இரண்டாவதாக, லெனின் அதன் செல்வாக்கு பற்றி அச் சொல்லின் குறுகிய அர்த்தத்தில் இவ்வாறு கூறினர்: "சர்வதேச முக்கியத்துவம் என்பதற்கு நமது நாட்டில் நிகழ்ந்தவை சகல நாடுகளுக்கும் பொருந்தும் அல்லது சர்வதேச அளவில் அவை திரும்ப நிகழ்வது வரலாற்று ரீதியில் தவிர்க்கவொண்ணுதது என்று பொருளாகும்" (லெனின், தொகுப்பு நூல்கள், தொகுதி 31, பக்கம் 21.)

மகத்தான அக்டோபர் சோஷலிசப்புரட்சி உலகப்புரட்சி இயக்கத்தின் எல்லாப் படைப்பிரிவுகளுக்கும் சக்திவாய்ந்த தூண்டுதலை அளித்தது;

சர்வதேசத் தொழிலாளர் இயக்கமும் தேச விடுதலை இயக்கமும் வளர்ச்சி யுறுவதற்கு புதிய வாய்ப்புகளையும், சாத்தியக் கூறுகளையும் திறந்து விட்டது. மகத்தான அக்டோபர் புரட்சியின் செல்வாக்கால், தேசவிடுதலை இயக்கங்களின் பிராந்தியம் உட்பட பல நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தோன்றின. 1917ல் உலகில் சில ஆயிரம் கம்யூனிஸ்டுகள் தான் இருந்தனர். ஆனால் இன்று சுமார் 6 கோடி உறுப்பினர்களைக் கொண்ட 90 கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் சமூக முன்னேற் றத்திற்குத் தலைமை தாங்கி முன்னேறி வருகின்றன. தொழிலாளி வர்க்கத்தின், எல்லா உழைப்பாளி மக்களின் நலன்களுக்காக முன் னின்று, உறுதியாகப் போராடி வருகின்றன.

அக்டோபர் புரட்சி முதலாளித்துவ உலகின் அடித்தளத்தை ஆட்டிக் குலுக்கிவிட்டது என்றால், இதற்குப் பிறகு உலகின் புரட்சிகர வளர்ச்சி நமது புவிக்கோளின் தோற்றத்தை அடிப்படையிலேயே மாற்றி விட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜெர்மன் பாசிஸத்தின், ஜப்பானிய ராணுவாதிக்கத்தின் முறியடிப்பும், ஐரோப்பா, ஆசியா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த நாடுகளில் சோஷலிசப் புரட்சிகளின் வெற் றியும் உலக வளர்ச்சிப் போக்கைத் துரிதப்படுத்தியுள்ளன; புரட்சி இயக்கத்திற்குப் புதிய அம்சங்களை வழங்கியுள்ளன. உலக சோஷலிச அமைப்பு நிறுவப் பெற்றுள்ளது; இது சர்வதேச அரங்கில் சக்திகளின் பரஸ்பர நிலையில் அடிப்படையான மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. மனிதகுல சமூக முன்னேற்றத்தின் பிரதான போக்கும் பிரதான திசை வழியும் இன்றைய சகாப்தத்தில் நிகழ்ச்சிகளின் சிக்கலான, பல-மட்ட வளர்ச்சியில் — சோஷலிச நாடுகளது வலிமையின் வளர்ச்சியில்— தெளிவாக வெளிப்பட்டுள்ளன; இந்நாடுகள் பின்பற்றி வரும் சர்வதேசக் கொள்கையின் அனுகூலமான செல்வாக்கு உலகப் புரட்சி இயக்கத் தின்மீது தீவிரமடைந்து வருவதில் தெளிவாகப் பிரதிபலித்துள்ளன. உலக சோஷலிச அமைப்பு தோன்றி, வளர்ச்சியுற்றிருப்பதை மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு மிகப்பெரிய வரலாற்று நிகழ்ச்சி எனலாம்.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் புரட்சிகரமாக மாறிச் செல்வதும், புதிய சமுதாயத்தை உருவாக்கும் இயக்க நிகழ்வும் சில குறிப்பிட்ட விதிகளின்படி நடைபெறுகின்றன என்பதை சோஷலிச நாடுகள் கடந்துவந்துள்ள பாதை தெள்ளத் தெளிவாக ஊர்ஜிதம் செய்துள்ளது. அதேசமயம் மாறிச் செல்லும் வடிவம் மக்களுக்கு மக்கள், நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. சோஷலிசத்துக்கான அடித்தளங்களை நிர்மாணிப்பது சம்பந்தப்பட்ட விசேட அம்சங்கள் முதலாளித்துவத்தை யும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து, புதிய சமூக அமைப்பை நிலை நாட்டுவதற்கான போராட்டம் எத்தகைய வரலாற்று, பொருளாதார,

அரசியல் நிலைமைகளில் நடத்தப்படுகிறது என்பதைக்கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன. சோஷலிச நிர்மாணத்தின் வடிவங்களும் முறைகளும் மாறுபட்டாலும், பிரதானமானவற்றில், அடிப்படையானவற்றில் அவை ஒன்றுபடுகின்றன. பல்வேறு நாடுகளின் தேசிய அம்சங்களும், தனித்தன்மைகளும் எவ்வாறிருப்பினும், சோஷலிச நிர்மாணத்திற்கு ஒரே ஒரு பொதுப் பாதைதான் உள்ளது என்பதை வரலாற்று அனுபவம் காட்டுகிறது.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி மாபெரும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சி. ஏனென்றால் அது ஏகாதிபத்திய காலனி ஆதிக்க நெருக்கடியைத் தோற்றுவித்தது; காலனி நாடுகளிலும் சார்பு நாடுகளிலும் லட்சோப லட்சக்கணக்கான மக்கள் தமது விடுதலைக்காகத் தீவிரமாகப் போராட உத்வேகம் அளித்தது. அக்டோபர் புரட்சி நடைபெறுவதற்கு முன்னர், முதலாளித்துவ உறவுகள் தங்குதடையின்றி ஆதிக்கம் செலுத்திவந்த நிலைமைகளில், காலனி-எதிர்ப்பு இயக்கங்களும், எழுச்சிகளும் தோல்வியுறுவது அநேகமாக நிச்சயமாக இருந்தது. ரஷ்யாவில் சோஷலிசப் புரட்சியின் வெற்றி ஏகாதிபத்தியத்துக்கும். அதன் காலனி அமைப்புக்கும் மிகப்பலமான அடி கொடுத்தது; புரட்சிகர காலனி-எதிர்ப்பு, ஏகாதிபத்திய-எதிர்ப்புப போராட்டத்துக்கு ஒப்பிடுதற்கரிய மாபெரும் வீச்சையும் அமைப்பு ஆண்மையையும் அளித்தது.

நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் இயக்கம் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்துக்கு ஆரம்பம் முதலே உறுதியான ஆதரவு அளித்தது. பூர்ஷுவாக்களுக்கு எதிரான பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தில் விஞ்ஞானக் கம்யூனிசத்தின் மூலவர்கள் சமூக ரீதியில் மட்டுமின்றி, தேசிய ரீதியிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்துடன் நெருங்கிய, உள்ளார்ந்த பிணைப்பைக் கண்டனர். "பிற மக்களை ஒடுக்கும் மக்கள் சுதந்திரமாக இருக்க முடியாது" என்று காரல்மார்க்சும், பிரெடரிக் எங்கெல்சும் கூறிய தீப்பொறி பறக்கும் சொற்கள் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்துக்கும் காலனி நாடுகள், சார்பு நாடுகளின் புரட்சி இயக்கத்துக்குக்கும் இடையே ஒற்றுமை நிலவ வேண்டிய அவசியத்தை வலியுறுத்தின.

தேசிய-காலனிப் பிரச்சினை பற்றிய மார்க்ஸ், எங்கெல்சின் பிரதான கோட்பாடுகளையும், முடிவுகளையும் லெனின் செழுமைப்படுத்தி, புதிய வரலாற்று நிலைமைகளில், காலனி நாடுகளிலும் அரைக்காலனி நாடுகளிலும் புரட்சிப் போராட்டத்தின் போர்த்தந்திரத்தையும் நடைமுறைத் தந்திரத்தையும் விரிவாக உருவாக்கித் தந்தார்; அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் வளர்ச்சி வாய்ப்புகளையும் நிர்ணயித்துக் கொடுத்தார்.

மிகப்பெரும் புரட்சியாளரும், அனைத்து மக்களின் தலைவரும் ஆசானுமான லெனின் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த உழைக்கும் வெகுஜனங்களது புரட்சி ஆற்றலிலும், அவர்களது ஆக்க சக்திகளிலும் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்தார். "காலனி நாடுகளின் உழைக்கும் வெகுஜனப் பகுதியினரும், விவசாயிகளும் இப்போது மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தாலும், அவர்கள் உலகப் புரட்சியின் பிந்திய கட்டங்களில் மிகப்பெரிய புரட்சிப் பாத்திரம் வகிப்பார்கள்" என்று லெனின் எழுதினார். அவர் உலக வரலாற்றின் புதிய சகாப்தத்தை ஐரோப்பாவில் சோஷலிச சக்திகளின் வெற்றியுடன் மட்டுமன்றி, கிழக்கத்திய மக்களின் விழிப்புடனும் பிணைத்தார். "சோஷலிசப் புரட்சி ஒவ்வொரு நாட்டிலும் பாட்டாளிகள் தமது பூர்ஷுவாக்களை எதிர்த்து நடத்தும் ஒரே போராட்டமாகவோ அல்லது பிரதான போராட்டமாகவோ இருக்காது—அது ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு உள்ளான எல்லாக் காலனிகளும், நாடுகளும், சார்பு நாடுகளும், சர்வதேச ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்தும் போராட்டமாக இருக்கும்" (லெனின், தொகுப்பு நூல்கள், தொகுதி 30, பக்கம் 158) என்று 1919ல் அவர் எழுதினார்.

சோஷலிசத்தின் உதயம் ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலையாகும், ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தைக் குறித்தது. உலக அரங்கில் சக்திகளின் பரஸ்பர நிலையில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்பட்டதன் காரணமாக, தேச விடுதலைப் புரட்சிகள் எனும் சக்திமிக்க அலை காலனி அமைப்பை அடித்துச் சென்றது; அது ஏகாதிபத்தியத்தின் அடித்தளங்களைப் பெருமளவுக்குச் சிதைத்துள்ளது. காலனி நாடுகளின், சார்பு நாடுகளின் மக்கள் சோவியத் ரஷ்யாவில் நடைபெற்ற அக்டோபர் புரட்சியை விடுதலைக்கும் தேசிய சுதந்திரத்துக்குமான தமது சொந்தப் பாதையைப் பிரகாசமாக ஒளிரச் செய்யும் ஒரு தீப்பந்தமாகக் கண்டனர். காலனி அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெறுவது ஒரு நீண்டகால லட்சியமாக இல்லாமல், இப்போது காரிய சாத்தியமானதாக ஆயிற்று. பூகோள ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் ஐரோப்பாவை மட்டுமன்றி, ஆசியாவையும் சேர்ந்த ஒரு நாட்டில் சோஷலிசப் புரட்சி சாதிக்கப்பட்டது. அதன் மாபெரும் விடுதலைப் பணி, அது தீர்வு கண்ட பிரச்சினைகளின் வகை—ஆகிய இவை யாவும் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவின் மக்களது உள்ளங்களை கொள்ளை கொண்டன.

விரைவிலேயே விடுதலை அடையவேண்டும் என்ற ஆர்வம்கொண்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் புதிய ரஷ்யா நம்பிக்கை நட்சத்திரமாயிற்று. அது தன்னலமின்றி அளித்த பொருளாயத உதவியும், மாபெரும் தார்மிக ஆதரவும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஆர்த்தெழுந்து போராடி வந்த கிழக்கத்திய மக்களுக்குத் தலையாய முக்கியத்துவம் வாய்ந்தவையாக

இருந்தன. ஜார்கால ரஷ்யாவின் முன்னாள் காலனி நாடுகளை விடுதலை செய்ய இளம் சோவியத் அரசு மேற்கொண்ட முதல் சட்டங்களும், உருப்படியான நடவடிக்கைகளும் ஒடுக்கப்பட்ட கிழக்கத்திய மக்களிடம் மிகப்பெரும் பிரதிபலிப்பை ஏற்படுத்தின. அக்டோபர் புரட்சி வெற்றி பெற்ற ஆரம்ப நாட்களிலேயே போல்ஷிவிக் கட்சியும் சோவியத் அரசாங்கமும் ஒடுக்கப்பட்ட மக்கள் சம்பந்தமான சோவியத் கொள்கையின் பிரதான கோட்பாடுகளை நிர்ணயித்துக் கூறும் கொள்கை தஸ்தாவேஜுகளை வகுத்துத் தந்தன. அந்நியப் பிரதேசங்களை அபகரித்துக் கொள்வதையும், கைப்பற்றிக் கொள்வதையும், உலகின் எந்தப் பகுதியிலும் சிறிய அல்லது பலவீனமான ஒரு தேசத்தை பெரிய அல்லது வலுமிக்க அரசுடன் பலவந்தமாக இணைப்பதையும் சோவியத் அரசாங்கம் உறுதியாக எதிர்க்கிறது என்று 1917 நவம்பர் 8ல் ஏற்கப்பட்ட சமாதானச் சட்டம் பிரகடனம் செய்தது.

"ரஷ்யாவையும் கிழக்குலகையும் சேர்ந்த எல்லா உழைக்கும் முஸ்லிம்களுக்கும்" லெனின் விடுத்த வேண்டுகோளில் அடங்கியிருந்த சொற்கள் உலகெங்கும் எதிரொலித்தன: "உங்கள் வாழ்க்கையை உங்கள் விருப்பப்படி நீங்களேதான் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. ஏனென்றால் உங்கள் எதிர்காலம் உங்கள் கைகளில்தான் இருக்கிறது." தமது தேச விடுதலைக்காக காலனி மக்கள் நடத்தும் போராட்டம் குறித்து பாட்டாளி வர்க்க அரசு கடைப்பிடிக்க வேண்டிய போக்கு சம்பந்தமான புதிய கோட்பாடுகள் வரலாற்றிலேயே முதல் தடவையாக அறிவிக்கப்பட்டன. இந்தக் கோட்பாடுகள் சோவியத் அரசினது அயல்நாட்டுக் கொள்கையின் பிரதான கொள்கை வழிகளில் ஒன்றாயின.

இளம் சோவியத் அரசு பின் கண்டவாறு பிரகடனம் செய்தது: "எங்கள் கிழக்கத்திய கொள்கை ஏகாதிபத்திய நாடுகளது கிழக்கத்திய கொள்கைக்கு முற்றிலும் நேர்மாறானது. கிழக்கத்திய மக்கள் சுதந்திரமான பொருளாதார, அரசியல் வளர்ச்சி அடைவதற்கு எங்கள் கிழக்கத்தியக் கொள்கை பாடுபடுகிறது; இதில் அவர்களுக்கு எல்லா ஆதரவையும் நல்கும். தமது பரிபூரண சுதந்திர பொருளாதார, அரசியல் வளர்ச்சியை எய்துவதற்காகப் போராடும் மக்களது இயல்பான, தன்னலமற்ற நண்பர்களாக, கூட்டாளிகளாக இருப்பதில்தான் எங்கள் பாத்திரத்தை, எங்கள் பணியைக் காண்கிறோம். தமது தேசிய சுதந்திரத்திற்காக நியாயமான போராட்டம் நடத்தும் மக்களுக்கு தார்மிக, பொருளாயத ஆதரவு அளிக்கத் தயாராக இருப்பதாக ஓர் அரசு அறிவித்தது சர்வதேச உறவுகள் வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும். மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் காலனி-எதிர்ப்புத் தன்மையை இதிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

சோவியத் அரசாங்கம் இயற்றிய முதல் சட்டங்களில் ஒன்று "ரஷ்ய மக்களின் உரிமைப் பிரகடனமாகும்". தேசிய இனங்கள் கொள்கைத் துறையில் சோவியத் அரசின் நிலையை அது பின்கண்டவாறு அறிவித்தது: ரஷ்யாவிலுள்ள எல்லாத் தேசிய இனங்களும் சமத்துவ உரிமை படைத்தவை, அரசுரிமை படைத்தவை; பிரிந்து சென்று சுதந்திரமான அரசுகள் அமைத்துக் கொள்வது உட்பட பரிபூரண சுயநிர்ணய உரிமை அவற்றிற்கு உண்டு; எல்லா தேசிய சலுகைகளும் கட்டுப்பாடுகளும் ஒழிக்கப்படுகின்றன; சகல தேசிய சிறுபான்மையினரின், சிறு மனித இனக் குழுக்களின் சுதந்திரமான வளர்ச்சி உத்தரவாதம் செய்யப்படுகிறது".

வெற்றிகரமான சோஷலிசத்துக்கும் தேசவிடுதலை சக்திகளுக்கும் இடையே உறுதியான, நெருக்கமான கூட்டணியை நிறுவுவதற்கு கட்சியும் லெனினும் மிகுந்த முக்கியத்துவம் அளித்தனர். தேசவிடுதலை இயக்கத்தின் வெற்றிகரமான வளர்ச்சியும், புதிய நிலைமைகளில் பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகள் மேலும் செழுமையுறுவதும் இதனைப் பொறுத்திருந்தது; மேலும், அக்டோபர் புரட்சியின் தாயகத்துக்கு வேண்டியிருந்த தேசவிடுதலை இயக்கத்தின் ஆதரவும் இதைப் பொறுத்திருந்தது. லெனினது முன்முயற்சியின்பேரில் 1920 செப்டம்பரில் பாகூவில் கூட்டப்பட்ட கிழக்கத்திய மக்களின் முதலாவது காங்கிரஸ் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகத் திகழ்ந்தது. சுமார் 40 தேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிட்டத்தட்ட இரண்டாயிரம் பிரதிநிதிகள் பாகூ காங்கிரசில் பங்கெடுத்துக் கொண்டனர். ஆப்கானிஸ்தான், இந்தியா, எகிப்து, சீனு, கொரியா, சிரியா, துருக்கி, ஜப்பான் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், மத்திய ஆசியா, காகசஸ் மக்களின் பிரதிநிதிகளும் இவர்களில் இருந்தனர். பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, பல்கேரியா, ஸ்பெயின், ஆஸ்ட்ரியா, ஹங்கேரி, ஹாலந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளும் காங்கிரசுக்கு வந்திருந்தனர். காமின்டர்னின் இரண்டாவது காங்கிரசில் ஏற்கப்பட்ட தேசிய இனங்கள் பிரச்சினை, காலனி பிரச்சினை பற்றிய லெனினது கோட்பாடுகளுக்கு காங்கிரஸ் முழு ஆதரவளித்தது; சர்வதேச நிலைமை, கிழக்கத்திய நாடுகளிலுள்ள சோவியத்துகள், நில-விவசாயப் பிரச்சினைகள் உட்பட பல பிரச்சினைகள் பற்றி விவாதித்தது. கிழக்கத்திய மக்களின் முதலாவது காங்கிரஸ் காமின்டர்னின் இரண்டாவது காங்கிரசின் முடிவுகளை ஏற்று அவற்றின் அடிப்படையில் பல தீர்மானங்களையும் இரண்டு வேண்டுகோள்களையும் தயாரித்தது. இந்த வேண்டுகோள்களில் ஒன்று போராடும் கிழக்கத்திய மக்களுக்கும், மற்றொன்று தேசவிடுதலை இயக்கத்திற்கு தீவிர ஆதரவு அளிக்கும்படி ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் ஆகியவற்றைச் சேர்ந்த உழைப்பாளி மக்களுக்கும் விடுக்கப்பட்டவையாகும். "எல்லா நாடுகளையும் சேர்ந்த

பாட்டாளி மக்களே, உலகம் முழுவதிலுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்றுசேருங்கள் !'' என்ற கோஷத்தையும் காங்கிரஸ் பிரகடனம் செய்தது. இக்கோஷத்தை லெனின் அங்கீகரித்தார்.

தேசவிடுதலை இயக்கத்தை வளர்ப்பதற்கும், எல்லாப் புரட்சிப்படைப் பிரிவுகளின் ஒற்றுமையையும் ஒருங்கிணைவையும், சோவியத் ரஷ்யாவுடன் அவற்றின் ஒருமைப்பாட்டையும் வலுப்படுத்துவதற்கும் கிழக்கத்திய மக்களின் முதலாவது காங்கிரஸ் குறிப்பிடத்தக்க பங்காற்றிற்று.

சுயநிர்ணய உரிமை பெறுவதற்கும் சுயாதிக்கமுள்ள அரசுகளை அமைத்துக் கொள்வதற்கும் தேசங்களுக்கு உரிமை உண்டு என்ற கோட்பாடு லெனினால் விஞ்ஞான ரீதியில் வகுக்கப்பட்டு, இளம் சோஷலிச அரசில் புரட்சிகர நடைமுறையில் செயல்படுத்தப்பட்டது; இது ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு உள்ளான மக்களிடம் மிகுந்த ஆர்வத்தைக் கிளர்த்தி விட்டது; அவர்களால் நன்கு புரிந்து கொள்ளப் பட்டது. ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், லத்தீன் அமெரிக்காவிலும் ரஷ்யத் தொழிலாளி வர்க்கத்துடனும், விவசாயிகளுடனும் ஒருமைப்பாடு கொள்ளும் ஒரு பரந்த இயக்கம் உருவாயிற்று; முதலாவது மார்க்சிஸ்டு குழுக்கள் அமைக்கப்பட்டன; கம்யூனிஸ்டுக் கட்சிகள் தோன்றின. தேசிய சுய விழிப்பும், வர்க்க உணர்வும் வளர்ச்சி அடைந்ததானது ஒடுக்குமுறையாளர்களை எதிர்த்துப் போராடி வந்த மக்கள் ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து தாம் விடுதலைபெறுவதற்கான சாத்தியக்கூறுகளுக்கும் ரஷ்ய சோஷலிசப் புரட்சியின் வெற்றிகளுக்கும் இடையே உள்ள நெருங்கிய சம்பந்தத்தைப் புரிந்து கொள்ள துணை புரிந்தது.

மகத்தான அக்டோபர் புரட்சியின் செல்வாக்கால் தேசவிடுதலை இயக்கங்கள் பொங்குமாங்கடலெனப் பொங்கி எழுந்ததன் விளைவாய் மங்கோலியாவில் மக்கள் புரட்சி வெற்றிவாகை சூடிற்று; ஆப்கனிஸ்தான் தேசிய சுதந்திரம் பெற்றது; துருக்கியின் தேசிய அரசுரிமை வலுப் பெற்றது; சீனாவில் ஏகாதிபத்தியத்தின் நிலைகள் பெரிதும் பலவீனமடைந்தன. இந்தியா, ஈராக், சிரியா, எகிப்து ஆகிய நாடுகளில் காலனி ஆதிக்கவாதிகளின் நிலை ஆட்டம் கொடுக்க ஆரம்பித்தது. இந்தோனேஷ்யா, வியத்நாம், பர்மா, இரான், மலேயா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலும், மற்றும் லத்தீன் அமெரிக்க, ஆப்பிரிக்க நாடுகளிலும் தேசவிடுதலை இயக்கம் தீவிரமடைந்தது.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து, மிக முக்கியமான பலன்கள் ஏற்பட்டன: ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சிகர விடுதலை இயக்கம் குணரீதியில் ஒரு மேம்பட்ட நிலைக்கு உயர்ந்தது வளர்ந்து வந்த பாட்டாளி வர்க்கத்தினர், விவசாயிகள் முற்போக்கு அறிவுத்துறையினர் ஆகியோர் தேசவிடுதலைப் போராட்டத்தில் முன்னின்று பங்கெடுத்துக் கொள்ள ஆரம்பித்தனர்.

ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த பல நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தோன்றியதானது தொழிலாளிகள், விவசாயிகள் இயக்கத்தின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டத்தைக் குறித்தது. தொழிலாளிகளையும் விவசாயிகளையும் கொண்ட ஒரு கூட்டணியைத் தோற்றுவிப்பதற்கும், எல்லா தேசபக்த சக்திகளையும் ஒரே ஏகாதிபத்திய-எதிர்ப்பு முன்னணியில் திரட்டுவதற்கும் சாதகமான நிலைமைகள் உருவாயின.

1919ல் உலகப் பரப்பில் காலனி நாடுகள், சார்பு நாடுகளின் பரப்பு சுமார் 72 சதவிகிதமாக இருந்தது; அதேபோல் அவற்றின் மக்கட் தொகை உலக மக்கட் தொகையில் 69 சதவிகிதமாக இருந்தது. 1938ஆம் ஆண்டு வாக்கில் இந்த எண்ணிக்கை முறையே 59.9 சதவிகிதமாகவும், 63·6 சதவிகிதமாகவும் இருந்தது. 1960ஆம் ஆண்டுகளின் இறுதியில் நமது புவிக்கோளின் பரப்பில் காலனிகள் 3·6 சதவிகிதமாகவும், உலக மக்கள் தொகையில் 1 சதவிகிதத்திற்குக் குறைவாகவுமே இருந்தன. 1970ஆம் ஆண்டுகளின் மத்தியில் கடைசி காலனி சாம்ராஜ்யமான போர்த்துக்கீசிய சாம்ராஜ்யம் நொறுங்கி விழுந்தது.

பழைய காலனிகள், அரைக்காலனிகள் இருந்த இடத்தில் டஜன் கணக்கான சுயாதிக்க அரசுகள் தோன்றி, தீவிர ஏகாதிபத்திய-எதிர்ப்பு சக்தியாகப் பரிணமித்துள்ளன. நமது புவிக்கோளின் எல்லையற்ற பரப்புகளில் நடைபெற்றுவரும், 20ஆம் நூற்றாண்டுப் பிற்பகுதியின் தேச விடுதலைப் புரட்சிகள் எஞ்சியுள்ள காலனி ஆதிக்க, வருண இனவெறிக் கொத்தளங்களைத் தாக்கி வருகின்றன.

மகத்தான அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் கழிந்த அறுபது ஆண்டுகள் வெட்கக்கேடான காலனி அடிமை அமைப்பு துரிதமாக வீழ்ச்சியுற்று பூரணமாக ஒழிந்துபோன காலப் பகுதியாகும்; அவை ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் போராட்டங்களும் வெற்றிகளும் மிகுந்த புகழ்மிகு அத்தியாயங்களாகும். இன்று இந்த நாடுகள் தீவிர அரசியல் நடவடிக்கை அரங்கில் பிரவேசித்துள்ளன; ஒரு புதிய சுதந்திர வாழ்க்கையைக் கட்டும் பரந்த பாட்டையை மேற்கொண்டுள்ளன.

* * *

ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக முன்னேற்றத்திற்கு ஆழமான, விஞ்ஞான ரீதியான கோட்பாட்டை வகுத்துக் கொடுத்து, லெனின் ஒரு மாபெரும் வரலாற்றுச் சிறப்புடைய சேவை புரிந்துள்ளார். அவர் மார்க்ஸ், எங்கெல்சின் போதனையை ஆக்க ரீதியாக செழுமைப்படுத்தி, ஒரு முக்கிய விஷயத்தை மெய்ப்பித்தார். அதாவது காலனி நாடுகளையும் சார்பு நாடுகளையும் சேர்ந்த மக்கள் துன்பம் நிறைந்த முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தைக் கடந்து செல்லவேண்டியதில்லை, முன்னேற்ற

றடைந்த நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தின் உதவியோடும், ஆதர வோடும், வெற்றிகரமான சோஷலிசத்தின் மாபெரும் சக்திகளின் ஆதார பலத்துடனும் அவர்கள் முதலாளித்துவத்துக்குச் செல்லாமலேயே சோஷ லிசத்தை அடையமுடியும் என்பதை நிரூபித்தார்.

லெனின் உருவாக்கிய தெளிவான, ஒருங்கிணைந்த முதலாளித்துவ மல்லாத வளர்ச்சிப் பாதைக் கண்ணோட்டம் எங்கள் நாட்டில் நிதர்சன மாக செயல்படுத்தப்பட்டதைக் காணலாம். மத்திய ஆசியா, கஜாக்ஸ் தான், சோவியத் தொலை வடக்கு ஆகியவற்றைச் சேர்ந்த மக்களும் இதர மக்களும் முதலாளித்துவக் கட்டத்துக்குச் செல்லாமலேயே சோஷலிசத்துக்கு முன்னேறியிருப்பது லெனினினது கருத்துக்களுக்குக் கிட்டிய ஒரு மாபெரும் வெற்றியாகும்; அவற்றின் மாபெரும் ஜீவியத் தன்மைக்கு ஒரு நடைமுறை ஊர்ஜிதமாகும். இதனை ஒரு மகத்தான சமூக-பொருளாதார, அரசியல் பரிசோதனை எனலாம். இது வரலாற்றில் முதல்தடவையாக லெனினினது கட்சியாலும், சோவியத் சோஷலிச அரசாலும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

சோவியத் கிழக்கு, முன்னாள் ஜார்கால ரஷ்யாவின் சகல எல்லைப் பகுதிகள் ஆகியவற்றைச் சேர்ந்த மக்களின் வளர்ச்சிப் பாதைகள் சம்பந் தப்பட்ட பிரச்சினை அக்டோபர் புரட்சி வெற்றிபெற்ற நாட்கள் முதலே லெனின், மற்றும் கம்யூனிஸ்டுக் கட்சியின் புரட்சி-நடைமுறை நடவடிக் கைகளிலும், விஞ்ஞான-தத்துவார்த்த நடவடிக்கைகளிலும் முக்கிய இடம் பெற்றது. ''இது ஓர் உலகு தழுவிய பிரச்சினை, இப்படிக் கூறுவதில் மிகை ஏதும் இல்லை'' என்று கம்யூனிஸ்டுக் கட்சி கருதிற்று. (வி. இ. லெனின், தொகுப்பு நூல்கள், தொகுதி 45, பக்கம் 298, ஆங்கிலப் பதிப்பு). கிழக்கில் சோவியத் குடியரசுகள் தோன்றியதன் சர்வதேச முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறும்போது, லெனினும், கட்சியும் கிழக்கு நாடுகளில் சோவியத் ஆட்சியின் கோட்பாடுகளும், மகத்தான அக்டோபர் புரட்சியின் கருத்துகளும் பிரபலமடைந்திருப்பதன் விசேட முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டினர். ''தொழில் ரீதியில் வளர்ச்சி அடைந்த நாடுகளில் மட்டுமன்றி, பாட்டாளி வர்க்கம்போன்ற ஒரு சமூக அடிப்படையைக் கொண்ட நாடுகளில் மட்டுமன்றி, விவசாயி களைத் தமது அடித்தளமாகக் கொண்ட நாடுகளிலும்கூட சோவியத் அரசாங்கம் பற்றிய கருத்துகளும் கோட்பாடுகளும் புரிந்துகொள்ளப்படக் கூடியவை, உடனடியாக அமல் நடத்தப்படக்கூடியவை என்பதற்கு இந்தக் குடியரசுகள் சான்றாகவும் ருசுவாகவும் விளங்குகின்றன'' என்று லெனின் கூறினார். (வி. இ. லெனின், தொகுப்பு நூல்கள், தொகுதி 31, பக்கம் 490). நிலப்பிரபுத்வ அரை நிலப்பிரபுத்வ உறவுகள் ஆதிக்கம் செலுத்தும் நிலைமைகளில், தொழிலாளிவர்க்கம் சிறிதாகவும். மத்தியக் கால ஒடுக்குமுறையில் அவதியுறும் விவசாயி மக்கள் பெருவாரியாகவும்

இருக்கும் நிலைமைகளில், உழைப்பாளி மக்கள் சமூக விடுதலை பெறும் இயக்க நிகழ்வுகள், அவர்கள் சோஷலிசத்துக்குப் படிப்படியாக மாறிச் செல்லும் இயக்க நிகழ்வுகள் தமது சொந்த விசேட அம்சங்களைப் பெற்றிருக்கும் என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில் லெனினும் கம்யூனிஸ்டுக் கட்சியும் செயல்பட்டனர். சோஷலிசத்துக்கு மாறிச் செல்லுவது சம்பந்தமான பொது விதிகள், மற்றும் சமூக வளர்ச்சியில் பின்தங்கியுள்ள நாடுகளில் இந்த இயக்க நிகழ்வின் பிரத்தியேக அம்சங்கள் ஆகியவற்றின் சம்பந்தா சம்பந்தம் பற்றிய பிரச்சினைக்கு லெனின் அற்புதமாகத் தீர்வு கண்டார்.

சோஷலிச நிர்மாணக் காலத்தில் சமூக–பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் கோட்பாடுகள் பெரும்பாலும் சோவியத் யூனியன் பிரதேசம் முழுவதிலும் ஒரே மாதிரியானவையாக இருந்தன. அதே சமயம் கட்சியானது ஒவ்வொரு தேசியக் குடியரசின் பிரத்தியேக அம்சங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, மாறிச்செல்லும் காலகட்டத்தில் அவற்றின் அடிப்படையில் பல்வேறு வடிவங்களையும் முறைகளையும் கைக்கொண்டது; பன்னெடுங்காலப் பின்தங்கிய நிலையை ஒழித்துக்கட்டுவது சம்பந்தப்பட்ட சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டது. சோவியத் கிழக்கைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளிடையே லெனின் பேசும்போது, ''ரஷ்ய சோவியத் சோஷலிச சமஷ்டிக் குடியரசின் நிலையிலிருந்தும், நிலைமைகளிலிருந்தும் மாறுபட்ட தமது நிலையின் தமது குடியரசுகளினது நிலையின் தனித்தன்மையை அவர்கள் பூரணமாக உணர்ந்திருக்க வேண்டும்; அவர்கள் எங்கள் நடைமுறைத் தந்திரங்களை அப்படியே பின்பற்றக்கூடாது, அதற்குப் பதிலாக வேறுபட்ட ஸ்தூலமான நிலைமைகளுக்கு ஏற்ப அவற்றை முழு நிறைவாக மாற்றவேண்டும்'' என்று சுட்டிக் காட்டினர் (லெனின், தொகுப்பு நூல்கள், தொகுதி 32, பக்கம் 316).

சோவியத் யூனியனில் சோஷலிச நிர்மாணம் லெனினிய தேசிய இனக்கொள்கையின் ஒப்பற்ற சாதனைகளைக் குறிக்கிறது. எங்கள் நாட்டிலுள்ள எல்லா தேசிய இனமக்களும், அவர்களது ஆரம்பக்கால சமூக–பொருளாதார வளர்ச்சித்தரம் எப்படியிருந்த போதிலும், ஏககாலத்தில் சோஷலிசத்தை அடைந்தனர்.

லெனினும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியும் மனிதகுலம் முழுவதற்கும் புரிந்துள்ள ஒரு மகத்தான சேவை ஒரு பல-தேசிய இன அரசை—சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தை—தோற்றுவிக்கும் லட்சியத்திற்கு விஞ்ஞான ரீதியாக விளக்கம் தந்து, அதனை வெற்றிகரமாக சாதித்திருப்பதில் பொதிந்துள்ளது. சோவியத் யூனியனின் உதயத்தை மாபெரும் அக்டோபர் புரட்சி லட்சியத்தின் இயல்பான பலன் என, நேரடித் தொடர்ச்சி என, தொழிலாளி வர்க்கத்தின் தலைமை

யிலும் கம்யூனிஸ்டுக் கட்சியின் வழிகாட்டுதலிலும் உள்ள அனைத்து சோவியத் மக்களின் புரட்சிகர படைப்பாக்கத்திறனிலிருந்து கனிந்த கனி எனக்கூறலாம். நூற்றுக்கு மேற்பட்ட தேசங்களையும் தேசிய இனங்களையும் கொண்ட ஒரு மாபெரும் ஒன்றியம் உருவாயிற்று; அது சகோதர நட்புறவுப் பிணைப்புக்களாலும், ஒரே மாதிரியான வர்க்க நலன்களாலும் நோக்கங்களாலும் வலுப்பெற்றது. ஒரு புதிய வரலாற்று மக்கள் சமுதாயம்—சோவியத் மக்கள்—தோன்றியுள்ளது.

பன்னெடுங்கால தேசிய இனப்பிரச்சினைகளுக்கு கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசும் வெற்றிகரமாகத் தீர்வு கண்ட எங்கள் நாட்டு அனுபவம் உலகமக்களுக்கு ஒரு சிறந்த உதாரணமாக விளங்குகிறது. ஒரு சோஷலிச பல–தேசிய இன அரசைத் தோற்றுவிப்பது உலகப் புரட்சி இயக்கத்தின்மீது எத்தகைய பிரம்மாண்டமான புரட்சிகர செல்வாக்கைச் செலுத்தும் என்பதைத் தொலை நோக்குடன் கண்டு லெனின் 1922 டிசம்பரில், சோவியத் யூனியனுக்கான அடித்தளம் அப்போதுதான் இடப்பட்டு வந்த வேளையில் எழுதும்போது, இது "நமக்கு மட்டுமன்றி, அகில உலகுக்கும், அண்மை வருங்காலத்தில் வரலாற்று அரங்குக்கு நம்மைப் பின்பற்றப்போகும் ஆசியாவின் கோடானு கோடி மக்களுக்கும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்" (லெனின், தொகுப்பு நூல்கள், தொகுதி 36, பக்கம் 610) என்று குறிப்பிட்டார். லெனினது இந்த அற்புதமான தீர்க்க தரிசனம் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த பல நாடுகளின் உதாரணத்தால் என்றையும்விட இன்று மிகத் தெளிவாக ஊர்ஜிதம் செய்யப்பட்டு வருகிறது; இந்த நாடுகள் இப்போது வரலாற்று முன்னரங்கில் தோன்றியுள்ளன; தேசிய, சமூக, மறுமலர்ச்சி தோன்றிவரும் 'ஒரு புரட்சிகர சகாப்தத்தில் வாழ்ந்து வருகின்றன.

எல்லா நாடுகளும் சோஷலிசத்தை நோக்கி வளர்ச்சியுறுவது வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாதது; இதில், சமூக வாழ்க்கையை ஜனநாயக முறையில் ஒழுங்குபடுத்தும் பல்வேறு வடிவங்கள், பொருளாதாரத்தை நிர்வகிக்கும் பல்வேறு முறைகள், வேறுபட்ட பொருளாதார, சமூக வளர்ச்சி வீதங்கள் ஆகியவையும் அடங்கும்; இவற்றை அது விலக்கிவிடவில்லை. ஐரோப்பிய கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மாநாட்டில் எல். ஐ. பிரஷ்னேவ் பேசும்போது, கம்யூனிஸ்டு இயக்கம் திரட்டி வைத்துள்ள அனுபவத்தின் பிரம்மாண்டமான முக்கியத்துவத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்; "பெரிதும் மாறுபட்ட நிலைமைகளில், சோஷலிச நிர்மாணத்தின் பொது விதிகளையும், அதேபோல் வேறுபட்ட ஸ்தூலமான வடிவங்களையும் உறுதிப்படுத்த, சோஷலிசத்தைக் கட்டும் அனுபவ"த்தின் மாபெரும் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறினர்.

அதேசமயம் சமுதாயத்தை சோஷலிசக் கோட்பாடுகளின் அடிப் படையில் மாற்றும் வடிவங்களேயும், முறைகளேயும், வேகத்தையும் நிர்ணயிக்கும் பொருட்டு, தனித்தனி நாடுகளின் விசேட அம்சங்களேயும் தனித் தன்மைகளேயும் பூரணமாகக் கணக்கில் எடுத்துக் கொள்வது அவ்சியம் என்பதில் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லுவது சம்பந்தமான பொது விதிகளே இடையருது கவனத்தில் கொள்வதும் உட்படும். இதுதான் சோவியத் யூனியனின் வரலாற்று அனுபவத்தில், லெனின் கூறியதுபோல பல்வேறு மக்கள் ரஷ்யாவைக் கவர்ச்சிக் கேந்திரமாகக் கருதச் செய்யும் மிக முக்கியமான, கணிசமான அனுபவத்தில் புரட்சி சக்திகள் மாபெரும் ஆர்வம் காட்டுவதற்குக் காரணமாகும்.

* * *

இன்றைய தேசவிடுதலே இயக்கம் குணரீதியில் ஒரு புதிய வளர்ச்சிக் கட்டத்தில் பிரவேசித்துள்ளது. காலனி நாடுகளதும், சார்பு நாடுகளதும் தேசவிடுதலே இயக்க நிகழ்வு பெரும்பாலும் பூர்த்தியடைந்துவிட்டது; சமூக விடுதலேப் பணியானது வாழ்க்கையாலேயே என்றையும்விட உறுதியாக முன்னணிக்குக் கொண்டு வரப்படுகிறது; இதில்தான் இன்றைய தேசவிடுதலே இயக்கத்தின் பிரதான பிரத்தியேக அம்சம் பொதிந்துள்ளது. காலனி நாடுகளதும், சார்பு நாடுகளதும் மக்கள் தேச விடுதலேப் போராட்டத்திலிருந்து சுரண்டும் அமைப்பின் கொத்தளங் களுக்கு எதிரான போராட்டத்திற்கு முன்னேறிச் செல்வர், இதன்மூலம் ஏகாதிபத்தியத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் மிக பலமான அடி கொடுப்பர் என்று மேதை லெனின் கூறிய தீர்க்க தரிசனம் மெய்யாகி விட்டது.

தேசவிடுதலே இயக்கத்தின் இன்றைய கட்டம் பற்றிய ஒரு விரிவான விளக்கமும், வளரும் நாடுகளின் உள்நாட்டு* வாழ்விலும், அவற்றின் அயல்துறைக் கொள்கைகளிலும் ஏற்பட்டுவரும் ஆக்கபூர்வமான மாற்றங்கள்பற்றிய ஓர் ஆழமான பகுத்தாய்வும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 25வது காங்கிரசின் முடிவுகளிலும், எல். ஐ. பிரெஷ்னேவின் அறிக்கையிலும், சொற்பொழிவுகளிலும் அடங்கியுள்ளன. ‘‘இன்றைய உலகச் சித்திரத்தைக் காணும்போது, சமீபகாலம்வரை காலனிகளாகவும், அரைக் காலனிகளாகவும் இருந்த நாடுகளின் செல்வாக்கு பெருமளவுக்கு அதிகரித்திருக்கிறது என்ற முக்கிய உண்மையை யாரும் கவனிக்காமல் இருக்க முடியாது. இந்த நாடுகளில் பெரும்பாலானவை ஏகாதிபத்தியத் துக்கு எதிரான போராட்டத்தில், தமது அரசியல், பொருளாதார உரிமை களே மேன்மேலும் அதிக ஆற்றலுடன் பாதுகாத்து வருகின்றன, தமது சுதந்திரத்தைப் பலப்படுத்தவும், தமது மக்களின் சமூக, பொருளாதார; கலாசாரத்தரத்தை உயர்த்தவும் பாடுபட்டு வருகின்றன என நிச்சயமாகக்

கூறலாம்" என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 25வது காங்கிரசில் எல். ஐ. பிரெஷ்னேவ் குறிப்பிட்டார்.

சாதகமான சர்வதேச நிலைமை இன்றைய தேசவிடுதலைப் புரட்சிகள் வெற்றிகரமாக வளர்ச்சியுறுவதற்கும், ஆழமடைவதற்கும் வெகுவாக துணைபுரிகிறது. சோவியத் யூனியனும், சோஷலிசக் கூட்டு அமைப்பைச் சேர்ந்த இதர நாடுகளும், அனைத்து சமாதான நேய சக்திகளும் விடாப் பிடியாக, உறுதியோடு நடத்திவந்தப் போராட்டம் சர்வதேச உறவுகளின் வளர்ச்சியில் ஒரு வரலாற்றுச் சிறப்பு படைத்த மாற்றத்துக்கு வகை செய்தது—இது ஏகாதிபத்தியவாதிகளால் திணிக்கப்பட்ட கெடுபிடிப் போரிலிருந்து சமாதான சகவாழ்வுக்கும், சர்வதேச வாழ்வில் எதிரும் புதிருமாக கச்சை கட்டிக்கொண்டு நிற்கும் நிலையிலிருந்து, பதற்ற நிலையி லிருந்து பதற்றநிலைத் தணிவுப் போக்குக்கும் பரஸ்பர இணக்கத் துக்குமான மாற்றமாகும். சர்வதேசப் பதற்றநிலைத் தணிவையும், சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளை அரசுகளுக்கு இடையேயான உறவுகளில் பிரதான போக்காக நிலைநாட்டுவதையும் சோவியத் யூனியன் ஆதரிக்கிறது. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 24வது காங்கிரசில் வகுக்கப்பட்டு, 25வது காங்கிரசில் மேலும் செழுமையும் ஸ்தூலமும் படுத்தப்பட்ட சமாதானத் திட்டம் எல்லா சமாதான சக்திகளுக்கும் ஓர் உற்சாகமிக்க செயல்திட்டமாகப் பரிணமித்துள்ளது. ஹெல்சிங்கி உடன் பாடுகளை அட்சரம் பிசகாது கடைப்பிடிக்கும் சோவியத் யூனியன் ராணுவ பதற்றநிலைத் தணிவுக்குப் பாதை செப்பனிட்டுத் தரவும், ஆயுத உற்பத்திப் போட்டியைத் தடுத்து நிறுத்தவும், பதற்ற நிலைத் தணிவு இயக்க நிகழ்வை உலகின் எல்லாப் பிரதேசங்களுக்கும் பிராந்தியங்க ளுக்கும் விஸ்தரித்து அதனை மாற்ற முடியாததாக்கவும் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறது.

சமாதான லட்சியத்தையும் மக்களின் பந்தோபஸ்தையும் பலப்படுத்த சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியாலும், மத்தியக் கமிட்டியின் அரசியல் குழுவாலும், தனிப்பட்ட முறையில் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிப் பொதுச் செயலாளர் தோழர் லியோனித் இலியிச் பிரெஷ்னேவாலும் பெரும் பணி ஆற்றப்பட்டு வருகிறது. நிரந்தர சமாதானம், மக்களின் பந்தோபஸ்து, ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கான போராட்டத்திலும், புதிய சர்வதேசஉறவுகளை நிறுவுவ தற்கான போராட்டத்திலும் தோழர் எல். ஐ. பிரெஷ்னேவ் தலை சிறந்த பங்காற்றி வருகிறார். இந்த விழுமிய நடவடிக்கைகளுக்கு சோவியத் மக்கள் அனைவரதும், நம் புவிக்கோளிலுள்ள சகல சமாதான சக்தி களதும் பூரண ஆதரவும் உற்சாக மிக்க அங்கீகாரமும் கிட்டியுள்ளன.

சர்வதேச உறவுகளின் வளர்ச்சியில் கடந்த பத்தாண்டில் சமாதான சக்திகள் குறிப்பிடத் தக்க வெற்றிகள் பெற்றுள்ளன; ஆக்கபூர்வமான

மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பத்தாண்டுகளில்தான் தேசவிடுதலை இயக்கம் புதிய பிரதான வெற்றிகளை ஈட்டிற்று. வீரஞ் செறிந்த வியத்நாம் மக்கள் வரலாற்றுப் புகழ்மிக்க வெற்றி பெற்றனர், வியத்நாம் ஒரே சோஷலிசக் குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டது. லாவோஸ் தேசபக்த சக்திகள் அடைந்த வெற்றியும், அந்த நாட்டில் மார்க்சிய-லெனினிய புரட்சிக் கட்சி தலைமை சக்தியாக முன்னணிக்கு வந்திருப்பதும் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். ஜனநாயகக் கம்பூச்சாவுக்கும் ஒரு சுதந்திரமான வளர்ச்சிப் பாதை திறந்து விடப்பட்டுள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ராணுவத் தலையீடு அடைந்த படுதோல்வியும், இந்தோ-சீன நிலைமையில் ஏற்பட்டுள்ள தீவிர மாற்றங்களும் ஆசியாக் கண்டம் முழுவதிலும் அரசியல் சூழ்நிலையை மேம்படுத்த பெரும் பங்காற்றியுள்ளன. ஆசியாவில் பல நாடுகள் உண்மையான அரசியல் சுதந்திரத்தையும், பொருளாதார சுதந்திரத்தையும் அடைவதற்கும், ஒன்று மற்றொன்றுடன் சிறந்த அண்டை நேய ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்வதற்கும், கூட்டுப் பந்தோபஸ்தை உத்தரவாதம் செய்வதற்குமான தமது போராட்டத்தை முடுக்கிவிட்டுள்ளன.

ஆப்பிரிக்காவின் போராடும் மக்கள் பல முக்கிய வெற்றிகளைச் சாதித்துள்ளனர். சுதந்திர நாடுகளின் அணிகளில் மேன்மேலும் புதிய இளம் நாடுகள் சேர்ந்து வருகின்றன. கினி-பிஸ்ஸாவ், மொசாம்பிக், சாவ் தோமே, பிரின்சிபி, கேப் வெர்டே தீவுகள், அங்கோலா, கோமோரோ தீவுகள், செச்செல்லஸ் முதலியவற்றின் மக்கள் தேசிய சுதந்திரம் பெற்றுள்ளனர். தென்னாப்பிரிக்கா, ரொடீஷியா போன்ற வருண இன வெறி, பிற்போக்குக் கொத்தளங்களுக்கும், • உலக ஏகாதிபத்தியத்தின் பொம்மைகளுக்கும் எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. அங்கோலாவிலும் மொசாம்பிக்கிலும் அடைந்த தோல்வி காரணமாகவும், விடுதலை இயக்கம் மேலும் வளர்ச்சி அடையும் என்ற அச்சம் காரணமாகவும், காலனி ஆதிக்கத்தின், வருண இன வெறியின் கடைசிக் கோட்டையை எப்படியும் காப்பாற்றி விடவேண்டும் என்ற நோக்கத்தோடு ஏகாதிபத்திய சக்திகள் ஆப்பிரிக்காவின் தென்பகுதியிலுள்ள வருண இனவெறி ஆட்சிகளின் ராணுவ ஆற்றலைக் கட்டி வளர்க்க பெருமுயற்சி செய்து வருகின்றன.

ஆனால் இது வீண் முயற்சியே ஆகும். தெற்கு ஆப்பிரிக்காவிலுள்ள தேசபக்தர்கள் ஒப்பற்ற தலைவர்களதும், தென்னாப்பிரிக்காவின் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் (ஏஎன்சி), ஜிம்பாப்வே தேசபக்த முன்னணி, தென்-மேற்கு ஆப்ரிக்காவின் மக்கள் நிறுவனம் (எஸ்டபிள்யூ பி.ஓ.) போன்ற முன்னணி விடுதலை இயக்கங்களதும் வழிகாட்டுதலில் தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகின்றனர். சோவியத் யூனியன், சோதர

சோஷலிச நாடுகள், சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கம், அனைத்து முற்போக்கு மனித குலம் ஆகியவற்றின் ஆதரவும் ஒருமைப் பாடும் அவர்கள் பக்கம் உள்ளன.

ஆசியாவில் மாபெரும் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இத்துடன் லத்தீன் அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும் பிரதான புரட்சி மாற்றங்கள் நிகழ்ந்தேறியுள்ளன. உலக சோஷலிசம், தேசிய, சமூக விடுதலை சக்திகள் ஆகியவற்றின் அதிகரித்துவரும் ஒருமைப்பாடு காரணமாகவே புதிய வெற்றிகள் ஈட்டப்பட்டன என்பதை இவை யாவும் தெளிவாகக் காட்டுகின்றன. மகத்தான அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப்பின் கழிந்த ஆண்டுகளில் ஏகாதிபத்திய ஆதிக்க வட்டம் பெருமளவுக்குச் சுருங்கிவிட்டது; அது வெகுவாகப் பலவீனமடைந் துள்ளது; அதில் உள்ளார்ந்துள்ள முரண்பாடுகள் மேலும் ஆழமும் கூர்மையும் அடைந்துள்ளன; முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி தொடர்ந்து ஆழமடைந்து வருகிறது. முதலாளித்துவ உலகம் கடுமையான பொருளாதார நெருக்கடியை அனுபவித்து வருகிறது. தொழில் துறை மந்தம், ஆயுத உற்பத்திப் போட்டியால் கிளர்த்தி விடப்பட்டுள்ள என்றும் கண்டறியாத பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்ட அதிகரிப்பு, மோசமடைந்துவரும் வாழ்க்கை நிலைமைகள், வேலை நிலைமைகள், தீவிரமாகிவரும் சுரண்டல்—இவைதான் நவீன முதலாளித்துவத்தின் அண்மைக்கால எழுச்சியின் விளைவுகள்.

முதலாளித்துவ ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்த பல நூற்றாண்டு களின்போது, அது உழைப்பாளி மக்களின் அநேக தலைமுறையினர்க்கு எத்தனை எத்தனையோ துன்ப துயரங்களை விளைவித்தது. அது ஏராள மான குற்றங்களைப் புரிந்தது. இவற்றில் மிக மோசமானவை அது கட்டவிழ்த்துவிட்டு, லட்சக்கணக்கான மனித உயிர்களை காவுகொண்ட இரண்டு உலக யுத்தங்கள். "நாகரீகமான" காட்டு மிராண்டித்தனத் தைக் கொண்ட ஓர் அமைப்புக்கு, சாவையும் நாசத்தையும் விதைக்கும் ஓர் அமைப்புக்கு, மனிதகுலம் ஜீவித்திருப்பதையே அச்சுறுத்தும் ஓர் அமைப்புக்கு எதிர்காலம் இருக்கமுடியாது. இத்தகைய அமைப்பின் கதி வரலாற்றால் தீர்மானிக்கப்பட்டு விட்டது.

தேச விடுதலை இயக்க அரங்கிலும் ஏகாதிபத்தியம் கடும் தோல்வி களைக் கண்டு வருகிறது. எனினும் ஏகாதிபத்தியத்தின் பொதுப் பின்னடைவானது கிட்டிய ஆதாயங்களைக் காக்கும் நோக்கம் கொண்ட உக்கிரமான தற்காப்புப் போர்களையும், பக்கவாட்டு வியூகங்களையும், இன்னும் சொல்லப்போனால் தற்காலிக எதிர்த்தாக்குதல்களையும் விலக்கி விடவில்லை. ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் தனது நிலைகளைப் பாதுகாப்பதற்கும், ஏன் விஸ்தரிப்பதற்கும்கூட ஏகாதிபத்தியம்

எத்தகைய முறைகளைக் கையாளவும் தயாராக இருக்கிறது. இன்று ஏகாதிபத்தியமும் நவீன காலனி ஆதிக்கமும் அப்பட்டமான அரசியல் நிர்ப்பந்த முறைகளில் ஈடுபடுவதுடன் நின்று விடுவதில்லை. அவை நாசூக்கான பொருளாதார நிர்ப்பந்த முறையைக் கைக்கொள்கின்றன; வளரும் நாடுகளில் சித்தாந்தப் படையெடுப்பு நடத்துகின்றன; முன்னாள் காலனி நாடுகளிலும் அரைக் காலனி நாடுகளிலும் தனிப்பட்டத் தலைவர்களையும் சமூக–அரசியல் குழுக்களையும் லஞ்சம் கொடுத்து வசப் படுத்துகின்றன.

காலனி நுகத்தடியைத் தூக்கியெறிந்துவிட்டு, தமது சமூக வாழ்க்கையை சோஷலிச ரீதியில் மாற்றியமைக்க முற்படும் நாடுகள்மீது ஏகாதிபத்தியவாதிகள் முக்கியமாக கடும் கோபம் கொண்டுள்ளனர். வீரமிக்க வியத்நாம் மக்களுக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்திய ஆக்கிரமிப்பிலிருந்து இதனைத் தெரிந்து கொள்ளலாம். கியூபாவில் புரட்சி இயக்கத்தை ஒடுக்கவும், அந்த நாடு சோஷலிச மாற்றங்கள் பாதைக்கு மாறிச் செல்லுவதைத் தடுக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் திரும்பத் திரும்ப செய்த முயற்சிகளும் இதற்கு சான்று பகர்கின்றன. ஆனால் கியூபா மக்களின் மனத் திண்மை, வீரம், அவர்களது தீரமிக்க போராட்டத்துக்கு முற்போக்குமனிதகுலம் முழுவதும் அளித்த ஆதரவு, சோஷலிச நாடுகள், முக்கியமாக சோவியத் யூனியன் மேற்கொண்ட நிலை ஆகியவை அந்த சுதந்திர வீரத் தீவு தனது புரட்சி ஆதாயங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உதவி செய்தன. கம்யூனிஸ்டுக் கட்சியின் வழிகாட்டுதலுடன் கியூபா மக்கள் தமது நாட்டில் ஒரு சோஷலிச சமுதாயத்தை வெற்றிகரமாக நிர்மாணித்து வருகின்றனர். "நியாயத்திற்காகவும் சுதந்திரத்திற்காகவும் உறுதியாகப் பாடுபட்டும், தனது வியர்வையையும் இரத்தத்தையும் சிந்தியும், புரட்சி லட்சியங்கள் பால் விசுவாசம் கொண்டும் எங்கள் மக்கள் சோஷலிச லட்சியத்துக்குத் தமது பங்கை ஆற்றியுள்ளனர். ஆனால் அக்டோபர் புரட்சி இல்லை என்றால் உங்களது சோதர ஆதரவும் ஒருமைப்பாடும் இல்லை என்றால், லெனின் தோற்றுவித்த அரசு இல்லை என்றால் இவற்றைப்பற்றி எல்லாம் நினைத்துப் பார்க்கவும் முடியாது" என்று சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 25-வது காங்கிரசில் பேசும்போது பிடெல் காஸ்ட்ரோ குறிப்பிட்டார்.

தனக்குப் பிடிக்காத புரட்சி இயக்கத்தின் வளர்ச்சியைத் தடுப்ப தற்கு எல்லா முயற்சியும் செய்துவரும் உலக ஏகாதிபத்தியத்தைப் பொறுத்த வரையில், அதன் கொலை வெறித் தன்மையை சிலி துயர சம்பவத்தில் தெளிவாகக் காணலாம். சட்ட பூர்வமான பாப்புலர் யூனிட்டி அரசாங்கம் பின்பற்றி வந்த முற்போக்கு ஜனநாயகக் கொள்கை வழியை சகிக்காத ஏகாதிபத்தியவாதிகள் அந்த நாட்டின் உள்விவகாரங் களில் பகிரங்கமாகத் தலையிட்டனர்; தங்கள் நடவடிக்கைகள் மூலம்

அங்கு ராணுவக் கும்பலின் பாசிஸ்டு ஆட்சி ஏற்படத் துணை புரிந்தனர். அங்கோலாவில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பும், ஜய்ரேயின் உள் விவகாரங்களில் அந்நியத் தலையீடும் எதைக் காட்டுகின்றன? காலனி அமைப்பை உயிர்ப்பிக்கும் தமது முயற்சியில், இழந்த தமது நிலைகளை ஏதேனும் ஒரு வடிவத்தில் திரும்பப் பெறும் தமது முயற்சியில், ஏகாதி பத்தியவாதிகள் விடுதலை இயக்கத்தை ஒடுக்குவதற்காக, காலனி யுத்தங்களைக் கட்டவிழ்த்து விடுவது உட்பட பல்வேறு முறைகளைக் கைக்கொள்கின்றனர்.

வளரும் நாடுகளுக்கும் அவற்றின் மக்களுக்கும் எதிரான பகிரங்க ஆக்கிரமிப்புடன் தேசவிடுதலை இயக்கத்தின் மீது நிர்ப்பந்தம் கொண்டு வரும் பல்வேறு வடிவங்களை நவீன காலனி ஆதிக்கம் பிணைக்கிறது. சுயாதிக்கம் பெற்ற இளம் நாடுகளுக்கு வழங்கப்படும் மான்யங்களையும் கடன்களையும் அவற்றின் கொள்கையைத் தனக்கு சாதகமாகத் திருப்பும் ஒரு நெம்புகோலாக ஏகாதிபத்தியம் பயன் படுத்துகிறது. பெருமளவில் தம்பட்டமடிக்கப்படும் உதவியானது பல சந்தர்ப்பங்களில் உண்மையில் வளரும் நாடுகள் மீது முதலாளித்துவ ஆணைகளை திணிக்கவே பயன் படுத்தப்படுகிறது.

பெரிய ஸ்தல பூர்ஷுவாக்கள் இருந்துவரும் நாடுகளில் ஏகாதிபத்திய வாதிகள் முக்கியமாக அவர்கள் மீதுதான் நம்பிக்கை வைத்துள்ளனர். ஆனால் முன்னாள் காலனி உலகில் இத்தகைய நாடுகள் மிகச் சிலவே உள்ளன. இந்தக் காரணத்தினால், நவீன காலனி ஆதிக்கவாதிகள் முன்னாள் காலனி நாடுகளிலும் அரைக் காலனி நாடுகளிலும் தமது செல்வாக்கின் சமூக அடித்தளத்தை விரிவுபடுத்த முயன்று வருகின்றனர்.

எனினும் இத்தகைய முயற்சிகளை முற்போக்கு சக்திகள் உறுதியாக எதிர்த்து வருகின்றன; இந்த சக்திகள் முதலாளித்துவத்தையும் காலனி ஆதிக்கத்தையும் மிகச் சரியாகவே ஒன்றாகக் கருதுகின்றன. வளரும் நாடுகளின் மக்கள் தமது வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை காலத்திற்கு ஒவ்வாத சமூக அமைப்பான முதலாளித்துவத்துடன் பிணைக்காமல், முன்னேற்றமடைந்த சமூக அமைப்பான சோஷலிசத்துடனேயே பிணைக் கின்றனர். ஏனென்றால், எதிர்காலம் சோஷலிசத்துக்கே சொந்தமானது இன்று மேன்மேலும் அதிகமான வளரும் நாடுகள் சமூக முன்னேற்றப் பாதையை மேற்கொண்டு வருகின்றன. சோஷலிச திசைவழியை ஆதரிக்கும் நாடுகளின் அணிகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் எதியோப்பியா, பெனின், அங்கோலா, மொசாம்பிக், கினி– பிஸ்ஸாவ், மடகாஸ்கர், லிபியா, கேப் வெர்டே தீவுகள் ஆகியவை சேர்ந்துள்ளன. சோஷலிச திசைவழியில் செல்லும் ஏராளமான நாடுகள் இப்போது ஆசியா, ஆப்பிரிக்காவில் தோன்றியுள்ளன; இவற்றின் மொத்த மக்கட்

தொகை சுமார் 15 கோடி; மொத்த பரப்பு 1 கோடி 20 லட்சம் சதுர கிலோமீட்டர்.

சோஷலிச திசைவழியில் செல்லும் நாடுகள் தேசவிடுதலை இயக்கத்தின் முன்வரிசையில் நின்று முன்னேறி வருகின்றன. அவை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, அரசியல், பொருளாதார சுதந்திரத்தைப் பலப்படுத்துவதற்காக உறுதியாகப் போராடி வருகின்றன. இந்த நாடுகளில் சுரண்டல் உறவுகள் ஒழித்துக் கட்டப்பட்டு வருகின்றன; அரசியல், சமூக வாழ்க்கை ஜனநாயகப்படுத்தப்பட்டு வருகிறது; தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையேயுள்ள நேச உறவு பலப்படுத்தப்பட்டு வருகிறது; விஞ்ஞான சோஷலிசக் கருத்துக்களைப் பின்பற்றும் முன்னணிக் கட்சிகள் நிறுவப்பட்டு வருகின்றன.

பல நாடுகளில் மார்க்சியம்–லெனினியமும் தேசவிடுதலை இயக்கமும் படிப்படியாக ஒன்றுகலந்து வருவதை நாம் காண்கிறோம். தேசவிடுதலை இயக்கப் பிராந்தியத்தில் மார்க்சிய-லெனினியக் கருத்துக்கள் பரந்த அளவில் பரவி வருதல், உலக சோஷலிசத்தின் செல்வாக்கு பெருகி வருதல், வர்க்க சக்திகளை வரையறுக்கும் நிகழ்வு தீவிரமடைதல் ஆகியவை புரட்சி–ஜனநாயகக் கட்சிகள் மேன்மேலும் மார்க்சியக் கோட்பாடுகளை ஆதரிக்கும் ஒரு நிலையைத் தோற்றுவித்துள்ளன. "தேசிய-காலனி பிரச்சினை சம்பந்தமான மார்க்சிய–லெனினியக் கோட்பாடுகள் கிழக்கத்திய தேசங்களின் விடுதலைப் போராட்டத்தின்போது வெற்றிகரமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டன. அக்டோபர் புரட்சி இத்தேசங்களுக்கு உறுதிமிக்க உத்வேகம் அளித்தது. சோவியத் யூனியனின் உதயம் இத்தேசங்களின் துரிதமான வளர்ச்சிக்கு மிக முக்கிய வரலாற்று அம்சமாக விளங்கிற்று" என்று வியத்நாம் மக்களின் தலைவரான ஹோ சி மின் எழுதினர்.

அயல்நாட்டுக் கொள்கைத் துறையில் வளரும் நாடுகளின் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க எழுச்சி பெற்றுள்ளன; இது, இந்நாடுகளது போராட்டத்தின் இன்றைய கட்டத்தின் ஒரு சிறப்பாகும். இதனை பல திசைவழிகளில் காண்கிறோம்: கூட்டுச் சேராமை இயக்கத்தின் அரசியல் கொள்கை வழியில், ஆப்பிரிக்க ஒற்றுமை நிறுவனத்தின் நடவடிக்கைகளில், வளரும் நாடுகள் அமைத்துள்ள பல்வேறு பொருளாதாரக் கூட்டிணைவுகளில் இதனைக் காண்கிறோம். சமாதானத்துக்கும், மக்களின் பந்தோபஸ்துக்கும், சர்வதேசப் பதற்றநிலைத் தணிவுக்குமான பொதுப் போராட்டத்துக்கு இந்த நாடுகளின் பங்கு இடையறாது அதிகரித்து வருகிறது. வளரும் நாடுகளின் முற்போக்கான அயல்நாட்டுக் கொள்கை வழி சர்வதேசச் சூழ்நிலை முழுவதையும் மேம்படுத்த உதவுகிறது; இன்றைய சர்வதேச உறவுகள் சமத்துவ, ஜனநாயக அடிப்படையில் வளர்வதற்குத் துணைபுரிகிறது. வளரும் நாடு

களது இந்தநிலை, குறிப்பாக, தெளிவான ஏகாதிபத்திய–எதிர்ப்பு திசைவழி கொண்ட கூட்டுசேரா அரசியல் கொள்கைவழி சோவியத் யூனியனாலும், சோஷலிசக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகளாலும், சமாதானத்தையும் சர்வதேச பந்தோபஸ்தையும் ஆதரிக்கும் அனைவராலும் நன்கு புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

இளம்அரசுகளின் சட்டபூர்வமான ஆர்வவிருப்பங்களை, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கும் சுரண்டலுக்கும் எதிரான அவற்றின் போராட்டத்தை, தமது உள்விவகாரங்களைத் தாமே தீர்த்துக்கொள்ள அவற்றுக்குள்ள உரிமையை சோவியத் யூனியன் பூரணமாக ஆதரிக்கிறது. மத்தியக் கிழக்கில் ஒரு சமாதானபூர்வமான தீர்வுக்கு சோவியத் யூனியன் முன் வைத்துள்ள ஆக்கபூர்வமான யோசனைகளை இந்தக் கண்ணோட்டத்தி லிருந்துதான் நாம் பார்க்கவேண்டும். ஆக்கிரமித்துக் கொள்ளப்பட்ட எல்லா அரபு பிரதேசங்களிலிருந்தும் இஸ்ரேல் துருப்புகள் வாபசாக வேண்டும், இப் பிராந்தியத்தைச் சேர்ந்த எல்லா அரசுகளும் சுதந்திரமாக இருந்து வரவும். பந்தோபஸ்துக்கும் அவற்றுக்குள்ள உரிமையை அங்கீ கரிக்க வேண்டும், சுயநிர்ணய உரிமையையும், தமது சொந்த அரசை அமைத்துக்கொள்ளும் உரிமையையும் ஏற்றுக்கொள்வது உட்பட பாலஸ்தீன அரபு மக்களின் நியாயமான நேரிய கோரிக்கைகளை நிறை வேற்றவேண்டும் என்று சோவியத் யோசனைகள் வலியுறுத்துகின்றன.

அந்நிய ஏகபோகத்தின் சொத்துகளைத் தேசியமயமாக்குவது பொரு ளாதார சுதந்திரத்திற்காக வளரும் நாடுகள் நடத்தும் போராட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாகும். முந்தைய பத்தாண்டுக் காலத்துடன் ஒப்பிடும்போது இப்போது தேசியமய வேகம் இரண்டு மடங்கு உயர்வாக இருக்கிறது. பல வளரும் நாடுகளில், எண்ணெய் உற்பத்தி, எண்ணெய்ச் சுத்திகரிப்பு, பாக்ஸைட், பாஸ்பேட், இரும்பு, தாமிரம் ஆகியவற்றை வெட்டியெடுத்தல், வங்கிகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் போன்ற முக்கியமான துறைகளில் அந்நிய சொத்துகள் தேசியமயமாக்கப்பட் டுள்ளன. இந்த முன்னணியின் வீரியமிக்க முற்போக்குத் தன்மை மேன்மேலும் தெளிவாகப் புலனாகி வருகிறது; இது இடையறாது விரி வடைந்து, இப்போது தனித்தனி நாடுகளை மட்டுமன்றி, அநேகமாக தேச விடுதலை இயக்கத்தின் முழுப் பிராந்தியத்தையே தன்னுள் கொண் டுள்ளது. சர்வதேச ஏகபோகங்களை எதிர்த்து இங்கொன்றும் அங் கொன்றுமான தனித்தனி மோதல்களுக்குப் பதில், இன்று வளரும் நாடுகள் ஒன்றுபட்ட கூட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு கின்றன; உலகப் பொருளாதாரம் முழுவதன் கட்டுக்கோப்புக்குள் உற்பத்தி, வர்த்தகம் சம்பந்தப்பட்ட பொதுவான, முக்கியமான பிரச் சினைகளை வரையறுப்பதன் அடிப்படையில் அமைந்தவை இந்த நடவடிக்கைகள்.

பொருளாதார சுதந்திரத்திற்காக வளரும் நாடுகள் நடத்தும் போராட்டம் சமாதான நேய சக்திகளின் முயற்சிகளுடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளது ; இந்த சக்திகள் ஆயுத உற்பத்திப் போட்டியை எதிர்க்கின்றன ; பொதுவான, பூரண படைக்குறைப்பை ஆதரிக்கின்றன. ஆயுத உற்பத்திப் போட்டி உழைப்பாளி மக்கள்மீது பெரும் பளுவைச் சுமத்துவது வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளில் மட்டுமே அல்ல. அது வளரும் நாடுகள் தமது ராணுவ பட்ஜெட்டுகளை அதிகரிக்கும்படியும், ஏராளமான பொருளாயத, நிதி வளங்களை ஆக்கப் பணிகளிலிருந்து திருப்பிவிடும்படியும் நிர்ப்பந்திக்கிறது. தற்போது உலகில் ராணுவச் செலவுகள் வளரும் நாடுகளுக்கு அதிகாரபூர்வமான சர்வதேசப் பொருளாதார உதவித் தொகையைவிட 30 மடங்கு அதிகமாக உள்ளன. இந்தப் பணத்தில் ஒரு பகுதி பொருளாதார, சமூக வளர்ச்சிக்குச் செலவிடப்பட்டால் வளரும் நாடுகளின் நிலை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்ப்பது கடினமல்ல. பந்தோபஸ்துக் கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர் நாடுகள் தமது ராணுவ பட்ஜெட்டுகளில் பத்து சதவிகிதத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம் மிச்சமாகும் பணத்தின் ஒரு பகுதியை வளரும் நாடுகளுக்கு உதவ பயன்படுத்த வேண்டும் என்று சோவியத் யூனியன் ஒரு யோசனை முன்வைத்துள்ளது. படைக்கலங்களை ஓரளவு குறைத்து, ஆயுதப் படைகளின் இப்போதைய எண்ணிக்கையை மேலும் உயராமல் அப்படியே வைத்திருப்பதே கூட சமாதான லட்சியத்துக்கும் சர்வதேசப் பந்தோபஸ்துக்கு மட்டுமின்றி, தேசங்களின் ஒட்டுமொத்த பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். ஒரு நியாயமான, நேர்மையான அடிப்படையில், உலகப் பொருளாதார உறவுகளைப் புனரமைப்பதற்கும், வளரும் நாடுகள் ஆர்வமுடனும் அக்கறையுடனும் வலியுறுத்தி வருகின்ற ஒரு புதிய பொருளாதார அமைப்பை உலகில் நிறுவுவதற்கும் சாதகமான நிலைமைகளை இது தோற்றுவிக்கும்.

தேசிய, சமூக விடுதலைச் சக்திகள் வெற்றிகரமாக வளர்ச்சியுறுவது உலக ஏகாதிபத்திய-எதிர்ப்பு முன்னணியின் எல்லாப் படைப் பிரிவுகளது போர்க்குணமிக்க ஒற்றுமையையும், வளரும் நாடுகளது மக்களை உலக சோஷலிசக்கூட்டமைப்பை சேர்ந்த நாடுகளுடனும், நம் காலத்தின் சகல புரட்சி,ஜனநாயகஇயக்கங்களுடனும் வலுவானபந்தங்களால்பிணைக்கின்ற உறுதியான சோதர கூட்டணியையும் தீர்மானகரமாக பொறுத்துள்ளது. இந்த சக்திகளின் ஒற்றுமைக்கான போராட்டம் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் சோவியத் அரசுக்கும் விசேட அக்கறைக்குரியதாக இருந்தது, இப்போதும் இருந்து வருகிறது. ஒன்றுபட்ட ஏகாதிபத்திய-எதிர்ப்பு முன்னணியைப் பிளவுபடுத்தும் எந்த முயற்சிகளையும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி எதிர்த்து வந்துள்ளது, இனியும் அவ்வாறே எதிர்த்து வரும்.

இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்பட்டும், போராடும் மக்களின் நலன்களைக் கணக்கிலெடுத்துக்கொண்டும், நாங்கள் சீன மாவோயிசத் தலைமையின் பிளவுவாதக் கொள்கை வழியை எதிர்த்து விட்டுக்கொடுக்காத போராட்டம் நடத்தி வருகிறோம்; சீனத் தலைமை நாடுகளிடையே அவநம்பிக்கையையும் பகைமையையும் தூவிவருகிறது; தேச விடுதலை இயக்கத்துக்கும் உலக சோஷலிசக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகளுக்கும் இடையே பிளவு ஏற்படுத்தவும், நம் காலத்தின் இந்தப் புரட்சி சக்திகளை ஒன்றுக்கெதிராக ஒன்றை ஏவிவிடவும், அவற்றின் வளர்ந்துவரும் நேச உறவைச் சிதைக்கவும் முயன்று வருகின்றன.

எல்லாப் புரட்சி, ஜனநாயக இயக்கங்களும் நெருக்கமாக ஒன்றுபட வேண்டிய அவசியம் உலகக் கம்யூனிச இயக்கம் தோன்றியதுடன்கூடவே சேர்ந்து பிறந்தது. இன்று உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் நம் காலத்தின் மிகவும் செல்வாக்கு வாய்ந்த அரசியல் சக்தியாகப் பரிணமித்துள்ளது. உலக ஏகாதிபத்திய-எதிர்ப்பு சக்திகளது ஒற்றுமை ஏற்கெனவே காலனி அமைப்பு சிதைவதற்கு வழிகோலியுள்ளது; ஏகாதிபத்திய அடிமைத்தனத்திலிருந்து தப்பும் உண்மையான வாய்ப்புக்களை காலனி நாடுகளையும், சார்பு நாடுகளையும் சேர்ந்த மக்களுக்கு திறந்துவிட்டுள்ளது. தேசிய சமூக விடுதலைக்கான கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை அவர்களுக்கு அளித்துள்ளது. மார்க்சிய—லெனினியத்தின் தத்துவம் நடைமுறையின் பொதுவான தன்மை; ஏகாதிபத்தியம், காலனி ஆதிக்கம், நிறவெறி ஆகியவற்றை எதிர்த்தும், சமாதானம் ஜனநாயகம் சோஷலிசத்திற்காகவும் நடைபெறும் போராட்டத்தில் உழைக்கும் மக்களும் ஒடுக்கப்பட்ட வெகு ஜனங்களும் புதிய, மேலும் தலைசிறந்த வெற்றிகள் பெறுவதற்கு உறுதியான உத்தரவாதம்—வாகை சூடிய சோஷலிசத்தின் சர்வதேசத் தன்மை இவற்றில் மிகத் தெளிவாக வெளிப்பாடு அடைந்துள்ளது.

ஒரேமாதிரியான மாபெரும் ஆர்வ விருப்பங்களாலும், இறுதி லட்சியங்களில் நிலவும் ஒற்றுமையாலும் எங்களுடன் பிணைக்கப்பட்டுள்ள எங்கள் தோழர்களும், நண்பர்களும் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த சகல மக்களின் தேச விடுதலை, சமூக முன்னேற்றம் எனும் நியாயமான லட்சியம் முழு வெற்றிவாகை சூடுவதற்கான போராட்டத்தில் பெரும் வெற்றிகள் பெற மனப்பூர்வமாக வாழ்த்துகிறோம்.

# நவீன காலனி ஆதிக்கத் திட்டம் வெகுவிரைவில் தோல்வியுறும்

**பி. என். பெதோசிவ்,**
*துணைத்தலைவர், சோவியத் விஞ்ஞானப் பேரவை*

சுதந்திரமான, சமத்துவமான குடியரசுகளின் உடைக்க முடியாத ஒன்றியம், சோவியத்துகளது நாட்டில் வாழும் பல்வேறு தேசிய இன மக்களின் சகோதரத்துவம், நட்புறவு ஆகியவை மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி ஈட்டிய மிக அரிய சாதனைகளாகும். தேசிய இன உறவுகள் பற்றிய லெனினியக் கோட்பாடுகளின் மாபெரும் ஜீவ சக்தியை சோவியத் அரசின் வரலாறு தெளிவாக மெய்ப்பிக்கிறது. கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசும் ஜார்கால ரஷ்யாவின் பழைய எல்லைப்புற பிரதேசங்களின் தொன்னெடுங்காலப் பின்தங்கிய நிலையை ஒழித்துக் கட்டின; அவை துரிதமாக பொருளாதார, கலாசார வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்பை உத்தரவாதம் செய்தன; தேர்ச்சி பெற்ற ஸ்தல ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்கான நிலைமைகளைத் தோற்றுவித்துத் தந்தன.

இன்று பல—தேசிய இன சோவியத் மக்களின் குடும்பமானது கம்யூனிச நிர்மாணம் சம்பந்தப்பட்ட பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த உழைப்பாளி மக்களிடையே அவசியமாக நிலவ வேண்டிய நட்புறவுக்கும், சோதர ஒத்துழைப்புக்கும் ஓர் அற்புத முன்மாதிரியாக விளங்குகிறது.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியானது சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் எல்லாப் படைப் பிரிவுகளுக்கும் சக்தி வாய்ந்த புரட்சிகர உத்வேகத்தை அளித்துள்ளது; காலனி நாடுகளிலும் அரைக் காலனி நாடுகளிலும் தேசவிடுதலை இயக்கம் வளர்ச்சியுறுவதற்குப் புதிய சாத்தியக் கூறுகளையும் வாய்ப்புக்களையும் திறந்து விட்டுள்ளது. அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு சர்வதேச அரங்கில் சக்திகளின் பரஸ்பர நிலை மாறிற்று; ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டத்திற்கு சமூக ஆதரவை விரிவுபடுத்துவது பற்றியும், அதில்

சமுதாயத்தின் பரந்த பகுதியினரை ஈடுபடுத்துவது பற்றியும் லெனின் தமது நிர்ணயிப்புகளை வகுப்பதற்கு இது துணைபுரிந்தது.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு, இந்தப் புவிக் கோளின் அரசியல், சமூக அம்சங்கள் அடையாளம் தெரியாதபடி மாறி விட்டன. இரண்டாம் உலக யுத்தத்தில் பாசிஸமும், ஜப்பானிய ராணுவாதிக்கமும் முறியடிக்கப்பட்டதும், ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பல நாடுகளில் சோஷலிசப் புரட்சிகள் வெற்றிவாகை சூடியதும் ஓர் உலக சோஷலிச அமைப்பு தோன்றுவதற்கு வழிகோலின. சர்வதேச அரங்கில் சக்திகளின் உறவில் தீவிர மாற்றம் ஏற்பட்டதன் பயனுயும், தேசவிடுதலைப் போராட்டம் மாபெரும் எழுச்சி கண்டதன் பயனுயும் ஏகாதிபத்தியத்தின் காலனி அமைப்பு சிதைவுண்டது. அவமானகரமான காலனி அமைப்பின் மிச்ச சொச்சங்களை இறுதியாக ஒழித்துக்கட்டும் பணி இப்பொது நடைபெற்று வருகிறது.' இன்று தேச விடுதலைப் போராட்டம் நவீன காலனி ஆதிக்கத்திற்கு எதிராக நடைபெற்று வருகிறது.

புதிதாக விடுதலை அடைந்த நாடுகள் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் தமது அரசியல், பொருளாதார உரிமைகளை முழு பலம் கொண்டு பாதுகாத்து வருகின்றன; தமது சுதந்திரத்தைப் பலப் படுத்தவும், தமது மக்களின் சமூக, பொருளாதார, கலாச்சார வளர்ச்சித் தரத்தை உயர்த்தவும் பாடுபட்டு வருகின்றன.

அண்மை ஆண்டுகளில் பல நாடுகள் சோஷலிச திசைவழியை மேற் கொண்டுள்ளன; தற்காலத்தில் பின்தங்கிய நாடுகள், முதலாளித்துவக் கட்டத்துக்குச் செல்லாமலேயே சோஷலிசம் நோக்கி முன்னேறிச் செல்லுவது சாத்தியம் என்ற லெனினியக் கோட்பாட்டின் உண்மையை இது முழு அளவுக்கு நிரூபிக்கிறது. சோஷலிச திசைவழியில் செல்லும் அரபு, ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளின் பொருளாதார, அரசியல் வாழ்வில் குறிப்பிடத்தக்க வெற்றிகள் சாதிக்கப்பட்டுள்ளன.

முன்னுள் காலனி, அரைக்காலனி நாடுகளில் தமது ஆதிக்கத்தை இழந்துவிட்டதை ஏகாதிபத்தியவாதிகள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இந்த நாடுகளில் ஏகாதிபத்திய வல்லரசுகளும், பிற்போக்கு சக்திகளும் இளம் அரசுகள் எதிர்ப்படநேரும் எண்ணற்ற இக்கட்டுகளையும், காலனி ஆதிக்கம் விட்டுச்சென்ற அவற்றின் பொருளாதாரப் பின்தங்கிய நிலையையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயன்று வருகின்றன.

அரசுரிமை படைத்த பல நாடுகளின் பிரதேசத்தில் ஏகாதிபத்திய ராணுவ தளங்கள் இன்னமும் இருந்து வருகின்றன. இவை தேசவிடுதலை சக்திகள் மீது நேரடியான ராணுவ, அரசியல், சித்தாந்த நிர்ப்பந்தத்தைக் கொண்டுவரும் மிக அபாயகரமான காவல் அரண்களாகும். சர்வதேசப் பதற்றநிலைத் தணிவு இயக்க நிகழ்வுகளைச் சீர்குலைப்பதில் முனைந்து

ஈடுபட்டுள்ள தற்கால நவீன காலனியாதிக்கவாதிகள் மூன்றும் உலகில் ஸ்தல மோதல்களையும் யுத்தங்களையும் தூண்டிவிட முயன்று வருகிறார்கள். இதனால் பல சந்தர்ப்பங்களில் ஏகாதிபத்திய நாடுகள் பகிரங்கமான ஆக்கிரமிப்பில் ஈடுபடும் நிலை ஏற்படுகிறது.

ஏகாதிபத்தியவாதிகள் எதிர்ப் புரட்சிக் கலகங்களையும், திடீர் ஆட்சிக் கவிழ்ப்புகளையும், முற்போக்குத் தலைவர்களுக்கு எதிராக பயங்கரவாத செயல்களையும் முன்னின்று ஏற்பாடு செய்கின்றனர். அவர்கள் ஜனநாயக விரோத சர்வாதிகாரங்களுக்கு உதவி புரிகின்றனர், அவற்றுக்கு முட்டுக் கொடுக்கின்றனர்; தேசிய இன, குல முறை பிணக்குகளை உசுப்பிவிடுகின்றனர்; வலதுசாரி குறுகிய தேசியவாத, பிரிவினை இயக்கங்களை ஊக்குவிக்கின்றனர்; கம்யூனிச- எதிர்ப்பு, நிற வெறி, தேசிய வெறிப் பிரசாரத்தை முடுக்கி விடுகின்றனர்.

முன்னாள் காலனிகளும் சார்பு நாடுகளும் கொள்ளையடிக்கப்பட்ட தற்கும், அவற்றின் பின் தங்கிய பொருளாதார, கலாசார நிலைக்கும் தாம் எவ்வகையிலும் பொறுப்பல்ல என்று கூறித் தப்பித்துக்கொள்ள ஏகாதி பத்திய நாடுகள் முக்கியமாக முயற்சி செய்கின்றன. இவ்விஷயத்தில், நவீன காலனி ஆதிக்கவாதிகளுக்கு குட்டி பூர்ஷுவா சாகசவாதிகள் சுறுசுறுப்பாக உதவுகின்றனர்; இவர்கள் இந்தப் பொறுப்பை ஏகாதி பத்திய நாடுகளும் சோஷலிச நாடுகளும் சேர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகின்றனர்; வளரும் நாடுகளை சோவியத் யூனிய னுக்கும் உலக சோஷலிசக் கூட்டமைப்பு முழுவதற்கும் எதிராகக் கொண்டுபோய் நிறுத்த முயலுகின்றனர்.

மேலைய நாடுகளிடம் ஏராளமான நிதி, பொருளாயத, தொழில் நுட்ப வளங்களும், பிரம்மாண்டமான பிரசார எந்திரமும் இருந்த போதிலும், காலனி ஆதிக்கம் தனித்தனி நாடுகளிலும் முழுப் பிரதேசங் களிலும் தோல்விமேல் தோல்வி கண்டுவருகிறது. முடிவாகப் பகுத்தாய்வு செய்யுமிடத்து, நவீன காலனி ஆதிக்கத் திட்டம் வெகுவிரைவிலேயே தோல்வியுறுவது திண்ணம் என்பதை வரலாற்று வளர்ச்சிப் போக்கு காட்டுகிறது. ஏகாதிபத்தியத்தையும், நவீன காலனி ஆதிக்கத்தையும் எதிர்த்து, பொருளாதார சுதந்திரத்துக்காகவும், சமத்துவமான, நேர்மை யான சர்வதேசப் பொருளாதார உறவுகளுக்காகவும், ஏகாதிபத்தியச் சுரண்டலிலிருந்து பூரணமாக விடுபடுவதற்காகவும், தமது எதிர்காலத் தைத் தாமே நிர்ணயித்துக்கொள்ளும் உரிமைக்காகவும் இளம் வளரும் நாடுகள் நடத்திவரும் போராட்டத்தில் அவற்றுக்குசோவியத் யூனியனும், இதர சோஷலிச நாடுகளும் எல்லா ஆதரவும் அளித்து வருகின்றன. இந்த ஆதரவில் உலக சோஷலிசத்துக்கும் தேசிய விடுதலைக்கும் இடையே உள்ள வலுமிக்க நேச உறவு நடைமுறையில் பிரதிபலிக்கக் காணலாம்.

# சுதந்திர வீரர்களுடனுன ஒருமைப்பாட்டின் கொத்தளம்

**லூயி கோர்வலான்,**

பொதுச் செயலாளர்,
சிலி கம்யூனிஸ்டுக் கட்சி.

அக்டோபர் சோஷலிசப் புரட்சி மனிதகுல வரலாறு முழுவதிலும் மிக ஆழமான மாற்றங்களை ஏற்படுத்திற்று. அக்டோபர் புரட்சி காரணமாக ரஷ்யப் பாட்டாளி வர்க்கம் தன்னைப் பிணித்திருந்த சங்கிலிகளை உடைத் தெறிந்தது; சோஷலிச சகாப்தத்தில் அடியெடுத்து வைத்தது; தமது விடுதலைக்கான மக்களின் போராட்டத்தில் ஒரு புதிய கட்டத்தைத் தொடங்கி வைத்தது.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு மனித குலத்தில் பெரும்பாலோர் சமூக ஒடுக்குமுறையில் மட்டுமன்றி, காலனி ஒடுக்குமுறையிலும் சிக்கி உழன்றனர். காலனி ஆதிக்க 'அமைப்பின் சிதைவானது அக்டோபர் புரட்சியுடனும், எதிர்ப்புரட்சி,' ஏகாதிபத்தியத் தலையீடு ஆகியவற்றின் தோல்வியுடனும், இரண்டாம் உலக யுத்தத்தில் பாசிஸத்தின்மீது சோவியத் யூனியன் பெற்ற வெற்றியுடனும், உலக சோஷலிச அமைப்பின் உதயத்துடனும், சர்வதேச அரங்கில் சோவியத் அரசு பெற்றுள்ள செல் வாக்குடனும், மதிப்புடனும் பிணைந்துள்ளது.

ஜார் ஆட்சி ரஷ்யாவின் பல்வேறு பெரிய, சிறிய தேசிய இனங்களை ஒடுக்கி வந்தது. ஆனால் அக்டோபர் சோஷலிசப் புரட்சி இந்தப் பரந்த நாட்டை சமத்துவ மக்களின் ஒரு குடும்பமாக மாற்றிற்று. லெனினது கருத்துக்களுக்கு இணங்க, சோவியத் யூனியனில் தேசிய இனங்கள் பிரச்சினைக்கு வெற்றிகரமாகத் தீர்வு காணப்பட்டுள்ளது. எல்லா சோவியத் குடியரசுகளும், பிராந்தியங்களும், பிரதேசங்களும், வட்டாரங் களும் சீரான வளர்ச்சி அடைந்தன; இதுவரை அறிந்திராத மூலவளங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. நேற்றுவரை பின்தங்கிய நிலையால் அவதியுற்று, கைக்கும் வாய்க்குமாக கஷ்ட ஜீவனம் நடத்திவந்த மக்கள் இன்று உண்மையிலேயே ஒரு வளம் கொழிக்கும் அரசை அமைத்துள்ளனர்.

சொந்த எழுத்து மொழியைக் கூடப்பெற்றிராதிருந்த தேசிய இனங்கள் இப்போது கலாசாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் எல்லா அனுகூலங்களையும் அனுபவிக்கின்றன. இதர தேசிய இன மக்களுக்குப் பல நூற்றுண்டுக காலம் பிடித்த ஒரு பாதை அறுபதே ஆண்டுகளில் கடந்து வரப்பட்டுள்ளது.

அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட வரலாற்றுச் சிறப்பு படைத்த மாற்றம், தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் வெற்றி, இயல் பாகவே உலக நிலைமையில் ஆழமான செல்வாக்கு செலுத்திற்று. அம்புலியானது அலையை ஆகர்ஷிப்பதுபோல அக்டோபர் புரட்சி பல்வேறு நாட்டு மக்களை ஆகர்ஷித்தது. அது உலகப் பாட்டாளி வர்க் கத்திடம் உற்சாகத்தை ஊட்டி, மனிதகுலத்தின் உள்ளங்களைக் கவர்ந்தது. அக்டோபர் புரட்சியானது சுரண்டலாளர்களிடையே பீதியை விளைவித்தது; ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களுக்கு உண்மையான விமோசன நம்பிக்கையை அளித்தது.

அக்டோபர் புரட்சியின் செல்வாக்கை இன்றளவும்கூடத் தொடர்ந்து உணர்ந்து வருகிறோம். வெற்றிகரமான முதல் சோஷலிசப் புரட்சி, அனுபவத்துக்கும் அறிவுக்கும் தலையூற்ருக விளங்குகிறது; அதன் தலைச்சன் குழந்தையான சோவியத் யூனியன் இன்று உலக நிலைமையில் தீர்மானமான செல்வாக்கு செலுத்தி வருகிறது. இதன் காரணமாக, உலக சக்திகளின் நிலை முற்போக்கு சக்திகளுக்குச சாதகமாக மாறி யுள்ளது.

அண்மை ஆண்டுகளில் சிலி மக்கள் ஒரு புரட்சிகர எழுச்சியின் மகிழ்ச்சியைக் கண்டுள்ளனர்; எதிர்ப்புரட்சியின் பயங்கரங்களையும் கண்டுள்ளனர். ஆயினும் இன்பத்திலும் சரி, துன்பத்திலும் சரி, சோவியத் மக்களதும் அவர்களது மார்க்சிய-லெனினிய முன்னணிப் படையினதும் ஒருமைப்பாடும், ஆதரவும் தம் பக்கம் இருப்பதை எங்கள் மக்கள் பார்க்கின்றனர்.

சிலியில் பாப்புலர் யூனிட்டி அரசாங்கம் பதவியில் இருந்த மூன்ருண்டுக் காலத்தில், அது சோவியத் மக்களுடைய, சோஷலிசக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகளுடைய மதிப்பிடற்கரிய ஆதரவைப் பெற்றிருந்தது. இந்த ஆதரவு தார்மிக ஆதரவு மட்டுமல்ல, பொருளாயத ஆதரவும்கூட.

ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு, சோவியத் யூனியன் சிலி மக்களுக்கு முழு ஒருமைப்பாட்டைத் தெரிவித்தது. லெனின் பிறந்த பூமி சிலி மக்களுடனை ஒருமைப்பாட்டு இயக்கத்துக்குப் பிரதான கொத்தளமாக இருந்தது. இப்போதும் இருந்து வருகிறது. எல்லா சர்வதேச அரங்குகளிலும் சோவியத் யூனியன் சிலி

மக்களை ஆதரித்து வருகிறது; பாசிஸ்டுக் கும்பல் அங்கு அன்றாடம் இழைத்து வரும் குற்றங்களை வன்மையாகக் கண்டித்து வருகிறது. சிலியிலேயேகூட ஆயிரக்கணக்கான மக்கள் மாஸ்கோ வானொலியை ஆர்வமுடன் கேட்கின்றனர். இந்த ஒலிப்பரப்புகள் சோவியத் மக்களின் இதயபூர்வமான ஒருமைப்பாட்டைப் பிரதிபலிக்கின்றன; பாசிஸ்டு ஜெனரல்கள் இழைக்கும் குற்றங்களை அம்பலப்படுத்துகின்றன. இந்த ஒலிபரப்புகள் தலைமறைவுப் போராட்டத்தில் ஒரு வலிமைமிக்க ஆயுத மாக விளங்குகின்றன.

சிலி புரட்சிக்கு ஒரு தற்காலிகப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. எனி னும், சோவியத் யூனியனின் தாராளமான, உறுதியான ஆதரவு தம் பக்கம் இருப்பதால் சிலி போன்ற ஒரு சிறிய நாட்டின் மக்கள்கூட ஓர் இன்பகரமான எதிர்காலத்துக்காக தன்னம்பிக்கையோடு போராட முடியும் என்ற உண்மையை அது நிலைநாட்டியுள்ளது.

இந்தப் பாடத்தை நாங்கள் கியூபா புரட்சியிடமிருந்து கற்றுக் கொண்டோம். எங்கள் கண்டத்தில் கியூபாதான் முதல் சோஷலிசப் புரட்சியை சாதித்தது. கடந்த பதினெட்டு ஆண்டுகளாக அது அமெ ரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பையும், முற்றுகையையும், சீர்குலைவு நடவடிக்கைகளையும் சமாளித்துத் தன்னை வெற்றிகரமாகத் தற்காத்து வருகிறது. இதற்கெல்லாம் கியூபா மக்களின் வீரமும், பிடெல் காஸ்ட்ரோ வின் உறுதியான புரட்சிகரத் தலைமையும், அத்துடன் சோவியத் யூனிய னும் இதர சோஷலிச நாடுகளும் அளிக்கும் ஆதரவுமே காரணமாகும்.

முதலாளித்துவத்துக்கு முற்பட்ட உற்பத்தி முறையும், சமூக உறவு களும் நிலப்பிரபுத்துவ அல்லது குலமரபு பாணி அரசியல் அமைப்பும் ஆதிக்கம் செலுத்தி வந்த மிகவும் பின்தங்கிய நாடுகள் சுதந்திரம் பெற்று, சோஷலிசத் திசை வழியில் சென்று வருவதை இன்று பார்க்கிறோம். இந்த நாடுகளின் மக்கள் சோவியத் யூனியனையும் இதர சோஷலிச நாடுகளையும் தமது மிகச் சிறந்த நண்பர்களாகக் கருதுகின்றனர். அக்டோபர் புரட்சி யும் சோஷலிசமும் இன்றைய உலகிடம் ஏற்படுத்தும் அனுகூலமான பலனை இதில் தெள்ளத் தெளிவாகக் காண்கிறோம். ஒரு நாடு சுதந்திரப் பாதையை, சமூக முன்னேற்றப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது அது ஒதுக்க நிலையிலிருந்து விடுபடுவதைக் குறிக்கிறது என்பது இப் போது கண்கூடான உண்மையாகி விட்டது. சோவியத் யூனியனும் இதர சோஷலிச அரசுகளும் இத்தகைய நாடுகளை உறுதியாக ஆதரித்து, எல்லாத் துறைகளிலும் அவற்றுடன் ஒத்துழைக்கின்றன.

சோவியத் யூனியன் வளரும் நாடுகளுடன் ஒரு புதுவகையான உறவு களை நிறுவியுள்ளது— இவை உண்மையான நேச உறவுகளாகும். சோவியத யூனியன் இந் நாடுகளின் விவகாரங்களில் ஏகாதிபத்தியத் தலையீட்டைக் கண்டிக்கிறது; அவற்றின் மூலப் பொருள் வளங்கள்

கொள்ளையடிக்கப்படுவதையும், அவற்றின் பொருளாதாரங்கள் உருச் சிதைக்கப்படுவதையும் தடுக்கிறது; அதே சமயம், இந்த நாடுகள் தொழில்களை அமைத்துக் கொள்ளவும், தமது இயற்கை வளங்களை மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்திக் கொள்ளவும் உதவி செய்கிறது; கல்வி நிலையங்களைக் கட்டித் தருகிறது; தொழில்துறை ஊழியர்களை ட பயிற்றுவிக்கிறது— சுருக்கமாகச் சொன்னால் இந் நாடுகள் எல்லாத் துறைகளிலும் முன்னேற உதவுகிறது.

சோவியத் யூனியனது சமாதானக் கொள்கை, சர்வதேசப் பதற்ற நிலைத் தணிவைப் பலப்படுத்த அது எடுத்துவரும் முயற்சிகள், இத் துறையில் அது அடைந்துள்ள வெற்றிகள் ஆகியவை தேச விடுதலை இயக்கம் வளர்ச்சியுறுவதற்கு சாதகமான நிலைமைகளைத் தோற்றுவிக்கிறது.

உலக சமாதானமும், சோவியத் யூனியனின் சோஷலிச அமைப்பு முழுவதன் நிலைகளும் வலுப்படுவதானது மிகவும் ஆக்கிரமிப்பு வெறி கொண்ட ஏகாதிபத்திய வட்டாரங்களைத் தனிமைப்படுத்துகிறது; அந்த வட்டாரங்கள் ஆக்கிரமிப்புக் கொள்கையையும், சுதந்திரத்திற்காகப் போராடும் மக்களின் விவகாரங்களில் ஆயுதந் தாங்கிய தலையீட்டை மேற்கொள்ளும் கொள்கையையும் கடைப்பிடிக்கக் கூடிய சந்தர்ப்பங்களை கட்டுப்படுத்துகிறது.

அக்டோபர் புரட்சியின் 60ம் ஆண்டு விழா உலகெங்கும் உள்ள உழைப்பாளி மக்களின் விழாவாக விளங்குவதுடன், தேச விடுதலைப் பாதையை மேற்கொண்டுள்ள எல்லா மக்களாலும் விரிவாகக் கொண்டாடப்படும் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகத் திகழ்வதற்கும் இதுவே காரணமாகும்.

# ஒரு புது வகையான வல்லரசு

*டாக்டர்* **காசன் ரிபாய்,**
லெபனுன்

அரபுகளால் தமது சொற்பொழிவில் கவிதை உருவங்களைப் பயன் படுத்தாது இருக்க முடியாது. நாங்கள் அக்டோபர் புரட்சியை "கிழக்கு வானில் உதித்த புதிய கதிரவன்" என்று அழைக்கிறோம். எங்கள் நாடு களில் தேச விடுதலையின் வளர்ச்சியில் மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி ஏற்படுத்திய பிரதிபலிப்பை இந்த வாசகம் குறிக்கிறது. இந்தப் பிரதிபலிப்பின் மிக முக்கிய தன்மையை ஒரு சில வார்த்தைகளில் விவரித்துவிட முடியாது என்பது தெளிவு. எனவே, சில முக்கிய அம்சங்களை மட்டுமே இங்கு குறிப்பிடுகிறேன்.

முதலாவதாக, மனித குல வரலாற்றின் நெடுகிலும் ஏதேனும் ஒரு வடிவத்தில் எப்போதும் இருந்து வந்துள்ள அடிமைத்தன, ஒடுக்கு முறை ஆட்சி முறையில் ரஷ்யப் புரட்சி ஒரு வெடிப்பை உண்டு பண்ணிற்று. அதாவது இந்தப் புரட்சியானது மக்கள் சுதந்திரத்துடன் வாழ்வதற்கான சாத்தியக்கூறைத் தோற்றுவித்தது; ஒரு புதிய சகாப்தத்தின் உதயத்தை கட்டியங்கூறி அறிவித்தது.

தலையாய முக்கியத்துவம் வாய்ந்த மற்றொரு அம்சம் தேசிய இனங்கள் பிரச்சினையாகும். தேசிய இனங்கள் பிரச்சினை பற்றிய லெனினியக் கோட்பாடுகளும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் லெனினிய வழிமுறையும் பல்வேறு தேசிய இன ஒடுக்குமுறை வடிவங் களால் அவதிப்பட்டு வந்த, இப்போதும் அவதிப்பட்டு வருகின்ற கிழக் கத்திய நாடுகளின் மக்களுக்கு சிறந்த முன்மாதிரியாக விளங்குகின்றன. இதற்கு முன்னர் சொந்த எழுத்து மொழிகூட இல்லாதிருந்த தேசிய இனங்கள் உட்பட எல்லா பெரிய, சிறிய தேசிய இனங்களது நலன்களுக்கு உகந்த முறையில் தேசிய இனங்கள் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்பதை சோஷலிசம் நிரூபித்துக் காட்டியுள்ளது. தேசிய இனங்கள் பிரச்சினையை சமாளிப்பதில் சோவியத் யூனியன் பெற்றுள்ள அனுபவத்தை ஆராய்வது கம்யூனிஸ்டுகளுக்கு மட்டுமல்லாமல், புரட்சிகர தேசியவாதிகளுக்கும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனினும், தேசிய இனங்கள் பிரச்சினை சம்பந்தமாக எவ்வாறு நடந்து கொள்ள

வேண்டும் என்பதற்கு மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி ஒரு முன்மாதிரியைக் காட்டிவிட்டதால் எங்கள் முன்னுள்ள பாதை எளிதானது என்று கூறிவிட முடியாது. தேசிய இனங்கள் பிரச்சினை மிகவும் சிக்கலானதொரு பிரச்சினை. இதற்குத் தீர்வு காணும்போது சோவியத் யூனியனில் கூட சில சிரமங்கள் எதிர்ப்பட்டன. ஆனால் இந்தச் சிரமங்களை தன்னால் அமைதியாக சமாளிக்க முடியும் என்பதைப் பாட்டாளி வர்க்க சோவியத் ஆட்சி நிரூபித்துக் காட்டியுள்ளது என்பது தான் இங்கு முக்கியமான விஷயம்.

சோவியத் அரசு எவராலும் உதாசீனம் செய்ய முடியாத ஒரு பிரதான உலக சக்தியாகப் பரிணமித்துள்ளது. அரசியல் சுதந்திரத் துக்கான, வளர்ச்சிப் பாதையில் வெற்றிகரமாக முன்னேறுவதற்கான போராட்டத்தை அது இடையருது ஆதரித்து வந்துள்ளது. இத்தகைய ஆதரவு அளிக்கப்பட்ட அதே சமயத்தில் பயனுள்ள பொருளாயத உதவியும் வழங்கப்பட்டது. தேச விடுதலைக்கான எங்கள் போராட்டத் துக்கு நேரடி ஆதரவு என இதனை நாங்கள் வருணிக்கிறோம். இந்த ஆதரவு காரணமாக, சமூக - பொருளாதார முன்னேற்றத்திற்கான பொருளாயத அடித்தளம் கட்டப்பட்டுள்ளது. ஸ்தல அரபு ஊழியர் களைப் பயிற்றுவிப்பதற்கு சோவியத் யூனியன் உதவி புரிந்தது; தொடர்ந்து உதவி புரிந்து வருகிறது. அரபுகளின் தேசவிடுதலை இயக் கத்தில் சோவியத் யூனியன் ஓர் அந்நிய அம்சம் அல்ல என்று திட்ட வட்டமாகக் கூறுவதை இவையாவும் சாத்தியமாக்குகின்றன. சோயவித் யூனியன் அரபு தேசவிடுதலை இயக்கத்தின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக அமைந்துள்ளது.

இன்று சோவியத் யூனியனின் போக்கு அரபு உலகில் நடைபெற்று வரும் அரசியல் போராட்டத்தைப் பிரதிபலிக்கிறது. இதுதான் அரபு தேசபக்திக்கு ஓர் உரைகல். தேசபக்தி என்பது இப்போது ஒரு பரந்த அர்த்தத்தில், சோவியத் யூனியனுடனை நட்புறவு ஓர் இன்றியமையாத அம்சம் என்ற அர்த்தத்தில் புரிந்து கொள்ளப்படுகிறது. உலகெங்கும் உள்ள இதர புரட்சி சக்திகளுடன் உறவுகளை நிறுவி, வளர்ப்பவனே தேச பக்தன்.

சோவியத் யூனியன் ஓர் உறுதியான ஏகாதிபத்திய-எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது என்பதை பல்வேறு நாடுகளின் மக்களும் நன்கு அறிந்துள்ளனர். இது சர்வாம்சக் கொள்கை. அப்படி யானல் இதற்கு என்ன பொருள்? தேசவிடுதலை இயக்கத்தின் நலன் களுக்கு ஆதரவாக சோவியத் யூனியன் ஐக்கிய நாடுகள் சபையில் போராடி வருகிறது. அதே சமயம் இந்த இயக்கத்திற்கு தனது செல்வாக்கைக் கொண்டும் உதவுகிறது. இதற்கு எத்தனையோ உதாரணங்களைக் கூறலாம். பாலஸ்தீனம், முத்தரப்பு ஆக்கிரமிப்பு,

இஸ்ரேல் நடத்திய 1967ஆம் வருட ஆக்கிரமிப்பு, லெபனுன் ஆகியவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை ஆகும். இந்தப் பிரச்சினைகளில் சோவியத் யூனியனது நிலை பிரசித்தமானது. இந்த நிலை மாருதது என்பதை 16வது சோவியத் தொழிற்சங்க காங்கிரசில் லியோனித் பிரெஷ்னேவ் நிகழ்த்திய உரை ஊர்ஜிதம் செய்தது. அங்கோலாவும், வியத்நாமும் இதர உதாரணங்கள்.

போராடும் மக்களுக்கு சோவியத் யூனியன் சர்வாம்ச உதவி புரிந்து வருகிறது. இது, சோவியத் யூனியன் ஒரு புது மாதிரியான வல்லரசு என்று எங்களைக் கூறும்படிச் செய்கிறது. அரபு உலகில் சில பிற்போக்கு வாதிகள் சோவியத் யூனியனை ஒரு வல்லரசு என்று அழைக்கும்போது, அமெரிக்காவுக்குப் பொருந்தக்கூடிய ஒரு பொருளை இந்தக் கண்ணேட்டத்துக்கு அளிக்கின்றனர். அவர்கள் சோவியத் அரசின் அரசியல், சித்தாந்த இயல்பைத் திரித்துக் கூறுகின்றனர். ஆயினும் பிற்போக்கின் இந்த அத்துமீறல்களுக்கிடையிலும் சோவியத் யூனியனது நிலை ஊறு செய்ய முடியாதது. சோவியத் யூனியன் தொழிலாளர்கள், விவசாயிகள் அரசு. சோவியத் யூனியன் தேசவிடுதலைக்கு ஆதரவாகவும், ஏகாதிபத்தியத்துக்கும், வருண இனப் பாகுபாட்டுக்கும் தேசிய இன ஒடுக்குமுறைக்கும் எதிராகவும் போராடும் ஒரு மாபெரும் நாடு. சோவியத் யூனியன் சமாதானத்துக்காகப் பாடுபடும் ஒரு மாபெரும நாடு. எனவே, உலகெங்குமுள்ள முற்போக்கு சக்திகள் இந்த மாபெரும் நாடு இருந்து வருவதையும், அது முன்னேறி வருவதையும் வாழ்த்தி வரவேற்பதில் வியப்பேதும் இல்லை.

# ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் உண்மையான கூட்டாளிகள்

**புக் வாங் குவாங்,**

ஆசிய, ஆப்பிரிக்க மக்களுடன் ஒருமைப்பாட்டுக்கான
வியத்நாம் கமிட்டியின் தலைமைக் குழு உறுப்பினர்

உலக நிலைமைபற்றிய பொதுவான பகுத்தாய்வானது ஏகாதிபத்திய, யுத்த சக்திகளுடன் ஒப்பிடும்போது சோஷலிச புரட்சி சக்திகளின், சமாதான சக்திகளின் ஒப்புயர்வற்ற மேன்மையை நமக்குப் புலப்படுத்து கிறது. இதனால்தான் புரட்சி முன்சென்று தாக்குவதாக உள்ளது. இன்று புரட்சியின் போர்த்தந்திரம் முன்சென்று தாக்கும் போர்த் தந்திரமாக அன்றி வேறு எதாகவும் இருக்க முடியாது; யுத்தக் கொள்கையை ஆதரிப்போரிடமிருந்து ஒவ்வொரு நிலையாக வெற்றி கொள்வதற்கும், அமெரிக்காவின் தலைமையிலுள்ள ராணுவாதிக்க வாதிகள், ஏகாதிபத்தியவாதிகளின் திட்டங்களை முன்னறிந்து பய னற்றவை யாக்குவதற்கும், ஏகாதிபத்தியத்தை படிப்படியாகப் பின்னடை யும்படி நிர்ப்பந்திப்பதற்கும், முடிவாக அதனை தோல்வி காணச் செய் வதற்கும் இது அவசியம்.

முன்சென்று தாக்கும் போர்த்தந்திரத்தை நாம் ஓர் அரசியல் புரட்சிப் போராட்டமாகக் காண்கிறோம். நாம் ஓர் உலக யுத்தத்தை கட்டவிழ்த்துவிட வலியுறுத்துவதாக இதற்கு எவ்வகையிலும் பொருள் அல்ல. இத்தகைய ஒரு கொள்கையை ஆதரிக்கும் எந்த ஒரு சோஷலிச நாடும் இருக்கமுடியாது. உலக சமாதானத்தைப் பலப்படுத்துதல், அதே சமயம் ஏகாதிபத்தியத்தை படிப்படியாக, ஒவ்வொரு நிலையாகப் பின்ன டையச் செய்வதற்குப் புரட்சிப் போராட்டத்துக்கு சக்திமிக்க தூண்டுதல் அளித்தல்— இதுதான் முன்சென்று தாக்கும் போர்த்தந்திரம் என்ப தற்கு அர்த்தம்.

ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தாக்குதலை எங்கு தொடங்க வேண்டும்? அதற்கு எங்கு மிகச் சிறந்த நிலைமைகள் உள்ளனவோ

அங்கு தொடங்க வேண்டும் ; அதாவது ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் தொடங்க வேண்டும். இந்தக் கண்டங்களைச் சேர்ந்த ஒவ்வொரு நாட்டிலும் காலனி அமைப்பு பூரணமாக சிதைந்து வருவதை நாம் பார்க்கிறோம். இந்தப் பகுதிகளில் ஏகாதிபத்தியமும் பின்வாங்கும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

தேசவிடுதலை இயக்கமானது சோஷலிச அமைப்புக்கும், முதலாளித்துவ நாடுகளில் நடைபெறும் தொழிலாளி வர்க்கப் புரட்சிப் போராட்டத்துக்கும் ஒரு சக்திவாய்ந்த கூட்டாளியாகப் பரிணமித்துள்ளது. இந்த இயக்கம் இப்போது காலனி ஆதிக்கம், நவீன காலனி ஆதிக்கத்தின் மிச்ச சொச்சங்களுக்குப் பலத்த அடிகொடுத்து வருவது மட்டுமன்றி, ஒட்டுமொத்தத்தில் ஏகாதிபத்தியத்தின் சிதைவையும் துரிதப்படுத்தி வருகிறது; தேசியப் புரட்சிகள் சோஷலிசப் புரட்சிகளாக வளர்வதற்குப் புதிய வாய்ப்புக்களைத் திறந்து விட்டுள்ளது.

லெனினது ஆணைகளையும், அக்டோபர் புரட்சியின் மாபெரும் படிப்பினைகளையும் பின்பற்றி வருகின்ற, மற்றும் எங்கள் ஜனாதிபதி ஹோ சி மினின் கட்டளைகளை நிறைவேற்றி வருகின்ற வியத்நாம் மக்களும், தொழிலாளி வர்க்கமும் தேச விடுதலைக்கான போராட்டக் காலம் முழுவதிலும் என்றுமே தேசபக்தியை பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்திலிருந்து பிரித்ததில்லை. சமாதானத்திற்கும், தேச சுதந்திரத்திற்கும், ஜனநாயகத்துக்கும், சமூக முன்னேற்றத்துக்குமான போராட்டத்தில் அவர்கள் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களையும், இதர எல்லா மக்களையும் சகல வழிகளிலும் ஆதரித்தனர். அதேபோழ்தில் இந்த சகாப்தத்தின் மூன்று வலிமைமிக்க புரட்சிப் பிரவாகங்களின் சங்கமம் ஓர் ஐக்கிய முன்னணியாக அமைந்து, அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கு எதிராக வியத்நாமுக்கு ஆதரவு அளித்தது. அந்த முன்னணி மிக முக்கியமான ஒரு வெளி அம்சமாகி, தேச சுதந்திரத்திற்காகவும் சோஷலிசத்துக்காகவும் மனத் திடத்தோடு போராட வியத்நாம் மக்கள் கொண்டிருந்த உறுதிக்கு வலுவூட்டிற்று; பகைவன்மீது இறுதி வெற்றி பெற இது துணைபுரிந்தது.

வியத்நாமில் ஒரு மூதுரை வழங்குகிறது. நீங்கள் தண்ணீர் குடிக்கும்போது அது தோன்றிய ஊற்றை மறந்து விடாதீர்கள் என்பதே அந்த மூதுரை. தேச சுதந்திரத்தை இழந்துநின்ற நாட்களில் தாங்கள் பட்ட அவமதிப்புகளை வியத்நாமியர்கள் நினைவில் வைத்துள்ளனர்; எத்தகைய பெரும் விலைகொடுத்து, எத்தகைய மாபெரும் தியாகங்கள் புரிந்து வெற்றி பெறப்பட்டது என்பதை அவர்கள் நினைவில் வைத்துள்ளனர்; புகழ்மிகு விடுதலை நாட்களை அவர்கள் ஒருபோதும் மறக்க முடியாது. இதனால்தான் வியத்நாமின் தொழிலாளி வர்க்கமும், மக்களும்

மாபெரும் லெனினையும் அக்டோபர் புரட்சியையும் என்றென்றும் நன்றியறிதலோடு நினைவில் வைத்திருப்பர்.

ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்திற்கும், இன்றைய கட்டத்தில் நாட்டின் சோஷலிச மறுமலர்ச்சிக்கும் தன்னலமின்றி உதவி புரிந்தமைக்காக, கீர்த்திமிகு அக்டோபர் புரட்சியின் 60ம் ஆண்டுவிழா தருணத்தில், லெனினியக் கட்சிக்கும், சோதர சோவியத் மக்களுக்கும் வடக்கு, தெற்கு இரண்டையும் சேர்ந்த ஒன்றுபட்ட மக்கள் சார்பில் வியத்நாம் பிரதிநிதிக் குழு ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

# மகத்தான அக்டோபர் புரட்சியின் புதிய வீச்சுக்கள்

பேராசிரியா ஜாபர் இமாம்,
இந்தியா

லெனினியக் கட்சியின் தலைமையில் ரஷ்யாவில் நடைபெற்ற புரட்சி இயக்கம் மார்க்சியத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிற்று. புரட்சிப் போராட்டத்தில் கிழக்கைவிட மேற்குக்கு முன்னிடம் அளிப்பது சம்பந்தமான சர்ச்சைக்கு லெனின் முற்றுப்புள்ளி வைத்தார். மேற்கில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டம் காலனி அல்லது அரைக் காலனிச் சுரண்டலில் அல்லலுறும் மக்களின் தேச விடுதலை இயக்கத்துடன் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்துள்ளது என்று அவர் கோட்பாட்டு ரீதியில் சுட்டிக் காட்டினார். இது ஒன்றிணைந்த ஒரே பிரதான பிரவாகம், ஒன்றின் வெற்றியை இன்னொன்று இல்லாமல் உத்தர வாதம் செய்ய முடியாது.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த மக்கள் முதலாளித்துவத்தை வேரறுப்பதற்கான தமது போராட்டத்தை மேற்கில் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் நெருங்கிய ஒத்துழைப்புடன் நடத்த வேண்டியது அவசியம் என்பது அக்டோபர் புரட்சிக்குப் பிறகு எல்லாப் புரட்சி விடுதலை இயக்கங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது கடந்த அறுபது ஆண்டுகளில் விடுதலை இயக்கங்களுக்கு ஒரு குறிப்பிடத் தக்க பங்காக விளங்கி வந்திருப்பது மட்டுமன்றி, அவற்றின் சொந்த உள்நாட்டு வளர்ச்சிக்கு ஒரு புதுமையான, சிறந்த வாய்ப்பையும் திறந்து விட்டுள்ளது.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியானது சர்வதேச அரசியலின் தன்மையையும் முறைகளையும் முற்றிலுமாக மாற்றிற்று. முதலாவது சோஷலிச அரசு காலனி ஆதிக்கத்துக்கும் ஏகாதிபத்தியத் துக்கும் எதிராகப் போராட்டத்தைத் தொடங்கிற்று; தங்களது காலனி எஜமானர்களை எதிர்த்து உறுதியாகப் போராடும்படி காலனி நாடு களையும் அரைக் காலனி நாடுகளையும் சேர்ந்த உழைப்பாளி மக்களுக்கு அறைகூவல் விடுத்தது.

புதிதாக விடுதலை அடைந்த நாடுகளின் உதயம் சர்வதேச அரசியலில் சக்திகளின் பரஸ்பர நிலையை மாற்றிவிட்டது. ஏகாதிபத்திய நாடுகள் காலனி-எதிர்ப்பு இயக்கங்களை ஒடுக்கி விட்டு இனியும் தப்பித்துவிட முடியாது. காலனி ஒடுக்குமுறையிலிருந்து விடுபடுவதற்கான போராட்டம் உலக சமாதானத்திற்கான போராட்டமாகவும் விளங்குவதுதான் மிக முக்கியமான விஷயமாகும்.

முதலாளித்துவமல்லாத வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றக்கூடிய மூன்றும் உலகம் தோன்றும் என்பதை லெனின் தொலைநோக்குடன் கண்டார். லெனின் காரணமாக, மூன்றும் உலகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் விஞ்ஞான விளக்கம் பெற்றன. சமாதானத்தையும் மக்களிடையே நேச உறவுகளையும் வலுப்படுத்துவதற்கு இது துணைபுரிந்தது. மகத்தான அக்டோபர் புரட்சியின் செல்வாக்கே இதற்குக் காரணம். இந்தப் புரட்சிதான் சோவியத் யூனியன், ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த மக்களிடையே பரஸ்பர இணக்கத்தை வளர்த்தது, நட்புறவைப் பலப்படுத்திற்று.

அக்டோபர் புரட்சியும், ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டுவதில் சோவியத் மக்கள் பெற்ற வெற்றிகளும் விடுதலை இயக்கப் பாதை முழுவதன் மீதும் செல்வாக்கு செலுத்திற்று. மூன்றும் உலக நாடுகளுக்கு அளிக்கப்படும் சோவியத் உதவி அவற்றின் அரசியல், பொருளாதார சுதந்திரத்தைக் கட்டி வளர்க்கத் துணைபுரிகிறது. சர்வதேச அரங்கில் மூன்றும் உலகு முக்கிய சக்திகளில் ஒன்றாக வளர்ச்சி அடைவதற்கு இது பெருமளவுக்குப் பங்காற்றியுள்ளது.

அண்மை ஆண்டுகளில் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த நாடுகளில் மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி ஏற்படுத்தியுள்ள பிரதிபலிப்பை ஒரு சமூக-பொருளாதார அம்சமாகக் கருதவேண்டும். சோவியத் நாட்டின் பொருளாதாரம் அளவு ரீதியிலும், குண ரீதியிலும் மேன்மேலும் வளர்ந்துவரும் நிலையில் இதன் முக்கியத்துவம் அதிகரித்த வண்ணம் உள்ளது.

# அக்டோபர் புரட்சியின் செல்வாக்கு வெல்லற்கரியது

**லூயி கார்லோஸ் பிரெஸ்டஸ்,**
பிரேஜில் கம்யூனிஸ்டுக் கட்சி
*மத்தியக் கமிட்டிப் பொதுச் செயலாளர்*

இந்த ஆண்டில் மகத்தான அக்டோபர் புரட்சியின் 60ஆம் ஆண்டு விழாவினைக் கொண்டாடுகிறோம். பிரேஜிலின் தொழிலாளி வர்க்கத்துக்கு, குறிப்பாக கம்யூனிஸ்டுகளுக்கு இது அளப்பரும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சி. அக்டோபர் புரட்சியையும் அதன் தலைவர்களையும் பற்றி பூர்ஷுவா பத்திரிகைகள் என்னதான் பொய்களையும், புனை சுருட்டுகளையும் அவதூறுகளையும் பரப்பிய போதிலும், பிரேஜில் தொழிலாளி வர்க்கம் ஆரம்பம் முதலே அந்தப் புரட்சிக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்து வந்துள்ளது. மகத்தான அக்டோபர் புரட்சியின் கருத்துக்கள் பிரேஜிலில் பரவியுள்ளன என்பதற்குச் சான்று பகரும் அடிப்படை அம்சங்களில் ஒன்று எங்கள் நாட்டுத் தொழிலாளி வர்க்கத்தின் சர்வ தேசிய உணர்வுத் திறம் வளர்ந்திருப்பதாகும். கடந்த 60 ஆண்டுகளாக பிரேஜில் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும் உறுதியான நேச உறவுகளைப் பராமரித்து வருகின்றன. எங்கள் போராட்டங்களுக்கு அளித்து வரும் ஆதரவுக்காகவும், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் யூனியனும் சமாதான லட்சியத்துக்குப் புரிந்துவரும் சேவைக்காகவும் பிரேஜில் கம்யூனிஸ்டுகள் சார்பில் சோவியத் மக்களுக்கும், புகழ்மிகு கம்யூனிஸ்டுக் கட்சிக்கும், அதன் சிறப்பு மிக்க தலைவர் லியோனித் பிரெஷ்னேவுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 24வது காங்கிரசில் முன் வைக்கப்பட்டு, 25வது கட்சி காங்கிரசின் முடிவுகளில் மேலும் செழுமைப்படுத்தப்பட்டுள்ள சமாதானத் திட்டம் சர்வதேசப் பதற்ற நிலைத் தணிவுக்கு வெகுவாகத் துணைபுரிகிறது. பாசிஸ்டு சர்வாதிகாரத்தை எதிர்த்து சுதந்திரத்துக்காகவும், சமூக முன்னேற்றத்திற்காகவும், உலக சமாதானத்துக்காகவும் பிரேஜில் மக்கள் நடத்திவரும் போராட்டத்திற்கும் அது முக்கிய ஆதரவு அளிக்கிறது.

அஜர்பெய்ஜான் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் பாரம்பரியங்களுக்குப் புகழ் பெற்ற பாகூவில் இம்மாநாடு கூட்டப்பட்டிருப்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. ஏகாதிபத்தியத்தையும் காலனி ஆதிக்கத்தையும் எதிர்த்து, தேச சுதந்திரம், சமாதானம், முன்னேற்றம் ஆகியவற்றுக்காகப் போராடி வரும் பல நாடுகளின் பிரபல தலைவர்கள் இங்கு கூடியுள்ளனர். நாம் மிகவும் நம்பிக்கை வைத்துள்ள இந்த மாநாடு இப்போராட்டத்துக்குக் குறிப்பிடத்தக்க பங்காற்றும் என்று உறுதியாக எதிர்பார்க்கிறேன்.

# அனைத்து நாட்டு மக்களின் விழா

செவரோ அகுய்ரே தெல் கிரிஸ்டோ,

கியூபா குடியரசின் அரசாங்கக் கவுன்சில் உறுப்பினர்.

இந்த மாநாட்டைக் கூட்டியிருப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்தது ஏனென்றால் மகத்தான அக்டோபர் புரட்சியின் 60 ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாட தயாரிப்புகள் நடைபெற்றுவரும் நேரத்தில், அக்டோபர் புரட்சியின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட அடிக்கடி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் இது கூட்டப்பட்டுள்ளது. அக்டோபர் பரட்சியிலிருந்து பிறந்த சோவியத் யூனியனின் புரட்சிப் பாத்திரத்தை மறுப்பவர்கள் இன்னும் இருக்கவே செய்கின்றனர்.

உலகின் ஆறில் ஒரு பகுதியில் மார்க்சியம்—லெனினியத்துக்கு செயலுருவம் கொடுத்த வெற்றிகரமான அக்டோபர் புரட்சி கியூபாவின் தொழிலாளி வர்க்கத்துக்கும் அனைத்து உழைப்பாளி மக்களுக்கும் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த இதர நாடுகளில் போலவே, கியூபாவிலும் அக்டோபர் புரட்சியின் எதிரொலிகளை அடக்கவும், அதன் வரலாற்று முக்கியத்துவத்தை உழைப்பாளிகளும், தொழிலாளி வர்க்கமும் புரிந்து கொள்ளாதவாறு தடுக்கவும் ஏகாதிபத்தியம் முடிந்த அனைத்தையும் செய்தது. பூர்ஷுவாக்களின் இந்த முயற்சிகளை முறியடிப்பதும், ரஷ்யப் பாட்டாளி வர்க்கம் ஈட்டிய வெற்றிகளையும் சோவியத் வாழ்க்கையையும் பற்றிய தகவல்களை வழங்குவதும் அச்சமயம் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதான கடமையாக இருந்தது. முதலாளித்துவ சர்வாதிகாரம் தலைவிரித்துத் தாண்டவமாடிய கடுமையான நிலைமைகளில் இந்தப் பணியை நிறைவேற்ற வேண்டியிருந்தது. சோவியத் யூனியனைப் பற்றிய உண்மையை எடுத்துக் கூறியதற்காகவும், சோவியத் யூனியனை ஆதரித்ததற்காகவும் கம்யூனிஸ்டுகள் கொடிய அடக்குமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். ஆயினும் கம்யூனிஸ்டுகள் தம் பணியை ஒருபோதும் நிறுத்தவில்லை.

அரசியல் இயக்க நிகழ்வு தொடர்ந்தது. உழைப்பாளிகளும், மக்களும் நன்கு அணி திரட்டப்பட்டனர். உலகின் மிகவும் வலிமை வாய்ந்த முதலாளித்துவ நாடான அமெரிக்கா 90 மைல் தூரத்தில்தான்

இருப்பினும், கியூபா ஒரு சோஷலிச நாடாக மாறுவதைச் சாத்தியமாக்கும் ஒரு நிலையை இது தோற்றுவித்தது. கியூபாவில் ஒரு தேச விடுதலைப் புரட்சி வெற்றி வாகை சூடிற்று; லெனின் சுட்டிக்காட்டிய பாதையைப் பின்பற்றி அது விரைவிலேயே சோஷலிசப் புரட்சியாக வளர்ச்சி அடைந்தது

நமக்கு நாமே சில கேள்விகளைக் கேட்டுக் கொள்ள வேண்டும். ஏகாதிபத்தியவாதிகள் அக்டோபர் புரட்சியை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்திருந்தால் தொழிலாளி வர்க்கத்தின் கதி என்னவாகி இருக்கும்? பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் ஆதாயங்களை நாஜிசத்தால் ஒழித்துக் கட்ட முடிந்திருந்தால் என்னவாகி இருக்கும்? அப்போது முற்போக்கு மனித குலம் அனைத்துக்கும் என்ன நேர்ந்திருக்கும்? நாம் இப்போது எங்கே இருப்போம்? கம்யூனிஸ்டுகளது மட்டுமன்றி, எல்லா உழைப்பாளி களின், சகல தேசிய இன மக்களின் நிலை உலகில் எவ்வாறு இருந்திருக் கும்? நாஜிகள் சோவியத் யூனியனைத் தோற்கடித்திருந்தால் அவர்கள் அதை எதிர்த்து ஆர்த்தெழுந்திருப்பார்கள். ஆனால் சோவியத் யூனியன் தோல்வி அடையவில்லை. சோவியத் யூனியன், தான் வெல்லற்கரிய ஒரு சித்தாந்த, ராணுவக் கோட்டை என்பதை மெய்ப்பித்துக் காட்டிற்று. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்துக்குத் தலைமை தாங்கிற்று, மக்களை வெற்றிக்கு இட்டுச் சென்றது. சோவியத் மக்களின் வெற்றி, அக்டோபர் புரட்சிக் கருத்துக்களின் வெற்றி நமது பொது வெற்றியாகத் திகழ்ந்தது. இரண்டாம் உலக யுத்தத்தில் சோவியத் யூனியன் ஜெயித்திருக்கவில்லை என்றால், கியூபா புரட்சி வெற்றி அடைந்திருக்காது, கியூபா புரட்சி அக்டோபர் புரட்சியின் குழந்தையாகும்.

இன்று கியூபா மகத்தான அக்டோபர் புரட்சியின் 60வது ஆண்டு விழாவை தனது சொந்த விழாவாகக் கொண்டாடத் தயாரிப்புகள் செய்து வருகிறது. உண்மையிலேயே இது எங்கள் விழாவாகும். தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், மாதர்கள், குழந்தைகள் உட்பட கியூபா மக்கள் அனைவருமே இதனைக் கொண்டாடுகின்றனர். இந்த விழாவை ஒட்டி அரசியல் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது; சோவியத் மக்களின் வெற்றிகள் விவரிக்கப்படுகிறது; சோவியத் யூனியன் இருந்து வருவது தொழிலாளி வர்க்கத்துக்கும், அனைத்து மனித குலத்துக்கும் எவ்விதம் முக்கியமானது என்பது எடுத்துரைக்கப்படுகிறது. பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு புரட்சி வெற்றி பெற்றது முதல், கியூபா எப்போதும், எல்லாவற்றிலும் சோவியத் யூனியனது ஆதரவைப் பெற்று வந்துள்ளது.

தற்போது கியூபா மக்களும், சோவியத் மக்களும் சோஷலிசத்துக் காகவும் கம்யூனிசத்துக்காகவும் ஒன்றுசேர்ந்து பாடுபட்டு வருகின்றனர். அமெரிக்க ஏகபோகங்களுக்குப் பிடிக்கவில்லை என்றாலும், கியூபாவில் ஒரு

சோஷலிச சமுதாயம் கட்டப்பட்டு வருகிறது. அனைத்து மக்களுக்கும் ஒரு புதிய வாழ்க்கை நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இந்த நிர்மாணத்துக்கு சோவியத் யூனியனின் இடையறாத சர்வாம்ச உதவி கிட்டி வருகிறது.

சோவியத் நிபுணர்களும், தொழில்நுட்ப ஊழியர்களும், விஞ்ஞானிகளும் கியூபா நிபுணர்களுடனும், தொழில்நுட்ப ஊழியர்களுடனும், விஞ்ஞானிகளுடனும் தோளோடுதோள் இணைத்துப் பணியாற்றி வருகின்றனர். தங்களுக்காக அவர்கள் செய்துள்ள யாவற்றுக்குமாக, இன்று செய்துவரும் யாவற்றுக்குமாக கியூபா மக்கள் அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்கின்றனர்.

இதனால்தான் இளம் கியூபா புரட்சி, விரைவிலேயே அறுபது வயதாகப் போகும் புரட்சியை வாழ்த்துகிறது. அக்டோபர் புரட்சி ஒரு முதிர்ச்சி அடைந்த புரட்சி. அக்டோபர் புரட்சிக்கு முதுமை தட்டிவிடவில்லை. ஏனென்றால் புரட்சிகள் என்றும் மூப்படைவதில்லை. சோவியத் யூனியனும் முதுமை அடைந்துவிடவில்லை; அது நாளுக்குநாள் இளமையும் வலிமையும் பெற்று வருகிறது.

# மக்களது படைப்பாற்றலின் விடுதலை

**யூசெப் எல். செபாய்,**

*ஆசிய-ஆப்பிரிக்க மக்கள் ஒருமைப்பாட்டு நிறுவனத்தின் பொதுச் செயலாளர்.*

மகத்தான அக்டோபர் புரட்சியானது ஒரு சோஷலிசப் புரட்சி வெற்றிகரமாக சாதிக்கப்பட்டதற்கு வரலாற்றில் முதல் அனுபவமாகும். ஆசிய-ஆப்பிரிக்க மக்களது தேச விடுதலை இயக்கத்தின் வளர்ச்சி வரலாற்றில் வெற்றிகரமான அக்டோபர் புரட்சி மாபெரும் செல்வாக்கு செலுத்திற்று என்பது இன்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. மக்கள் தற்போது தமது சித்தத்தை நிலைநாட்டவும், நியாயம், சுதந்திரம், சமத்துவம் பற்றிய தமது கண்ணோட்டங்களுக்கு இசைந்ததான பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் முடிவதிலிருந்து இதனைத் தெரிந்து கொள்ளலாம்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு அக்டோபர் புரட்சியின் வெற்றியானது உலகக் காலனி அமைப்புச் சங்கிலியை உடைத்தெறிந்தது; இதனால் உலகெங்கும் காலனி ஆதிக்கத்தின் கொத்தளங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வீழ்ச்சி அடைந்தன. மக்களின் படைப்பாற்றல்களை அவற்றைப் பிணித்திருந்த தளைகளிலிருந்து அக்டோபர் புரட்சி விடுவித்தது; தமது பொருளாதார, சமூக நிலைமைகளுக்கு ஏற்ப வளர்ச்சியுறுவதற்கான பாதைகளை அவர்களுக்குத் திறந்து விட்டது.

ஆசிய-ஆப்பிரிக்க மக்களை ஒன்றிணைத்துள்ள ஒருமைப்பாட்டு இயக்கம் தனது உன்னத லட்சியங்களை நிறைவேற்றுவதற்கும், மனித குலத்துக்கு ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை உத்தரவாதம் செய்வதற்கும் பாடுபடுகிறது. இந்த இரண்டு கண்டங்களிலும் தேச விடுதலைப் போராட்டம் வீறு கொண்டெழுந்ததன் விளைவாய் 1950 ஆம் ஆண்டுகளில் இந்த இயக்கம் தோன்றிற்று. இயக்கத்தின் ஆரம்ப நாட்கள் முதலே சோவியத் யூனியன், போராடும் மக்களுடன் ஒருமைப்பாட்டைக் கட்டி வளர்க்க வேண்டும் என்ற லெனினது ஆணையைப் பின் பற்றி, இதில் முன்னின்று பங்கெடுத்துக் கொண்டது. ஆசிய-ஆப்பிரிக்க மக்கள் ஒருமைப்பாட்டு நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் சோவியத் ஆசிய-ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டுக் கமிட்டி மேற்கொண்டுள்ள நிலையை

நாங்கள் உயர்வாக மதிக்கிறோம்; ஏனென்றால் இந்த நிலை கோடானு கோடி சோவியத் மக்களின் சித்தத்தைப் பிரதிபலிக்கிறது. விடுதலைக் காகவும் சுதந்திரத்துக்காகவும் போராடும் உண்மை வீரர்களுக்கு அளிக் கப்பட்டுவரும் தார்மிக, அரசியல், நடைமுறை உதவியை நாங்கள் போற்றுகிறோம்.

கடந்த அறுபது ஆண்டுகளில் இந்த இயக்கம் ஏகாதிபத்தி யத்தையும் காலனி ஆதிக்கத்தையும் எதிர்த்து பல வரலாற்றுச் சிறப் புடைய வெற்றிகள் பெற்றிருந்த போதிலும், உலக தேச விடுதலைப் புரட்சியும், பரிபூரண விடுதலைக்கான மனித குலத்தின் போராட்டமும் இறுதி வெற்றி அடைந்துவிட்டதாக நம்மால் கூற முடியாது. தெற்கு ஆப்பிரிக்காவின் மக்கள் அபகீர்த்தி வாய்ந்த வருண இனவெறி ஆட்சியை எதிர்த்து இன்னும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்; பாலஸ்தீன மக்கள் தமது பிரதேசங்களையும் அடிப்படை உரிமைகளையும் இன்னமும் இழந்து நிற்கிறார்கள்; ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் பெயரளவில் சுதந்திரம் பெற்ற அநேக நாடுகள் நவீன காலனி ஆதிக்கத்தின் அரசியல், பொருளாதார ஒடுக்குமுறையில் சிக்கிக் கண் பிதுங்கி வருகின்றன. சுரண்டல்; அரசியல், சமூக, அறிவுத்துறை ஒடுக்குமுறை; வேலையில்லாத் திண்டாட்டம்; வருண இன, தேசிய இனப்பாகுபாடு; கலாசார, ஆன்மீக இழிவு; வன்முறை, ஆயுத உற்பத்திப் போட்டி; சுற்றுச் சூழலை நச்சுப் படுத்தல் போன்ற அனுச்சாரங்கள் இன்னும் உலகிலிருந்து ஒழியவில்லை. இவை யாவும் ஏகாதிபத்தியம், வருண இனவெறி, முதலாளித்துவ ஏக போகங்கள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டவை ஆகும்.

ஜிம்பாப்வே, நமிபியா மக்களது தேசவிடுதலை இயக்கம் கொடுத்து வரும் அடிகளாலும், தென்னாப்பிரிக்காவில் மக்களின் போராட்டம் தீவிரமடைந்து வருவதன் விளைவாயும் ஆப்பிரிக்காவில் ஏகாதிபத்தியத் தின், இன ஒதுக்கலின் கடைசிக் கோட்டைகள் ஆட்டம் காண ஆரம் பித்துவிட்டபோதிலும், உலகின் இந்தப் பகுதியில் நிலைமை இன்னமும் நிச்சயமற்றதாகவே உள்ளது; இந்நிலையில் ஜிம்பாப்வே தேசபக்த முன்னணியுடனும், நமிபியா வீரர்களுடனும், தென்னாப்பிரிக்காவின் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசுடனும் நமது ஒருமைப்பாட்டைப் பலப் படுத்துவது அவசியம். தென்னாப்பிரிக்காவில் ஆட்சி அதிகாரம் கறுப்பு பெரும்பான்மையினர்க்கு உடனடியாக மாற்றப்படவேண்டும். இந்தப் போராட்டத்தை நடத்திவரும் தென்னாப்பிரிக்க மக்கள் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் தலைமையில் முன்னேறி வருகின்றனர்.

அண்மையில் முன்னேற்றம் கண்டுள்ள ஆப்பிரிக்க – அரபு ஒத்துழைப்பு வலுப்பட்டிருப்பது காலனி ஆதிக்கம், இன ஒதுக்கல், ஜியோனிஸம் ஆகியவற்றின் கடைசிப் பீடங்களைத் துடைத்தெறியவும், ஒரு புதிய உலகப் பொருளாதார அமைப்பை நிறுவவும் அரபு மக்களும்

ஆப்பிரிக்க மக்களும் கொண்டுள்ள உறுதியைப் பிரதிபலிக்கிறது. இந்த மக்கள் விரும்பும் புதிய உலகப் பொருளாதார அமைப்பு நியாயமானதாக, சமத்துவமானதாக இருக்கும்; சுதந்திரம், முன்னேற்றம், சுபிட்சம் ஆகிய வற்றின்மீது அபிலாஷை கொண்ட மக்களின் நம்பிக்கைகளுக்கு இசைந்ததாக இருக்கும்.

ஆக்கிரமித்துக் கொள்ளப்பட்ட அரபுப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் துருப்புகள் நிபந்தனையின்றி பூரணமாக வாபசாகுதல், பந்தோபஸ்துக் கவுன்சில் தீர்மானங்களைக் கடைப்பிடித்து ஒழுகுதல், பாலஸ்தீனியர்களின் தேசிய உரிமைகளை, முக்கியமாக, தமது சொந்தப் பிரதேசங்களுக்குத் திரும்பிச் சென்று அங்கு தமது சொந்த அரசை நிறுவிக் கொள்ள அவர்களுக்குள்ள உரிமையை அங்கீகரித்தல் என்ற அடிப்படையில் மட்டுமே மத்தியக் கிழக்கில் ஒரு நியாயமான சமாதானத்தை எய்த முடியும்.

இன்றைய சர்வதேச விவகாரங்களில் மற்றொரு முக்கியமான குறிக்கோள் ஏகாதிபத்திய ஏகபோகங்களை எதிர்த்து லத்தீன் அமெரிக்க மக்களும், ஜனநாயகத்தை மீட்பதற்காக சிலி மக்களும், தேசிய சுதந்திரத்திற்காக புயோர்ட்டோ ரிகா மக்களும், தமது புரட்சி ஆதாயங்களைப் பலப் படுத்திக்கொள்ள கியூபா மக்களும் நடத்தும் போராட்டத்துடனான ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதாகும்.

அக்டோபர் புரட்சியின் கருத்துகள் சர்வதேச ஒத்துழைப்புத் துறையில் செல்வாக்கு செலுத்தி வருகின்றன, இனியும் அவ்வாறே தொடர்ந்து செல்வாக்கு செலுத்தும். தற்போதைய சர்வதேசப் பதற்ற நிலைத் தணிவு இயக்க நிகழ்வுக்கு இந்த செல்வாக்கே காரணம். சமாதானத்தையும், நாடுகளிடையே ஒத்துழைப்பையும் பலப்படுத்தும் போக்கு, படைக் குறைப்பு சம்பந்தமாக, முக்கியமாக அணு ஆயுதக் குறைப்பு சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கும் போக்கு வளர்ந்து வருவதற்கும் இந்த செல் வாக்கே காரணம். குறிப்பாக, ஹெல்சிங்கியில் நடைபெற்ற ஐரோப்பிய பந்தோபஸ்து, ஒத்துழைப்பு மாநாட்டின் பலன்களும் இந்த செல்வாக்கி லிருந்து பிறந்ததே எனலாம்.

உலகெங்கும் உள்ள புரட்சி, ஜனநாயக, தேசிய சக்திகளின் ஒற்றுமையும், பரஸ்பர ஆதரவும் சுதந்திரம், சமாதானம், நியாயம் எனும் லட்சியம் வெற்றி வாகை சூட ஒரு மெய்யான உத்தரவாதமாக அமைந்துள்ளது. இது அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின்னர் கழிந்து சென்ற ஆண்டுகள் வழங்கியுள்ள பிரதான வரலாற்றுப் படிப்பினையாகும்.

# மனிதகுல வரலாற்றில் திரும்புமுனை

**ஜஸ்ஸிர் ராபோ,**
பாலஸ்தீன விடுதலை நிறுவனம்.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் 60 ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடத் தயாரிப்புகள் நடைபெற்றுவரும் வேளையில் பாகூவில் இந்த மாநாடு நடைபெறுவது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. பொதுவாக உலகப் புரட்சி இயக்கத்தின் மீது, குறிப்பாக தேச விடுதலை இயக்கத்தின் வளர்ச்சியின் மீது அக்டோபர் புரட்சி ஏற்படுத்தியுள்ள பிரதிபலிப்பை மாநாடு மீண்டும் வலியுறுத்தி இருப்பதில் இந்த முக்கியத்துவம் அடங்கியுள்ளது. மனித குலம் அனைத்தின் வரலாற்றிலும், ஒடுக்கப்பட்ட மக்களின், வர்க்கங்களின் விடுதலை இயக்க வரலாற்றிலும் மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியை ஒரு திருப்புமுனை எனத் திடமாகக் கூறலாம். ஒடுக்குமுறை, சுரண்டல், பல்வேறு உருவங்களிலும் வடிவங்களிலும் உள்ள வருண இனப் பாகுபாடு ஆகியவற்றின் மீது இறுதி வெற்றி பெறும் திசை வழியில் அக்டோபர் புரட்சி மனித குலத்திற்கு முதன் முதலாக பாதை காட்டிற்று.

உறுதியான ஒருமைப்பாட்டின் புகழ்மிகு வரலாறு அக்டோபர் புரட்சியை அரபு மக்களுடன், பாலஸ்தீன மக்களுடன் பிணைக்கிறது. அரபு மக்கள் ஈட்டிய புரட்சி ஆதாயங்கள் யாவும் தேச விடுதலையின், சோஷலிசத்தின் இடையறாது வளர்ந்துவரும் பாத்திரம் காரணமாக, சர்வதேச அரங்கில் நல்லிணக்கச் சூழ்நிலைகளில் பெறப்பட்டவை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இன்றைய நிலைமைகளில், பதற்றத் தணிவுக் கொள்கை சர்வதேச உறவுகள் துறையில் மேன்மேலும் ஒரு தீர்மானமான அம்சமாகி வருகிறது. தேச விடுதலை இயக்கமும் எல்லா முற்போக்கு சக்திகளும் புதிய வெற்றிகள் பெறுவதை இந்தக் கொள்கை சாத்தியமாக்கி உள்ளது. ஆயினும் ஏகாதிபத்தியம் தனது உருவத்தை மாற்றிக் கொண்ட போதிலும், புதிய முறைகளைக் கடைப்பிடித்த போதிலும் தனது தன்மையை மாற்றிக் கொள்ளவில்லை. மத்தியக் கிழக்கில் தேச விடுதலை இயக்கம் கடினமான, மிகவும் சிக்கலான நிலைமைகளில் முன்னேறி வருகிறது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும், ஆக்கிரமிக்கப்பட்ட அரபு பிரதேசங்களிலிருந்து ஆக்கிரமிப்பாளர் துருப்புகள் வாபசாவதற்காகவும், பாலஸ்தீன மக்கள் ஒரு சுதந்திர தேசிய அரசை அமைத்துக் கொள்ளும் உரிமை உட்பட அவர்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்படுவதற்காகவும் போராட்டம் நடத்தும் அடிப்படையில் இந்தப்

பிரதேசத்தில் சமாதானத்தை உத்தரவாதம் செய்வது அரபு நாடுகளில் தேச விடுதலை சக்திகளின் பிரதான பணியாக இன்னும் இருந்து வருகிறது. இப்போராட்டத்தில், சோவியத் யூனியன் அளிக்கும் ஆதரவை இந்த சக்திகள் நிலையாக உணர்கின்றன.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே உள்ள தொடர்புகள் அண்மைக் காலத்தில் மேலும் வளர்ந்துள்ளன. இந்த உறவுகள் பலப்பட்டு, விரிவடைந்து வருகின்றன. அரசியல் அம்சத்தோடு நின்று விடாமல் இவை ராஜிய, சமூகத் துறைகளிலும் வளர்ந்து வருகின்றன. நூற்றுக் கணக்கான பாலஸ்தீன மாணவர்கள் சோவியத் யூனியனில் பயின்று வருகின்றனர். சோவியத் கல்வி நிலையங்கள் ஏற்கெனவே ஏராளமான பாலஸ்தீனியர்களைப் பயிற்றுவித்துள்ளன. இவர்கள் ஸ்தல ஊழியர்களுக்கு சிறந்த ஆஸ்தியாக விளங்குகின்றனர். பாலஸ்தீன நிறுவனங்கள் பல்வேறு சோவியத் நிறுவனங்களிடமிருந்து விரிவான உதவி பெறுகின்றன. இந்த ஸ்தூலமான மனித நேய உதவியின் பலன்களை பாலஸ்தீன மக்கள் அனைவரும் அனுபவிக்கின்றனர்.

அரசியல் அரங்கில், மத்தியக் கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக பிஎல்ஓவும் சோவியத் யூனியனும் ஒரே மாதிரியான போக்குகளையும் கண்ணோட்டங்களையும் கொண்டுள்ளதைக் காண்கிறோம். 16வது சோவியத் தொழிற்சங்க காங்கிரசில் லியோனித் பிரெஷ்னேவ் முன்வைத்த அரசியல் முன்முயற்சியை நாங்கள் உயர்வாக மதிக்கிறோம் என்பது சர்ச்சைக்கு இடமற்றது. ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து எல்லாத், துருப்புகளும் வாபசாதல், ஒரு சுதந்திரமான அரசு அமைத்துக் கொள்ளும் உரிமை உட்பட பாலஸ்தீனியர்களின் உரிமைகளை ஏற்றல் ஆகியவையே அந்தப் பிரதேசத்தில் உள்ள அனைத்து மக்களின் நலன்களுக்கு இசைவான முறையில் மத்தியக் கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வு காணும் ஒரே சிறந்த வழியாகும் என்று அவர் அந்தக் காங்கிரசில் மீண்டும் வலியுறுத்திக் கூறினார். மத்தியக் கிழக்கில் நியாயமான சமாதானத்திற்கு உத்தரவாதங்களை வழங்குவதில் முக்கிய பங்காற்ற சோவியத் யூனியன் தயாராக இருப்பதை நாங்கள் பெரிதும் போற்றுகிறோம். ஜெனீவா மாநாட்டின் கட்டுக்கோப்புக்குள்தான் மத்தியக் கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணுவது சாத்தியமாகும். இந்த மாநாடு பற்றி சோவியத் யூனியனின் நிலையையும். இதில் ஆரம்பம் முதலே சமத்துவ அடிப்படையில் பிஎல்ஓ பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்று அது வலியுறுத்தி வருவதையும் நாங்கள் பாராட்டுகிறோம். பாலஸ்தீன மக்களதும், எல்லா அரபு மக்களதும், உலகின் அந்தப் பகுதியில் வாழும் ஏனைய சகல மக்களதும் நலன்களைப் பிரதிபலிக்கும் இந்த நிலையை நாங்கள் முற்றிலுமாக ஆதரிக்கிறோம்.

# சமாதானத்தின், மக்களது இன்ப வாழ்வின் கோட்டை

ஆல்பிரடோ வரேலா.
தலைமைக்குழு உறுப்பினர், உலக சமாதானக் கவுன்சில்.
சர்வதேச லெனின் சமாதானப் பரிசு பெற்றவர்.

இந்த இருபதாம் நூற்றுண்டு முழுவதன்மீதும் அக்டோபர் புரட்சி தனது முத்திரையைப் பதித்தது; மனிதகுல வரலாற்றில் ஒரு புதிய சகாப் தத்தைத் தொடங்கி வைத்தது. அனைத்து மனிதகுல வளர்ச்சியின்மீதும் ஆழமான செல்வாக்குச் செலுத்தியுள்ள புதிய, சோஷலிச சமுதாயத்தின் உதயத்தை அது குறித்தது. இந்த சமுதாயம் காட்டிய முன்னுதா ரணமும், அதன் வெற்றிகளும் உலகின் பல்வேறு பகுதிகளில், ஏகாதிபத் தியத்தையும் ஒடுக்குமுறையையும் எதிர்த்து, இன்ப வாழ்வுக்காகப் போராடி வருவோருக்கு புதிய வலிவையும் நம்பிக்கையையும் ஊட்டின. உலக சமாதானம் எனும் தமது உன்னத லட்சியத்தை எய்துவதற்கான வாய்ப்பை மனிதகுல வரலாற்றிலேயே முதல் தடவையாக அக்டோபர் புரட்சி உலக மக்களுக்கு வழங்கிற்று.

சோவியத் யூனியன் கடைப்பிடித்துவரும் சமாதானக் கொள்கை மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் ஆரம்ப நாட்களி லேயே வேர்கொண்டு விட்டது. லெனினே தயாரித்துக் கையொப்ப மிட்ட புகழ்பெற்ற முதல் சட்டங்கள், ஏகாதிபத்திய யுத்தத்தைக் கண் டிக்கும் சட்டங்கள், தேசங்களுக்கு சமாதானத்தைக் கொண்டுவந்த சட்டங்கள் இக்கொள்கைக்கு ஆரம்பமாக அமைந்தன. அன்றுமுதல் இக் கொள்கை உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. நாஜி ஸத்தின் தோல்விக்கு தீர்மானமான பங்காற்றிய பிறகு சோவியத் யூனியன் கெடுபிடிப் போருக்கும், அணு ஆயுத யுத்தப் பெருநாச அபா யத்துக்கும் எதிரான போராட்டத்தில் முன்னணியில் இருந்து வருகிறது. சோவியத் யூனியனதும், இதர சோஷலிச நாடுகளதும் அரசியல், பொருளாதார, ராணுவ வலிமையும் சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் நடத்திய போராட்டமும் சர்வதேச அரங்கில் சக்திகளின் உறவை அதிக அனுகூலமானவையாக ஆக்கின; சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு

அவசியமான நிலைமைகளைத் தோற்றுவித்தன; சமாதான இயக்கத்தைத் தீவிரப்படுத்துவதையும், உலக மக்களில் பரந்த பகுதியினரை அதில் ஈர்ப்பதையும் சாத்தியமாக்கின.

சோவியத் யூனியனது இந்தக் கொள்கை—நீக்குப் போக்கான, ஆனல் உறுதியான, உயிர்த்துடிப்புள்ள, செயலூக்கமுள்ள இந்தக் கொள்கை—சர்வதேச அரங்கில் பரந்த முன்முயற்சியை மேற்கொள்கிறது. மற்ருெரு யுத்தம் மூளும் அபாயத்தை முற்ற முழுக்க ஒழித்துக்கட்டும் நோக்கம் கொண்ட இத்தகையதொரு செழுமையான, ஸ்தூலமான, காரியசாத்தியமான திட்டத்தை மக்களுக்கு அளித்துள்ள ஒரே நாடு சோவியத் யூனியன்தான் என்று துவாவில் நிகழ்த்திய தமது சொற்பொழிவில் லியோனித் பிரெஷ்னேவ் அறிவிக்க எல்லா நியாயமான காரணமும் உண்டு. இதில் சந்தேகமே இல்லை. கடந்த காலத்திலும் சரி, நிகழ்காலத்திலும் சரி ஒவ்வொரு நல்ல மாற்றத்திற்கும், ராணுவப் பதற்றத் தணிவைக் கொண்டு (இது மிக அவசியமானது, அவசரமானது) அரசியல் பதற்றத் தணிவைப் பலப்படுத்துவதற்கும், பதற்றத் தணிவை ஒரு மாற்ற முடியாத இயக்க நிகழ்வாக ஆக்குவதற்கும் சோவியத் முன் முயற்சிகளே அடிப்படையாக உள்ளன என்பதை பாரபட்சமற்ற ஒவ்வொரு நோக்கரும் ஒப்புக்கொள்வார். சர்வதேசத் தகராறுகளைத் தீர்ப்பதில் படை பலத்தைப் பயன்படுத்தாமை பற்றிய ஓர் உலக ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள சோவியத் யூனியன் சித்தமாக இருப்பதும், மத்தியக் கிழக்கில் ஓர் இறுதி உடன்பாடு காண அது எடுத்துவரும் முயற்சிகளும், கட்டுப்பாடற்ற ஆயுத உற்பத்தி போட்டியை (முக்கியமாக மக்களைப் பெருவாரியாக கொன்று குவிக்கும் ஆயுதங்கள் சம்பந்தமாக) தடுத்து நிறுத்த அது முன்வைத்துள்ள யோசனையும், ஹெல்சிங்கியில் இறுதி உடன்பாடு கையெழுத்திடப்பட்டதுடன் முடிவடைந்த ஐரோப்பிய பந்தோபஸ்து, ஒத்துழைப்பு மாநாட்டின் பணிக்கு வார்சா ஒப்பந்த நாடுகள் ஆற்றிய மாபெரும் பங்கும் இதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டைக் கண்டு அஞ்சுபவர்கள் அல்லது அதை விரும்பாதவர்கள் எல்லா வழிகளிலும் அதை இழிவுபடுத்த முயற்சி செய்கிருர்கள். அவர்கள் ஹெல்சிங்கி உணர்வையும் சோவியத் யூனியனது ஆக்கபூர்வமான கொள்கையையும் திரித்துக் கூறுகிருர்கள்; அதேசமயம் தமது ராணுவ செலவை அதிகரித்துச் செல்கிருர்கள். எனவே, இந்நிலையில் சமாதான சக்திகளை அணி திரட்டுவது அவசியம்; அப்போதுதான் பதற்றநிலைத் தணிவு இயக்க நிகழ்வு மேன்மேலும் வளர்ந்து வலுப்பெறும்.

அக்டோபர் புரட்சி ஆரம்பமாகி விட்டதை பீரங்கி முழக்கம் செய்து அரோரா போர்க் கப்பல் கட்டியங்கூறி அறிவித்த நாள் முதல், எல்லா விடுதலை வீரர்களுக்கும் எல்லா ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், உரிமைகள்

இழந்த மக்களுக்கும் சோதர உதவிக்கரம் நீட்டப்பட்டு வந்துள்ளது எங்கெல்லாம் தாராளமான, தன்னலமற்ற உதவி தேவைப்படுகிறதோ, அங்கெல்லாம் எப்போதும் அது சோவியத் யூனியனல் வழங்கப்பட்டது, வழங்கப்படுகிறது. விடுதலை இயக்கங்கள், தமது பொருளாதார சுதந்திரத் திற்காகப் போராடும் மக்கள், தமது அரசுரிமையைப் பாதுகாக்கும் நாடுகள் அல்லது தமது வளர்ச்சிப் பாதையை நிர்ணயிக்கும் தேசங்கள் ஆகியவை அனைத்தும் தாம் சோவியத் யூனியனது ஆதரவை நம்பியிருக்க முடியும் என்பதை அறியும்.

சோவியத் யூனியனும் அதன் நண்பர்களும் தங்கள் பக்கம் இருப்ப தால், சமாதானம், சுதந்திரம், இன்ப வாழ்வு எனும் தமது லட்சியம் வெல்லற்கரியது என்று இந்த மக்கள் திட உறுதியோடு இருக்கின்றனர்.

சமாதானம் பற்றியும், மனிதனது உடல் ஆற்றல்களும் அறிவாற்றல் களும் தங்குதடையின்றி மலர்ந்து பொழிவது பற்றியும் கனவு கண்டுவரும் எல்லோர் சார்பிலும் அக்டோபர் புரட்சிக்கும் அதன் மாபெரும் வழித் தோன்றலுக்கும் பின்வருமாறு கூறுகிறேம்: "மனித குலத்துக்கு நீங்கள் ஏற்கெனவே வழங்கியவற்றுக்காகவும், இனி வழங்கப் போவனவற்றுக்கா கவும் எங்கள் நன்றி!"

# மக்களின் வெற்றிக்கு இன்றியமையாத தேவை

**பியோ ஆல்பர்ட்டோ லோபெஸ்,**

உறுப்பினர், பிராந்திய மன்றம்,
கொலம்பியா.

பூர்ஷுவா பிரசாரம் சோஷலிசப் பொருளியலையும் அமெரிக்காவையும் ஒன்றிணைத்து "ஏழை நாடுகள் பணக்கார நாடுகள்" என்ற கோட்பாட்டை முன்வைத்து வருகிறது. இங்கு ஒரு விஷயத்தைத் தெளிவாகக் கூறிவிட வேண்டும்: சோவியத் யூனியனது பொருளாதார சாதனைகள் மக்களின் கரங்களில் உற்பத்தி சக்திகள் இருப்பதால் விளைந்துள்ள நேரடிப் பலனாகும். அவை மனிதனது ஆக்க உழைப்பிலிருந்து கனிந்த கனியே அன்றி, மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமையிலிருந்து அல்லது ஒருதேசம இன்னொரு தேசத்தைச் சுரண்டும் அனுசாரத்திலிருந்து பிறந்தவை அல்ல. இதற்கு மாறாக, வட அமெரிக்க வளம் ஏனைய மக்களை ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு உட்படுத்தியதை அடிப்படையாகக் கொண்டது. இன்னும் ஆழமாகப் பரிசீலித்துப் பார்ப்போமானால், அமெரிக்கா மட்டுமன்றி வேறு சில சிறுநாடுகளும் தமது வாழ்க்கையை முழு தேசங்களின் சுரண்டலின்மீது கட்டியிருப்பதைக் காணலாம். ஆகவே, ஒரு நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பது அதன் பரப்பளவோ அல்லது பூகோள நிலைமையோ அல்ல; அதன் பொருளாதாரம் எந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதைக் கொண்டுதான் அது நிர்ணயிக்கப்படுகிறது. பார்க்கப் போனால், முழு முதலாளித்துவ அமைப்பின் வளர்ச்சியும் சில மனிதர்கள் இதர மனிதர்களையும், சில தேசிய இனங்களும் நாடுகளும் இதர தேசிய இனங்களையும் நாடுகளையும் சுரண்டும் விதிகளுக்கு உட்பட்டதே ஆகும்.

இதுவரை அறிந்திராத ஒரு புதுவகையான அரசை சோவியத் யூனியன் உலகுக்குக் காட்டுகிறது; உள்நாட்டுப் படைப்பாக்க சக்திகளைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமே அதன் பொருளாதாரம்

வளர்ச்சி அடைகிறது. அக்டோபர் புரட்சிக்குப் பிறகு கடந்த 60 ஆண்டுகளில் சோவியத் நாடு சாதித்துள்ளவை யாவும் சோஷலிசப் பொருளாதார அமைப்பின் ஒப்பற்ற அனுகூலங்களுக்கு சிறந்த சான்ருகும். தவிரவும், சோவியத் யூனியன் தனது சாதனைகளை வளரும் உலகத்துடன் தாராளமாகப் பகிர்ந்து கொள்கிறது. தமது விடுதலைக்காகப் போராடும் சகல மக்களுக்கும் சோவியத் யூனியன் இடையருது தெரிவிக்கும் உறுதிவாய்ந்த அரசியல், பொருளாதார ஆதரவை இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

போராடும் மக்களுக்கு அக்டோபர் புரட்சி ஒரு விடிவெள்ளி. தேச விடுதலை வளர்ச்சியுறுவதற்கு சோஷலிசக் கூட்டமைப்பு இருந்து வருவது இன்றியமையாதது. பாசிஸத்தின் மீது சோவியத் யூனியன் வெற்றி பெற்றிருக்கவில்லை என்ருல், சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகள் தோன்றியிருக்கவில்லை என்ருல், கியூபா, வியத்நாம், லாவோஸ், கம்போடியா, அங்கோலா ஆகிய நாடுகளின் மக்கள் வெற்றிமுரசம் கொட்டியிருக்க முடியாது.

# அக்டோபர் புரட்சியின் வெல்லற்கரிய கருத்துக்கள்

**ஜார்ஜ் சிலுன்டிகா,**

ஜிம்பாப்வே தேசபக்த முன்னணியின்
ஒருங்கிணைப்புக் கமிட்டி உறுப்பினர்.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியை வெற்றிகரமாக சாதித்த புகழ்மிகு சோவியத் மக்களிடம் ஜிம்பாப்வேயின் போராடும் மக்கள் பெருமதிப்பு வைத்துள்ளனர். அக்டோபர் புரட்சியின் ஆண்டு விழாவை ஒட்டிதான் இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது. மார்க்சியம்—லெனினியத்தின் மாபெரும் தத்துவ நிபுணரும் செயல் வீரருமான லெனினது மேதத்துவமும், மகத்தான அக்டோபர் புரட்சியின் சாதனைகளும் மனித குலத்தின் முன்னேற்றப் பாதைக்கு ஒளி பாய்ச்சுகின்றன. நாட்டிற்குள்ளும், தனது சர்வதேச நடவடிக்கைகளிலும் ஒரு புரட்சிகரமான கொள்கை வழியைப் பின்பற்றி வருவதற்காக சோவியத் யூனியனைப் பாராட்டுகிறோம். அக்டோபர் புரட்சியின் அறுபதாம் ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தை உளப்பூர்வமாக வரவேற்கிறோம்; அளப்பரும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்ச்சி காரணமாக சோவியத் மக்கள் கொண்டுள்ள மகிழ்ச்சிப் பெருக்கில் பங்கு கொள்கிறோம்.

மனிதன் காலகாலமாகத் தனது விடுதலைக்காகப் போராடி வந்திருக்கிறான். எனினும், சோஷலிசத்தை வளர்ச்சிப் பாதையாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இன்றைய போராட்டத்தின் சிறப்பாகும். இந்த இலட்சியத்தை வகுத்துக் கொண்டதானது காலனி எதிர்ப்புப் போராட்டத்தின் சாரத்தையும் எதிர்கால வாய்ப்புக்களையும் தெளிவாக்கியுள்ளது; அதற்கு அவசியமான ஆழத்தையும் வலிமையையும் அளித்துள்ளது; நவீன காலனி ஆதிக்கச் சூழ்ச்சிகளை சமாளித்து நிற்கச் செய்துள்ளது. தேச விடுதலை இயக்கங்களுக்கும் சுரண்டல், காலனி ஆதிக்கம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடும் வீரர்களது சர்வதேச இயக்கத்துக்கும் இடையே இயல்பான, இன்றியமையாத சித்தாந்த உறவுகள் எழுந்தன. ஸ்தல பூர்ஷுவாக்

களுக்கும் சர்வதேசப் பெரு முதலாளிகளுக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் இடையே நிலவும் தொடர்புகளை அம்பலப்படுத்துவது இன்று மிகவும் எளிதாக உள்ளது. மெய்யான சுதந்திரத்திலிருந்து நம்மைப் பிரிக்கும் கோட்டை இன்று நம்மால் தெளிவாகக் காணமுடிகிறது. இந்தக் கோட்டின் ஒருபுறத்தில் உண்மையான சுதந்திரத்துக்காகப் போராடும் சக்திகளும் இன்னொரு புறத்தில் சுதந்திரத்தின் விரோதிகளும் உள்ளனர்.

மார்க்சின் போதனைகளும், மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் பயனாய் சோவியத் அரசின் உதயமும் சித்தாந்த ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் விடுதலை இயக்கங்களுக்கு வழி செப்பனிட்டுக் கொடுத்தன. இந்த இயக்கங்களில் பல ஏற்கெனவே தமது குறிக்கோள்களை அடைந்துவிட்டன; மற்றும் சில இன்னும் போராடி வருகின்றன. 1917 அக்டோபர் 25ல் தொழிலாளர்கள், படை வீரர்களது பிரதிநிதிகளின் பீட்ரோகிராடு சோவியத்தின் ராணுவ-புரட்சிக் கமிட்டி வெளியிட்ட ''ரஷ்யாவின் பிரஜைகளுக்கு!'' எனும் வேண்டுகோளைவிட வேறு எதுவும் விடுதலைப் போராட்டத்தையும், அதன் சாதனைகளையும், அதன் பொதுத் திசை வழியையும் இவ்வளவு சிறப்பாக விளக்கிவிட முடியாது. மக்கள் எந்த லட்சியத்துக்காகப் போராடி வந்தார்களோ அந்த லட்சியம் வெற்றியடைந்து விட்டதைப்பற்றி அது கூறிற்று; ஒரு ஜனநாயக சமாதான ஒப்பந்தம் உடனடியாக செய்து கொள்ளப்பட்டதையும், நிலத்தில் தனியார் உடைமை ஒழிக்கப்பட்டதையும், உற்பத்தியின்மீது தொழிலாளர் கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டதையும், சோவியத் ஆட்சி நிறுவப்பட்டதையும் அது குறிப்பிட்டது.

இந்த வேண்டுகோள் சுதந்திரத்துக்கான புரட்சிப் போராட்டத்துக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அநேகமாக எல்லோரது நம்பிக்கையின் ஓர் உண்மையான வெளியீடாகும். இதில்தான் மகத்தான அக்டோபர் புரட்சியின் வலிமை பொதிந்துள்ளது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மகத்தான அக்டோபர் புரட்சியின் பதாகையை எப்போதும் உறுதியாக உயர்த்திப் பிடித்து வந்துள்ளது; 1917 முதல் இன்று வரை உலகில் எல்லா விடுதலை இயக்கங்களுக்கும் பொருளாதார ரீதியிலும், ராஜிய ரீதியிலும் முன் நின்று ஆதரவு அளித்து வந்துள்ளது. இந்த நடவடிக்கைகள் காரணமாக, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த புரட்சி சக்திகள் எல்லா சர்வதேச சபைகளிலும் மனித உரிமைகளையும், சோஷலிச லட்சியத்தையும் பாதுகாக்கும் ஓர் ஒன்றுபட்ட, வலிமைமிக்க சக்தியாகப் பரிணமித்துள்ளன.

# சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிப் பொதுச் செயலாளர் எல். ஐ. பிரெஷ்னேவுக்கு சர்வதேச விஞ்ஞான மாநாடு அனுப்பிய செய்தியிலிருந்து

லெனினியக் கட்சியின் தலைமையில் உழைப்பாளி மக்கள் சாதித்த மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியானது ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த மக்களின் தேச விடுதலை இயக்க நிகழ்வின்மீது செலுத்தும் ஆக்கபூர்வமான செல்வாக்கும், உலக நிகழ்ச்சிப் போக்குகள் முழுவதன்மீதும் அது ஏற்படுத்தும் பிரதிபலிப்பும் ஆண்டுகள் செல்லச் செல்ல அதிகரித்து வருகின்றன. உலகின் முதலாவது சோஷலிச அரசு கட்டி உருவாக்கப்பட்ட அனுபவமும், சோவியத் யூனியனைச் சேர்ந்த எல்லா பெரிய, சிறிய தேசிய இனங்கள் அடைந்துள்ள சமூக, கலாசார மறுமலர்ச்சியும் காலனி ஆதிக்கத்தையும் வருண இன வெறியையும் எதிர்த்து தேசிய விடுதலைக்காகவும், சமூக விமோசனத்துக்காகவும் போராடும் லட்சோப லட்சக்கணக்கானோர்க்கு ஓர் உத்வேகமூட்டும் முன்னுதாரணமாக விளங்குகின்றன. இந்த ஆண்டில் தனது புகழ்மிகு 60வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும் மாபெரும் நாடான சோவியத் யூனியனை சகல சுதந்திர, முற்போக்கு சக்திகளின் ஒரு நம்பகமான கோட்டையாக அவர்கள் காண்கின்றனர். சோவியத்துகளது பூமியின் அறுபது வீரஞ்செறிந்த ஆண்டுகள் உலகை மாற்றும் ஒரு மாபெரும் வரலாற்றுப் பாதையாக அமைந்துள்ளன; அனைத்து முற்போக்கு மனிதகுலமும் சோவியத் யூனியனது இந்த விழாவை தனது பெரிதும் மதிப்புமிக்க விழாவாகக் கொண்டாடுகிறது.

காலனி ஆதிக்கம் விட்டுச் சென்ற கொடிய விளைவுகளைச் சமாளிப்பதற்கும், ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டுவதற்கும், எல்லா நாடுகளிடையேயும் சமத்துவமான பரஸ்பர அனுகூலம் பயக்கும் பொருளாதார ஒத்துழைப்பை நிறுவுவதற்கும் இளம் சுதந்திர நாடுகள் மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு சோவியத் யூனியன் உறுதியாக அளித்துவரும் ஆதரவு உலக-வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மக்களிடையே சமாதானம், நட்புறவு, பதற்றநிலைத் தணிவு எனும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் கோட்பாட்டு ரீதியான கொள்கையை நாங்கள்

வரவேற்கிறோம். சமாதானத்தை நேசிக்கும் முற்போக்கு மனித குலம் அனைத்தின் நன்மதிப்பையும், ஆதரவையும் இந்தக் கொள்கை பெற்றிருக்கிறது.

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சிதான் இந்தக் கொள்கைக்கு மூல ஊற்றுகும். சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் நடவடிக்கைகளிலும், சோவியத் யூனியனது உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையிலும் மாபெரும் லெனினது அமரத்துவக் கருத்துக்களின் செயல் வடிவத்தைக் காண்கிறோம்.

# மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியும் தேசவிடுதலை இயக்கமும்

பீட்டர் கெனமன்,

பொதுச் செயலாளர், ஸ்ரீலங்கா கம்யூனிஸ்டுக் கட்சி
(முன்னாள் வீட்டுவசதி, நிர்மாண அமைச்சர்)

சர்வதேச ஏகாதிபத்தியத்தின் மீது தேசவிடுதலை இயக்கம் பிரமிக்கத்தக்க, பிரம்மாண்டமான வெற்றிகள் பெற்றிருப்பது மட்டுமன்றி, பல பகுதிகளில், அது தனது வளர்ச்சியில் ஒரு புதிய கட்டத்திலும் பிரவேசித்துள்ளது. இத்தகைய வேளையில் நாம் மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் 60ம் ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறோம்.

60 ஆண்டுகளுக்கு முன்பு, உலகப் பரப்பில் நான்கில் மூன்று பங்கில் காலனிகளும், அரைக் காலனிகளும், டொமினியன்களும், சார்பு பிரதேசங்களும் நிறைந்திருந்தன. இன்று காலனி ஆதிக்கத்தின் பழைய வடிவங்கள் புவியிலிருந்து அநேகமாக அடியோடு மறைந்துவிட்டன.

60 ஆண்டுகளுக்கு முன்பு, உலக மக்கட் தொகையில் கிட்டத்தட்ட 70 சதவீதத்தினர் நேரடியான அல்லது மறைமுகமான ஏகாதிபத்திய ஆட்சியில் வாழ்ந்து வந்தனர். இன்று அவர்களின் எண்ணிக்கை உலக மக்கட் தொகையில் ஒரு சதவிகிதமாகக் குறைந்துவிட்டது.

ஏகாதிபத்தியத்தின் காலனி அமைப்பு சிதைந்து விட்டது பழைய காலனி சாம்ராஜ்யங்களின் இடிபாடுகள் மீது 80க்கு மேற்பட்ட புதிய தேசிய அரசுகள் உதித்தெழுந்துள்ளன.

1917ஆம் வருட மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியும், அதனைத் தொடர்ந்து சோவியத் யூனியனில் சோஷலிச நிர்மாணமும் சர்வதேச சக்திகளின் பரஸ்பர நிலையில் ஏற்படுத்திய மாற்றங்கள் காரணமாகவே கடந்த 60 ஆண்டுகளில் தேசவிடுதலை இயக்கம் இத்தகைய அதிசயிக்கத் தக்க வெற்றிகளைப் பெற முடிந்தது.

# உலக மாற்றங்கள்

உலக ரீதியில் முதலாளித்துவத்திலிருந்தும் ஏகாதிபத்தியத்திலிருந்தும் சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் மாறிச் செல்வதை அக்டோபர் புரட்சி ஆரம்பித்து வைத்தது; அது போலவே, ஏகாதிபத்தியத்தின் காலனி அமைப்பினது சிதைவுக்கு வழிகோலிய இயக்க நிகழ்வையும் அந்த மாபெரும் புரட்சி தொடங்கி வைத்தது.

ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்பட்ட மக்களின் தேசவிடுதலை இயக்க வரலாற்றில் மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி உண்மையிலேயே ஒரு தீர்மானமான திரும்புகட்டம் என்பதில் ஐயமில்லை. அக்டோபர் புரட்சி அவர்கள்மீது ஏற்படுத்திய சர்வாம்ச பிரதிபலிப்பு மிக ஆழமானது; இது அவர்களது தேசவிடுதலை இயக்கங்களில் அளவு ரீதியிலும் குணரீதியிலும் பிரதான மாற்றங்களை ஏற்படுத்திற்று.

1917ஆம் வருட தேசவிடுதலை இயக்கத்தின் நிலையை அதன் இன்றைய நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இதனைத் தெளிவாகக் காணலாம்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, ஏகாதிபத்தியத்தால் எதிர்க்கப்பட்ட நாடுகளிலிருந்த தேச விடுதலை இயக்கங்கள் பெரும்பாலும் மேல்தட்டு வர்க்க இயக்கங்களாகவே இருந்தன; மிகவும் சிறிய நிறுவனங்களையே இவை கொண்டிருந்தன; இவற்றில் தேசிய பூர்ஷுவா அல்லது குட்டி பூர்ஷுவா அறிவுத் துறையினர் ஆதிக்கம் செலுத்தி வந்தனர்; இவர்கள் வரையறுக்கப்பட்ட சீர்திருத்தங்களுக்காக மன்றாடி வந்தனர்.

இயக்கத்தின் திசைவழி மீதும் தன்மை மீதும் வெகு ஜனங்களால் செல்வாக்கு செலுத்த முடிந்த இடங்களில் கூட, அவர்களது செல்வாக்கு தவிர்க்க முடியாதபடி புரட்சியின் பூர்ஷுவாக் கட்டுக்கோப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

இன்று நிலைமை அடியோடு மாறிவிட்டது. தேசவிடுதலை இயக்கங்கள பரந்த வெகுஜனங்களின் மக்கள் இயக்கங்களாக விளங்குகின்றன; லட்சக்கணக்கான மக்களும், பல சமூக வர்க்கங்களும், பகுதியினரும் அவற்றில் ஈடுபட்டுள்ளனர். இந்த இயக்கங்கள் அரசியல் சுதந்திரம் பெற அல்லது ஏற்கெனவே பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்க, வலுப்படுத்த வீரியத்துடன் போராடுகின்றன; பொருளாதார சுதந்திரத்தையும் சமூக முன்னேற்றத்தையும் நிலைநாட்ட போராடுகின்றன; சில சந்தர்ப்பங்களில் சோஷலிச திசை வழிகளில் வளர்ச்சியுறவும் போராடுகின்றன.

கடந்த 60 ஆண்டுகளில் தேச விடுதலை இயக்கம் குண ரீதியில் பல புதிய அம்சங்களைப் பெற்றுள்ளது.

60 ஆண்டுகளுக்கு முன்பு இந்த இயக்கம் ஏதேனும் ஓர் ஏகாதிபத்திய நாட்டுக்கு எதிராகத்தான் நடைபெற்றது. அவ்வாறு இல்லாமல் இப்போதைய தேச விடுதலை இயக்கம் முழுக் காலனி அமைப்புக்கு எதிராகவும் திருப்பி விடப்பட்டுள்ளது.

இன்றைய தேச விடுதலைப் புரட்சிகள் காலனி நாடுகள், சார்பு நாடுகளது மக்களின் ஏகாதிபத்திய-எதிர்ப்புப் புரட்சிகளாகவோ அல்லது இத்தகைய அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டு, காலனி ஒடுக்குமுறையால் தங்கள் மீது திணிக்கப்பட்ட சமத்துவமற்ற உறவுகளை ஒழித்துக்கட்ட முனைந்துள்ளோரின் புரட்சிகளாகவோ திகழ்கின்றன.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு தேச விடுதலைப் புரட்சிகள் இங்கு மங்குமாக தன்னிச்சையாக வெடித்தன; அதிக சிரமமின்றி ஏகாதிபத்தியவாதிகளால் இவற்றை ஒடுக்கிவிட முடிந்தது. ஆனால் இன்றைய சக்தி வாய்ந்த புரட்சி இயக்கங்கள் மூன்று கண்டங்களைத் தழுவியுள்ளன. இந்தப் புரட்சிகளை நடத்தும் சக்திகள் தமது நலன்கள் ஒரே மாதிரியானவை என்பதை உணர்ந்துள்ளன; தம்மிடையே பல்வேறு வழிகளில் நேரடித் தொடர்புகள் நிறுவியுள்ளன. இன்று இது ஒரே தேச விடுதலைப் புரட்சியைப் பற்றி மக்கள் பேசுவதை சாத்தியமாக்கியுள்ளது.

## 1917 ஆம் ஆண்டும் இன்றும்

1917 ஆம் ஆண்டில், தேச விடுதலை இயக்கம் உலக சோஷலிசப் புரட்சியின் எதிர்கால மூலப் படையாக மட்டுமே இருந்தது. ஆனால் இன்று உலகளாவிய ரீதியில் முதலாளித்துவத்திலிருந்தும் ஏகாதிபத்தியத்திலிருந்தும் சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் மாறிச் செல்லும் இயக்க நிகழ்வு முழுவதன் ஒரு பிரிக்கமுடியாத, கேந்திரப் பகுதியாக விளங்குகிறது. பின்தங்கிய நிலையில் இருந்தபோதிலும், காலனி நாடுகளது உழைப்பாளி மக்களின், விவசாயிகளின் வெகுஜனப் பகுதியினர் உலகப் புரட்சியின் பிந்தைய கட்டங்களில் மிகப்பெரிய பங்காற்றுவார்கள் என்று லெனின் கூறிய தீர்க்கதரிசனம் மெய்யாகிவிட்டது.

1917க்கு முன்பு, ஏகாதிபத்தியத்தால் எதிர்க்கப்பட்ட நாடுகளில் தேச விடுதலைக்கான இயக்கங்கள் பொது ஜனநாயக இயக்கத்தின் பகுதியாக இருந்தன. 1917க்குப் பிறகு அவை உலக சோஷலிசப் புரட்சியின் பகுதியாகிவிட்டன.

இன்றைய தேச விடுதலை இயக்கங்களின் குறிக்கோள்கள் கடந்த கால பூர்ஷுவா-ஜனநாயகப் புரட்சிகள் கொண்டிருந்த நோக்கங்களுடன் கட்டுப்பட்டிருக்கவில்லை. அவை அரசியல் சுதந்திரம் பெறுவதுடன், உள்நாட்டு தேசிய மார்க்கெட்டை அமைத்துப் பாதுகாப்பதுடன், முதலாளித்துவ வளர்ச்சியுடன் நின்றுவிடுவதில்லை.

தேச விடுதலை இயக்கத்திலிருந்து தோன்றிய புதிய தேசிய அரசுகள் இன்னமும் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் கட்டுக்கோப்புக்குள் இருந்த போதிலும், அவை ஏகாதிபத்தியத்தினது அரசியல் அமைப்பின் ஒரு பகுதியாக இல்லை. உலக விவகாரங்களில் சமாதானத்திற்கு ஆதரவாகவும், ஏகாதிபத்தியம், முதலாளித்துவ ஏகபோகங்கள், பன்னட்டுக் கார்ப்பரேஷன்கள் ஆகியவற்றுக்கு எதிராகவும் தாம் ஒரு சுதந்திரமான பாத்திரத்தை வகிக்கமுடியும் என்பதை இந்தப் புதிய அரசுகள் ஐக்கிய நாடுகள் சபையிலும், அதன் அமைப்புகளிலும், கூட்டு சேரா இயக்கத்திலும், இதர பல உலக சபைகளிலும் நிரூபித்துக் காட்டியுள்ளன.

தேசவிடுதலை இயக்கம் ஏற்கெனவே அரசியல் சுதந்திரம் பெற்று, இரண்டாவது வளர்ச்சிக் கட்டத்தில் பிரவேசித்துள்ள நாடுகளின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், எந்த வளர்ச்சிப் பாதையை—முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையா அல்லது சோஷலிச வளர்ச்சிப் பாதையா—பின்பற்றுவது என்ற முக்கிய பிரச்சினை அங்கு மேன்மேலும் முன்னணிக்கு வந்துகொண்டிருப்பதாகும். இது இந்நாடுகள் பலவற்றில் பெரும் அரசியல் போராட்டங்கள் நடைபெற வழிகோலியுள்ளது. சில நாடுகளில் சோஷலிச திசைவழியில் அமைந்த கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

சோவியத் யூனியனில் சோஷலிசத்தை நிர்மாணிக்கவும், பின்னர், ஓர் உலக சோஷலிச அமைப்பு தோன்றவும் பாதை செப்பனிட்டுத் தந்த மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சி மட்டும் நடைபெற்றிருக்கவில்லை என்றால், தேசவிடுதலை இயக்கத்தின் இந்தப் பரந்த, ஆழமான வளர்ச்சிப் போக்குகளில் எதுவும் கடந்த 60 ஆண்டுகளில் இத்தனை வேகத்துடன், இவ்வளவு வெற்றிகரமாக நிகழ்ந்திருக்க முடியாது.

## "பொற்கால"த்தின் முடிவு

காலனி ஆதிக்கத்தினது "பொற்கால"த்தின் முடிவை அக்டோபர் புரட்சி அறிவித்தது. பொது முதலாளித்துவ நெருக்கடியின் ஒரு பகுதியாக காலனி ஆதிக்க நெருக்கடி தொடங்கிவிட்டதை அது குறித்தது. காலனி நாடுகளையும், அரைக்காலனி நாடுகளையும் சேர்ந்த லட்சோப லட்சம் மக்களுக்கு அது தலைசிறந்த, உத்வேகமூட்டும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. அது அவர்களுக்கு உண்மையான, ஸ்தூலமான வெற்றி நம்பிக்கைகளை அளித்தது; தமது சொந்த பலம்பற்றிய புதிய நம்பிக்கையை அவர்களிடம் புகட்டிற்று. நாடு பிடிக்கும் நாட்டமில்லாத, சுரண்டாத, ஓர் உண்மை நண்பனாக, ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களின் பாதுகாவலனாக விளங்கும் ஒரு புதிய அரசை, மாபெரும்

நாட்டை ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்பட்ட மக்கள் வரலாற்றிலேயே முதல் தடவையாகக் கண்டனர்.

## லெனினது போதனைகள்பால் விசுவாசம்

இளம் சோஷலிச சோவியத் அரசு ஆரம்ப நாட்கள் முதலே லெனினது போதனைகளுக்கும், அக்டோபர் புரட்சியைத் தலைமைதாங்கி நடத்திய போல்ஷிவிக் கட்சிகளின் கொள்கைகளுக்கும் விசுவாசமாக இருந்து வந்துள்ளது.

லெனின் நவீன ஏகாதிபத்தியம்பற்றி விஞ்ஞானரீதியாகப் பகுத்தாய்ந்ததோடு, அதனை இறுதியாக முறியடிப்பதற்கான மாபெரும் திட்டத்தையும் வகுத்துக் கொடுத்தார். தொடக்ககாலம் முதலே அவர் காலனி ஆதிக்கத்துக்கு எதிரான, ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை முன்னின்று ஆதரித்து வந்தார். 1905ம் வருட ரஷ்யப் புரட்சிக்குப் பிறகு இரானிலும், துருக்கியிலும், சீனாவிலும் வெடித்த புரட்சிகளை ஆதரித்து அவர் அனல் கக்கும் கட்டுரைகளை எழுதினார்; "ஆசியாவின் ஆரம்பக்கட்ட விழிப்பை" ஆதரிப்பதற்காக ஒரு பரந்த அரசியல் பிரசாரத்தைத் தொடங்கினார்; இந்தியா, எகிப்து, மற்றும் இதர நாடுகளில் காலனி ஆதிக்கவாதிகள் புரியும் அட்டூழியங்களை வன்மையாகக் கண்டித்தார்.

## சோவியத் ஆதரவு

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப வாக்கில், ஆசியப் புரட்சிகளை மேற்கில் ஆதரித்த ஒரே அரசியல் கட்சி லெனினது கட்சியே ஆகும்.

இளம் சோவியத் அரசு ஏகாதிபத்தியவாதிகளின் ஆயுதந் தாங்கிய தலையீட்டையும், வெண் காவல்படையினரையும் முறியடித்ததும் தனது அண்டை நாடுகளது மக்களின் காலனி-எதிர்ப்புப் போராட்டங்களுக்கு தன் சக்திக்கு உட்பட்ட எல்லா உதவியையும் செய்தது.

ஆனால் அந்த ஆரம்ப நாட்களில் சோவியத் யூனியன் தேசவிடுதலை இயக்கத்துக்கு பிரதானமாக அரசியல், தார்மிக ஆதரவே கொடுக்க முடிந்தது. எனினும் சோவியத் அரசு வலுப்பெற்றதும், சோஷலிச நிர்மாணம் வளர்ச்சி அடைந்ததும் சோவியத் உதவி பொருளாயத உதவியாக, பன்முக உதவியாக மலர்ந்தது. அது துருக்கி, ஆப்கனிஸ்தான், மங்கோலியா ஆகிய நாடுகளுக்குப் பொருளாதார உதவி புரிந்தது; ஜப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களால் தாக்கப்பட்ட சீனாவுக்கு ராணுவ தளவாடங்களையும், ஆலோசகர்களையும் அனுப்பி வைத்தது.

இரண்டாம் உலக யுத்தத்திற்கு முந்திய ஆண்டுகளில் அக்டோபர் புரட்சியின் அரசியல், சித்தாந்த செல்வாக்கு காலனி, அரைக்காலனி

நாடுகளின் மக்களிடையே பெருமளவுக்கு வளர ஆரம்பித்தது. இந்த நாடுகளிலிருந்த முன்னேற்றமடைந்த பகுதியினர் லெனின் போதனையையும், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் அனுபவத்தையும் ஆராய முற்பட்டனர். 1930 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட முதலாவது முதலாளித்துவப் பொது நெருக்கடி காலனி நாடுகளையும் சார்பு நாடுகளையும் சேர்ந்த மக்களை மிகுந்த துன்ப துயரங்களில் ஆழ்த்திற்று. ஆனால் இந்த நெருக்கடியால் சோவியத் யூனியன் எவ்வகையிலும் பாதிக்கப்படவில்லை. இது சோவியத் யூனியனைப்பற்றி நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்திற்று. இதே போல், சர்வதேச சங்கத்தில் காலனி நாடுகளது, சார்பு நாடுகளது மக்களின் தேசிய ஆர்வ விருப்பங்களை ஆதரித்து அது நடத்திய தீரமிக்கப் போராட்டமும் அதன் செல்வாக்கை உயர்த்திற்று. அநேக காலனி நாடுகளிலும், சார்பு நாடுகளிலும் புதிதாக கம்யூனிஸ்டுக் கட்சிகள் அமைக்கப்பட்டது இந்த வளர்ந்துவந்த செல்வாக்குக்கு சிறந்த சான்றாக விளங்கிற்று.

## இரண்டாம் உலக யுத்தமும் பின்னரும்

இரண்டாம் உலக யுத்த ஆண்டுகளில் சோவியத் யூனியன், சொல்லொண்ணா கஷ்டநஷ்டத்திற்கு உள்ளாகி, உலக ஏகாதிபத்தியத்தின் மிகவும் ஆக்கிரமிப்பு வெறிகொண்ட படைப் பிரிவுகளை, அதாவது ஐரோப்பாவில் ஜெர்மன், இத்தாலிய பாசிஸத்தையும், ஆசியாவில் ஜப்பானிய ராணுவாதிக்கத்தையும் முறியடிப்பதில் தீர்மானமான பங்கு வகித்தது. பாசிஸத்தின் ராணுவத் தோல்வியைத் தொடர்ந்து ஐரோப்பாவைச் சேர்ந்த பல நாடுகளில் சோஷலிசப் புரட்சிகள் வெற்றிபெற்றன; உலக சோஷலிச அமைப்பு உதயமாயிற்று.

தேச விடுதலை இயக்கத்துக்கு சோவியத் யூனியன் வழங்கும் ஆதரவிலும் உதவியிலும், ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்படும் நாடுகளது அரசியல் வளர்ச்சிப் போக்குகள் மீது அதன் முன்னுதாரணம் வகிக்கும் செல்வாக்கிலும் குணரீதியில் ஒரு புதிய கட்டம் தோன்றுவதை இந்த நிகழ்ச்சிகள் யாவும் சாத்தியமாக்கின.

பாசிஸத்தின் தோல்வியும், உலக சோஷலிச அமைப்பின் தோற்றமும் தேசவிடுதலை இயக்கம் வெற்றிவாகைகள் சூடும் சகாப்தத்தைத் தொடங்கி வைத்தன. இரண்டாம் உலக யுத்தம் முடிவுற்ற இருபதே ஆண்டுகளில் ஏறத்தாழ 150 கோடி மக்கள் ஏகாதிபத்தியத்திலிருந்து அரசியல் சுதந்திரம் பெற்றுள்ளனர்.

காலனி நாடுகளின், சார்பு நாடுகளின் மக்கள் தமது சுதந்திரத்தைப் பெறுவதற்குக் கடைப்பிடித்த போராட்ட வடிவங்கள் ஒரேமாதிரியானவையாக இருக்கவில்லை. சில நாடுகளின் மக்கள் தமது ஏகாதி

பத்திய ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராக ஆயுதந்தாங்கிய போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. ஏனைய நாடுகளின் மக்கள் ஆயுதந் தாங்கிய போராட்டத்தில் ஈடுபடாமல், பல்வேறு அரசியல் போராட்ட வடிவங்கள் மூலம் தமது சுதந்திரத்தை வென்றடைந்தனர்.

இந்தப் போராட்டங்கள் அனைத்தும் சோவியத் யூனியனது தார்மிக, அரசியல், பொருளாயத ஆதரவைப் பெற்றன. இது விஷயத்தில் சோவியத் யூனியனின் புகழ்மிகு பாரம்பரியம் அனைவரும் நன்கு அறிந்ததே. எனவே அதனை இங்கு விரிவாகக் கூறத் தேவையில்லை. ஏகாதிபத்தியத்திடமிருந்து அரசியல் சுதந்திரம் பெறுவதற்காக ஆசியாவையும், ஆப்பிரிக்காவையும் சேர்ந்த மக்கள் நடத்திய போராட்டங்களுக்கு சோவியத் யூனியன் அளித்த ஆதரவை யாரும் என்றும் மறக்க முடியாது. சில சந்தர்ப்பங்களில் இந்த ஆதரவு அரசியல் ஆதரவாக இருந்தது; வேறு சில சந்தர்ப்பங்களில், அல்ஜீரியா, அங்கோலா போன்ற நாடுகளின் விஷயத்தில், ஆயுதந் தாங்கிய சுதந்திரப் போராட்டம் கணிசமான உதவியைப் பெற்றது.

புதிய தேசிய அரசுகள் அரசியல் சுதந்திரம் பெற்ற பிறகு, அவற்றுக்கு எதிர்ப்புரட்சியை ஏற்றுமதி செய்யும் ஏகாதிபத்திய முயற்சிகளுக்கு எதிராக அந்த சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சோவியத் யூனியன் உறுதியாக ஆதரவு அளித்தது. 1956ல் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு எதிராக நடைபெற்ற ஏகாதிபத்திய தாக்குதலையும், கியூபா மீது படையெடுக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் திரும்பத் திரும்ப செய்த முயற்சிகளையும், 1967ல் ஐக்கிய அரபுக் குடியரசு, சிரியா, ஜோர்டான் ஆகியவற்றுக்கு எதிராக நடைபெற்ற இஸ்ரேலிய ஆக்கிரமிப்பையும் சோவியத் யூனியன் தடுத்து நிறுத்தியதை இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக வியத்நாம் மக்கள் நடத்திய வீரஞ் செறிந்த, வெற்றிகரமான போராட்டத்திற்கு சோவியத் யூனியன் வழங்கிய மாபெரும், சர்வாம்ச ஆதரவு இவை எல்லாவற்றிலும் மிகச் சிறந்த உதாரணமாகும்.

## புதிய கட்டம்

மிகப் பெருப்பாலான புதிய தேசிய அரசுகளில் இன்று அரசியல் சுதந்திரம் பூரணமாகவோ அல்லது கணிசமான அளவிலோ நிலைநாட்டப்பட்டுள்ளது. எனவே, ஒட்டு மொத்தமாக தேசவிடுதலை இயக்கத்துக்கு ஒரு புதிய கட்டம் தொடங்கியிருக்கிறது எனலாம். இந்தக் கட்டத்தில் பொருளாதார சுதந்திரத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும், ஆழமான சமூக-பொருளாதார, கட்டமைப்பு மாற்றங்களுக்குமான போராட்டம் பிரதான பிரச்சினையாகி உள்ளது. அரசியல் சுதந்திரம் பெறுவதுடன் தேசவிடுதலை இயக்கம் முடிவடைந்து விடுவதில்லை; பொருளாதார

விடுதலையும் சமூக முன்னேற்றமும் எய்தப்பட்டாலொழிய அது பூர்த்தியடைந்ததாகாது என்ற லெனினது போதனைக்கு இது முற்றிலும் இசைந்ததாக உள்ளது.

தேசவிடுதலை இயக்கங்களது போராட்டத்தின் இந்தப் புதிய கட்டம் அநேகமாக நீண்ட காலம் நீடிக்கும், அரசியல் சுதந்திரம் பெறப்பட்ட கட்டத்தைவிட இது அதிக சிக்கல் மிகுந்ததாக இருக்கும் என்பதை அனுபவம் காட்டியுள்ளது. புதிய அரசுகளுக்கு எதிராக பகிரங்க ஆக்கிரமிப்புகளிலும் அரசியல் சீர்குலைவு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதுடன், ஏகாதிபத்திய இப்போது நவீன காலனி ஆதிக்கப் போர்த் தந்திரத்தின் மீது மேன்மேலும் அதிக நம்பிக்கை வைக்க ஆரம்பித்துள்ளது; புதிய உலக நிலைமையில், இதன் மூலம் தனது அடிப்படைக் குறிக்கோள்களை எய்த அது முயற்சி செய்கிறது. உண்மையில், நவீன காலனி ஆதிக்கமானது கடந்த இருபது ஆண்டுகளில் தேச விடுதலை இயக்கம் பெற்ற வெற்றிகளை ஈடு செய்ய ஏகாதிபத்தியத்தின் பிரதான எதிர்ப்போர்த் தந்திரமாகி உள்ளது.

பொருளாதார, தொழில் நுட்ப பின்தங்கிய நிலை பற்றிய பிரச்சினைகளையும், ஏகாதிபத்தியத்தின் நவீன-காலனியாதிக்க எதிர்த்தாக்குதல்களையும் புதிய தேசிய அரசுகள் சமாளிக்க வேண்டியுள்ள, தேசவிடுதலை இயக்கத்தின் இந்தப் புதிய கட்டத்தில் வளரும் நாடுகளுக்கு சோவியத் யூனியன் வழங்கும் பொருளாதார ஒத்துழைப்பும் தொழில் நுட்ப உதவியும் மிகவும் தீர்மானமான முக்கியத்துவத்தைப் பெறுகின்றன.

வளரும் நாடுகளுக்கு அளிக்கப்படும் சோவியத் பொருளாதார உதவி ஏகாதிபத்திய நாடுகளின், முதலாளித்துவ ஏகபோகங்களின் "உதவி" யிலிருந்து அடிப்படையிலேயே வேறுபடுகிறது. சோவியத் உதவியுடன் எந்த அரசியல் நிபந்தனைகளும் விதிக்கப்படுவதில்லை; இதற்கு ஈடாக எத்தகைய ராணுவ அல்லது அரசியல் பொறுப்புகளும்கோரப்படுவதில்லை. ஏகபோக மூலதனத்திற்கு எதிரான போராட்டத்தில் வளரும் நாடுகளின் நிலைகளைப் பலப்படுத்துவதையும், அவற்றின் மக்களது துரித பொருளாதார, கலாசார முன்னேற்றத்திற்கான முன் தேவைகளைத் தோற்றுவிப்பதையும் நோக்கமாகக் கொண்டது சோவியத் உதவி.

அனுகூலமான கடனுதவிகள் வழங்கியும், பரந்த, வேறுபட்ட விஞ்ஞான, தொழில் நுட்ப உதவி நல்கியும், சமத்துவம் பரஸ்பர அனுகூலம் என்ற அடிப்படையில் வர்த்தகத்தில் சோதர ஒத்துழைப்பை விரிவாகப் பலப்படுத்தியும் சோவியத் யூனியன் வளரும் நாடுகளின் பொருளாதார சுதந்திரத்திற்கும் சமூக முன்னேற்றத்துக்குமான போராட்டத்துக்கு உதவுகிறது.

இதனுல்தான், மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் 60வது ஆண்டு விழா கொண்டாடப்படும் தருணத்தில், வளரும் நாடுகளைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த விடுதலைக்கு வழிகோலிய இயக்க நிகழ்வைத் தொடங்கி வைத்த சோவியத் யூனியனை வாழ்த்துகின்றனர், பாராட்டுகின்றனர்; சோவியத் யூனியனுடனும் உலக சோஷலிச அமைப்புடனும் நெருக்கமான, அந்நியோந்நியமான உறவு கொள்வதே தேச விடுதலை இயக்கத்தின் இறுதி வெற்றிக்கு மிக நிச்சயமான உத்தரவாதம் என்று திடமாக நம்புகின்றனர்.

# அக்டோபர் புரட்சியும் ஆசியாவில் அதன் பிரதிபலிப்பும்

**டி. பி. சுபசிங்கே,**

ஸ்ரீலங்கா-சோவியத் நட்புறவு லீகின் தலைவர்
(முன்னாள் தொழில்துறை, விஞ்ஞான
விவகாரங்கள் அமைச்சர்,
சோவியத் யூனியனுக்கு தூதுவர்)

மகத்தான அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் அறுபதாவது ஆண்டு விழா நெருங்கி வருகிறது. இந்த ஆண்டுகளில் பிறந்து வளர்ந்து பொருளாதார, சமூக, அரசியல் நிகழ்ச்சிப் போக்கில் ஆர்வம் கொண்ட நாம், இந்தக் காலப் பகுதியில் ஆசியாவில் நடந்தேறியுள்ள குறிப்பிடத் தக்க மாற்றங்களை நினைவு கூராமல் இருக்க முடியாது. அக்டோபர் புரட்சியானது ஆசியா முழுவதுக்கும், உலகுக்கும் ஒரு சகாப்தகர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும்.

அக்டோபருக்கு முந்தைய அறுபது ஆண்டுகள் பல வகைகளிலும் ஏகாதிபத்தியம் வலுப்பெற்ற கால கட்டமாக இருந்தது. இமாலயத்துக்கு வடக்கே உள்ள பெரும் நிலப்பரப்பில் ரஷ்ய ஏகாதிபத்தியம் தனது அதிகார எல்லையை விஸ்தரித்தது. அது உண்மையில் தேசிய இனங்களின் ஒரு சிறைக் கூடமாகத்தான் இருந்தது. இலேசான தேச பக்தக் குமுறல்கள் கேட்ட போதிலும் இந்தியா. பர்மா, மலேசியா, இலங்கை (ஸ்ரீலங்கா) ஆகிய நாடுகளின் மீது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க நிழல் கவிந்திருந்தது. மிகப் பழைய காலனி ஆதிக்க நாடுகளில் ஒன்றான ஹாலந்து இந்துமா கடலில் தனது அயல் நிலப்பரப்புகள் பலவற்றை பிரிட்டனிடம் இழந்துவிட்டு, செழுமைமிக்க இந்தோனேஷ்யாத் தீவுக் கூட்டங்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வந்தது. இந்தோ-சீனாவில் பிரான்ஸ் நன்கு வேரூன்றிக் கொண்டிருந்தது. பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களுக்கு இடையே இருந்த போட்டிதான் சயாம் பெயரளவுக்கு சுதந்திரமாக இருப்பதைச் சாத்தியமாக்கிற்று. கிட்டத்தட்ட எல்லா ஏகாதிபத்திய நாடுகளுமே

தொன்மைமிக்க சீனாவை விழுங்கிக் கொண்டிருந்தன. ஆசியாவின் புதி ஏகாதிபத்தியமான ஜப்பான் தனது ஐரோப்பிய சகாக்களிடமிருந்து பாட கற்றுக்கொண்டு, அண்டை ஆசிய நாடுகளை அபகரிக்கும் விஸ்தரிப்புப் பாதையை மேற்கொண்டது.

எனினும் ஜார் சாம்ராஜ்யத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடித்து, ரஷ்யாவில் உழைப்பாளி மக்களின் முதலாவது அரசு நிறுவப்பட்டதும் ஏகாதிபத்தியவாதிகளின் கனவுகள் குலைந்தன. அந்த நாட்டுத் தொழிலாளிகளும் விவசாயிகளும் அதிகாரத்தைத் தம் கைகளில் எடுத்துக் கொண்டு, உலகின் முதலாவது தொழிலாளர்கள் அரசை நிறுவியது மட்டுமல்லாமல், ஒரு வீரஞ்செறிந்த உள்நாட்டுப்போரில் எதிர்ப்புரட்சியாளர்களையும், அவர்களுடன் சேர்ந்து ஏகாதிபத்தியத் தலையீட்டாளர்களையும் தமது நாட்டிலிருந்து விரட்டி அடிக்கவும் செய்தனர். ரஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியானது தேசவிடுதலை இயக்கங்கள் ஆரம்ப வளர்ச்சிக் கட்டங்களில் இருந்த ஆசியாவின் காலனி பிரதேசங்கள்மீது மனோதத்துவ ரீதியாக ஏற்படுத்திய பிரதிபலிப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

இதல்லாமல், ரஷ்யப் புரட்சி மற்றொரு அதிர்ச்சி அலையையும் காலனி சாம்ராஜ்யங்கள் எங்கணும் அனுப்பிற்று. ஜாரிஸ இரும்புக் காலடிகளின்கீழ் சிக்கி, பல்லாண்டுகளாகக் கண்பிதுங்கிக் கொண்டிருந்த மத்திய ஆசியாவின் எண்ணற்ற தேசிய இனங்கள் விடுதலை பெற்றதே அது. அக்டோபர் புரட்சியின் இந்த விளைவு ஆசியாவிலிருந்த இதர காலனிகளின் மக்களுக்குப் புது நம்பிக்கை அளித்தது; அவர்களது தொடக்க நிலையிலிருந்த விடுதலை இயக்கங்களுக்கு மேற்கொண்டு உத்வேகமூட்டிற்று. ரஷ்ய சமூக மாற்றத்தை வியந்து பாராட்டும் போக்கு விரைவாக வளர்ந்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை. அதேபோல், இந்த வட திசை ஐரோப்பிய–ஆசிய பெருநிலப்பரப்பின் புரட்சிகர முன்னோடிகளுக்கும் தெற்கு, தென் கிழக்கு, கிழக்கு ஆசியாவின் போராடும் மக்களுக்கும் இடையே நிலையான சோதரப் பிணைப்பு வளர்ந்ததும் இயல்பே. அன்று முதல் இது ஆசியாவின் நிகழ்ச்சிப் போக்குகளில் ஒரு ஸ்திரமான செல்வாக்கை செலுத்தி வருகிறது.

இரண்டு உலக யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் சோவியத் யூனியனில் அக்டோபர் புரட்சி ஆழ வேருன்றிற்று. எத்தனை எத்தனையோ சோதனைகளும் நெருக்கடிகளும் ஏற்பட்டபோதிலும், ஏகாதிபத்திய நாடுகள் மிகவும் பகைமைப் போக்குடன் நடந்துகொண்டபோதிலும், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமையில், சோவியத் மக்கள் அநேகமாக தன்னந்தனியாகவே பிரம்மாண்டமான சாதனைகள் புரிந்தனர்.

ஒரு பின்தங்கிய நாடு நவீன அரசாக வளர்ச்சி அடைந்து, உலகில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றது. முதலாளித்துவ உலகம் என்னதான் நச்சுப் பிரசாரம் செய்தபோதிலும், அந்த நாட்டு மக்களின் பொருளாதார, சமூக, கலாசார முன்னேற்றங்களை ஆசியாவின் இதர பகுதிகளைச் சேர்ந்த முற்போக்கு உள்ளம் படைத்த மக்களிடமிருந்து மறைக்க முடியவில்லை. சோவியத் யூனியன் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்ற முறை வெளி உலக மக்களிடை பெரும் வியப்பை கிளர்த்திவிட்டது.

இவை யாவும் உலகின் நம் பகுதியைச் சேர்ந்த, சுதந்திரத்தை நேசிக்கும் வெகுஜனங்களின் வளர்ந்து வந்த உணர்வின்மீது ஏற்படுத்திய பிரதிபலிப்பை குறைத்து மதிப்பிட முடியாது. உள் நிலைமைகள் தவிர, இந்த வெளி அம்சங்கள் இந்தியா, சீனு, பர்மா, இந்தோ-சீனு, இந்தோனேஷியா, இலங்கை, மற்றும் இதர பல நாடுகளில் தேச விடுதலை இயக்கங்களும், சமூக விமோசனம் பற்றிய கண்ணேட்டங்களும் என்றும் கண்டிராதபடி வளர்ச்சியுற ஒரு தூண்டுதலாக செயல்பட்டன. இந்த சமயத்தில், இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமாயிற்று. இந்த நாடுகள் பலவற்றில் தேச விடுதலை இயக்கங்கள் முழு வளர்ச்சி அடைந்தன. ஏகாதிபத்தியத்துடன் இறுதிப்போராட்டங்கள் துரிதமாக நெருங்கிக் கொண்டிருந்தன.

ஆனல் போட்டி ஏகாதிபத்தியங்கள் உலகை மறு பங்கு போடத் திட்டமிட்டன. அச்சு நாடுகள்—ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான்—உலகம் கண்டிராத மிகப்பெரிய யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்டன. அச்சு நாடுகளை சோவியத் யூனியன் பக்கம் திசை திருப்பிவிட்டு, தங்களைக் காப்பாற்றிக் கொள்ள பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் செய்த சூழ்ச்சிகள் தோல்வி கண்டன.

சோவியத் மக்களின் வலிமையையும் மன உறுதியையும் பழைய ஏகாதிபத்தியவாதிகள் முற்றிலும் குறைத்து மதிப்பிட்டனர். இந்தப் பல-தேசிய இன அரசின் மக்களது ஒற்றுமையை அவர்கள் சரியாக மதிப்பிடத் தவறிவிட்டனர். அவர்கள் ஜார் சாம்ராஜ்யத்துக்கும், அக்டோபர் புரட்சியின் சிருஷ்டியான புதிய சோஷலிச அரசுக்கும் இடையே இருந்த வேறுபாட்டை உணரவில்லை. குறுகிய, பிற்போக்கு நோக்கங்களுக்காக பிரிட்டனும், பிரான்சும் சோவியத் யூனியனது சமாதானக் கொள்கைகளையும், கூட்டுப் பந்தோபஸ்துக்கு அது தெரிவித்த யோசனைகளையும் நிராகரித்துவிட்டன.

இவ்வளவு பெரிய யுத்தம் மூண்டுவிட்டால், சோவியத் யூனியன் அதில் எந்த விநாடியும் இழுக்கப்படலாம் என்ற நிலை இருந்தது. இதர பிற்போக்கு வட்டாரங்களால் தூண்டப்பட்டு ஹிட்லர் செய்த சூழ்ச்சிகள்

பூரணமாக தோல்வி அடைந்தன. புரட்சி, உள்நாட்டு யுத்தம் என்னும் நெருப்பில் புடமிடப்பட்டு எழுந்த சோவியத் யூனியனை ஹிட்லராலும் மூசோலினியாலும் அசைக்க முடியவில்லை. பல்வேறு தேசிய இனங்களின் இந்தக் குடும்பம் அதாவது சோவியத் யூனியன் காட்டிய நிகரற்ற வீரத்துக்கு, செய்த அரும்பெரும் தியாகங்களுக்கு வரலாற்றில் ஈடுஇணை கிடையாது. சோவியத் மக்களைப்போல் வேறு எவரும் இவ்வளவு மாபெரும் தியாகங்கள் செய்ததில்லை. 2 கோடி உயிர்கள் பலியாயின. காட்டுத் தீயில் சகலமும் அழிவதுபோல பண்ணைகள் அழிந்தன. ஆலைகளும், பள்ளிக்கூடங்களும், வீடுகளும் தகர்த்துத் தரை மட்டமாக்கப்பட்டன. மேற்கத்திய எல்லைகளிலிருந்து லெனின் கிராடு— மாஸ்கோ — காகேசிய மலைகளைத் தொட்டுச் செல்லும் கோடுவரை ஏற்பட்ட சொல்லொண்ணு சேதங்களை, நஷ்டங்களை ஒரு புதிய சமுதாயத்தால்தான், புதிய நாகரிகத்தால்தான் தாங்கிக் கொள்ள முடியும். தாங்கள் படைத்தவற்றிடம் அந்த சமுதாயத்தின் மக்கள் அனைவரும் வைத்துள்ள நம்பிக்கையும், விசுவாசமும், பெருமிதமுமே இதற்குக் காரணம்.

அக்டோபர் புரட்சிக்கு இருபத்து எட்டு வயது மட்டுமே ஆகியிருந்த போதுதான் சோவியத் மக்கள் ஹிட்லரிசத்துக்கு இறுதி மரண அடிக் கொடுத்தனர்; அத்துடன் உலக ஏகாதிபத்தியக் கட்டமைப்பு முழுவதையும் பலவீனப்படுத்தினர். இரண்டாம் உலக யுத்தம் முடிந்த பிறகு கழிந்து போன முப்பத்திரண்டு ஆண்டுகளைத் திரும்பிப் பார்த்தால் வரலாற்றுச் சிறப்புடைய எத்தகைய அற்புதமானக் காட்சியைக் காண்கிறோம். சமூக அமைப்புகள் மாறியுள்ளன. புதிய, சுதந்திர தேசங்கள் நூற்றுக்கணக்கில் உதித்தெழுந்துள்ளன. ஐரோப்பாவிலிருந்து லத்தீன் அமெரிக்கா வரை, ஆப்பிரிக்காவிலிருந்து ஆசியாவரை உலக சக்திகளின் நிலை சமாதான, முற்போக்குச் சக்திகளுக்குச் சாதகமாக மாறியுள்ளன. ஆசியாவைப் பார்க்கும்போது, மக்களின் போராட்டங்களிலிருந்து பல சோஷலிச அரசுகள் தோன்றியுள்ளது பற்றி, புதிதாக சுதந்திரம் பெற்ற அநேக தேசங்கள் பொருளாதார, சமூக வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருவது பற்றி நாம் பெருமிதம் கொள்வது நியாயமே அல்லவா? எல்லோரும் நேர்மையான முறையில் பகிர்ந்து கொள்ளும் வகையில் நமது செல்வங்களை அபிவிருத்தி செய்ய இன்னும் எவ்வளவோ தூரம் முன்னேற வேண்டியுள்ளது என்பது உண்மையே. எனினும் இந்த இயக்க நிகழ்வைத் தடுத்திட முடியாது.

இந்த நிகழ்வுகளை இயக்கித் தூண்டியதில் மகத்தான அக்டோபர் புரட்சி ஆற்றிய செயலூக்கமான பங்கை எதார்த்த மனோபாவம் கொண்ட

நோக்கர் யாரும் மறுக்க முடியுமா ? அக்டோபர் புரட்சித் தோற்றுவித்த சோவியத் யூனியன் பல ஆசிய நாடுகளுக்கு வழங்கிய பொருளாயத, தார்மிக உதவியை நேர்மை உள்ளம் படைத்த எவரும் மறுக்க முடியுமா ?

அக்டோபர் புரட்சியின் 60 ஆம் ஆண்டுவிழா சோவியத் மக்களுக்கு மட்டுமின்றி, எல்லா சுதந்திரம் விரும்பும், முற்போக்கு, சமாதான நேய மக்களுக்கும் பெரும் களிப்பிற்குரிய விழாவாகும்.

АПН